
கோகுலம்


GOKULAM

செப்டம்பர் '89 விலை ரூ. 3/-





நண்பன்
மாயமாய்
மறையுமுன்
பிடித்திடுங்கள்
இலவசம்!
ஹாண்டிபாய் காந்தம்
ஒவ்வொரு 25-ன் பேக் உடன்
Handyplast
HTA 1549



கோகுலம்

1989 செப்டம்பர் மாத இதழ்

மலர் — 7 * இதழ் — 8

அன்புத் தம்பி, தங்கைகளே!

நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

கோகுலத்தில் நான் பொறுப்பேற்றுக் காலாண்டு போல் ஆகிறது. அதனால் உங்களை நானும் என்னை நீங்களும் ஓரளவு புரிந்து கொண்டோம் என்று சொல்லலாமா?

இன்று வரும் சிறுவர் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் வாசகர்களுக்காக அதிக வாய்ப்புக்கள் அளிப்பது கோகுலம்தான் என்று பலர் நேரிலும் கடிதத்திலும் தெரிவிக்கிறார்கள். உண்மைதானே? பிருந்தாவனத்தில் கதைகள் என்ன, கவிதைகள் என்ன, துணுக்குகள் என்ன என்று பன்னிரண்டு பக்கங்களில் உங்களைக் காற்றோட்டமாய் உலவ விட்டிருக்கிறேனே! போதாக்குறைக்கு 'சார், தபால்!' பக்கம் வேறே.

பிருந்தாவனத்துக்குத் தேர்வு செய்யும் விஷயத்தில்தான் எனக்கு ஒரு சிக்கல். அது கோகுலம் சிறுவர் சங்கம் என்ற அமைப்பினால் வந்த வினை. ரொம்பப் பேர் அந்தச் சிறுவர் சங்கத்தில் உறுப்பினராய் இருந்தால்தான் தங்கள் படைப்பு கோகுலத்தில் அச்சேற வாய்ப்புண்டு என்று கருதுகிறார்கள். முற்றிலும் தவறு.

அந்த நினைப்பை உடைக்க வேண்டும் என்றால் கோகுலம் சிறுவர் சங்க அமைப்பையே உடைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். அதாவது உறுப்பினர் எண்கள் கொடுத்து, ஒரு சிறுவர் சங்க அமைப்பு இருந்ததே, அதைச் சொல்கிறேன்.

அதனால் கோகுலம் சிறுவர் சங்கம் முழுகிப் போய் விடுமா என்ன? இல்லவே இல்லை. நான் பொறுப்பேற்ற ஆரம்ப இதழிலேயே குறிப்பிட்டேன் — கோகுலம் வாசகர்கள் அத்தனை பேருமே கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்கள்தான். அவர்களுடைய நல்ல படைப்புக்களை இருகரம் நீட்டி வரவேற்கிறேன்.

சுயமாக எழுதுங்கள்; சுவையாக எழுதுங்கள். நயம்பட எழுதுங்கள்; நலம்பெற எழுதுங்கள். எழுதுவதெல்லாம் அச்சேற வேண்டும் என்ற எண்ணத்துடன் மட்டும் எழுதாதீர்கள். உங்கள் படைப்புக்கு அந்தத் தகுதி இருந்தால் அது நிச்சயம் இடம் பெறும். நம்புங்கள்.

அன்பு அண்ணன்,

(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
— பாரதியார்.



விவாத மேடை:

பிளேடு வாங்கிட்டு வாடான்னு விரட்டுவார். அதனாலே காலையிலே படிக்கிற மூட் அவுட் ஆயிடும்... நேரமும் போயிடுது...

ரம்யா: ஆ...மா... பெரிய மூட்! வகுப்பிலே ஆசிரியர் பாடம் சொல்லித் தரும்போது மாணவர்கள் சரியாக் கவனிக்கிறதில்லேன்னு புகார் வரும்... என் சிநேகிதியோட சகோதரர்களைப் பார்த்திருக்கேன். எப்பப் பாரு விளையாட்டு. விளையாட்டு...

அதிக
வாங்குவது

+2வில் அதிக மார்க்குகள் பெற்ற ஜி. ரம்யாவும், அவரை விடக் குறைந்த மார்க்குகள் பெற்ற வி. விஜயகுமாரும் விவாதிக்கின்றனர்.

ரம்யா: இதில் என்ன சந்தேகம்? நிறைய மார்க்குகள் வாங்குவது பெண்கள்தான். இந்த வருட ரிஸல்ட்டுகளிலேயும் இப்படித்தான் என்று பேப்பர்களில் கூடப் போட்டிருந்தார்களே...?

விஜயகுமார்: அது சரி. ஆனால் மாணவர்களுக்குச் சில கஷ்டங்கள் இருக்கு. அதனால் அதிக மார்க்குகள் வாங்க முடிவதில்லை.

ரம்யா: என்ன பெரிய கஷ்டம்... ம்...?

விஜயகுமார்: காலையிலே படிக்க உட்காருகிற சமயத்திலேதான், அம்மா கடைக்குப் போய்க் காய் கறி வாங்கி வான்னு சொல் வாங்க, இல்லேன்னா, அப்பா

விஜயகுமார்: ச்சூ... வகுப்பிலே சரியாக் கவனிக்கிறதில்லேன்னு சொல்றே! சில சமயம் ஆசிரியர்களே சரியாப் பாடம் சொல்லித் தர்றதில்லே. 'விளையாட்டு'ன்னு சொல்லிப் பழி போடாதீங்க. எப்பப் பார்த்தாலும் படிப்பு படிப்புன்னு வீட்லே ரூம்லே மூலையிலே உட்கார்ந்துக்கிட்டு, மனசு முழுக்க நண்பர்கள் ஆடும் விளையாட்டைப் பத்தி நெனைச்சுக்கிட்டேயிருந்தால், படிப்பு என்ன ஏறும்?

ரம்யா: சும்மா வளவளன்னு படிச்சுக்கிட்டிருந்தால் எப்படி? பரீட்சையிலே மார்க்கு வாங்கறதுதான் லட்சியம்னு படிக்கணும்.

விஜயகுமார்: நோ... நோ... நமக்கு நிஜமாகவே 'அறிவு வேணும்'னுதான் படிக்கணும். மார்க்கு மார்க்கு... என்று புலம்பிக் கொண்டிருந்தால் நாலெட்ஜ் இம்ப்ரூவ் ஆகவே ஆகாது...

ரம்யா: நீ சொல்றது ஒருவிதத்திலே

சரி. ஆனால், பரீட்சையிலே நிறைய மார்க்கு வாங்கறதுதானே முக்கியம்? அதுதானே அடுத்த படிப்புக்கோ, வேலைக்கோ அடிப்படை?

விஜயகுமார்: அதுக்குத்தான் நான், பரீட்சை சமயத்துலே மட்டும் குறிப்பா சில பாடங்களை மட்டும் தீவிரமாப் படிச்சுடறேன்.

ரம்யா: அதுலே ஒரு ரிஸ்க் இருக்கே. நீ படிச்ச பாடங்களிலேர்ந்து பரீட்சையிலே கேள்விகள் வராவிட்டால், அம்பேல்தான்! பரீட்சை

மதிப்பெண்கள் எப்படி?



ஹாலிலே திருதிருன்னு முழிக்க வேண்டி வருமே! அதனாலே எல்லாப் பாடங்களையும் நல்லாப் படிச்சு வைச்சுக்கிட்டா, எந்தக் கேள்வி வந்தாலும் டக்கரா பதில் எழுதலாம்... ம். சரி. நீ நிறைய நேரம் டீ. வி. நிகழ்ச்சிகளைப் பார்ப்பியா?

விஜயகுமார்: அஃப்கோர்ஸ். நிறையப் பார்ப்பேன். அனேகமா தொலைக்காட்சி நிலையம் 'வணக்கம்' சொல்ற வரை பார்ப்பேன். அப்புறமா நள்ளிரவு தாண்டிக் கூடப் படிப்பேன்.

ரம்யா: ஓ! தட்ஸ் டூ பேட்... டீ. வி. நிகழ்ச்சிகளிலே தேர்ந்து எடுத்துப் பார்க்கலாம். தவிர, நள்ளிரவு தாண்டியெல்லாம் படிக்கிறதுனால ஹெல்த் ப்ராப்ளம்ஸ் வரும். மறுநாள் காலையிலே லேட்டா எழுந்துக்கணும். ரொம்பக் களைப்பா இருக்குமே! ராத்திரியிலே படிக்கிறதோட சரியா? கட்டுரைகளை, கணக்குகளை எழுதிப் பார்ப்பியா?

விஜயகுமார்: ஸயன்ஸ் பாடங்கள் என்றால் படங்களை வரைந்து பார்ப்பேன்.

ரம்யா: அதுமட்டும் போதாது! நாம் பரீட்சையிலே எழுதித்தான் மார்க்கு வாங்குகிறோம். அதுவும் குறிப்பிட்ட இரண்டு அல்லது இரண்டரை மணி நேரத்திலே எழுதி முடிக்கணும் இல்லையா? அதுக்கு பெஸ்ட் மெதேட் வீட்டிலேயே, நாம படிச்சதை எழுதிப் பார்ப்பதுதான் — அதுவும் கடிகாரத்தை வைத்துக் கொண்டு! எழுதற வேகத்தை அதிகரிக்க இது உதவும்.

விஜயகுமார்: உன் சிநேகிதிகளுடன் சேர்ந்து படிப்பியா? அதாவது க்ரூப் ஸ்டடி உண்டா?

ரம்யா: ஓ! ஷ்யூர். அந்த மாதிரிப் படிப்பதில் நிறையச் சௌகரியங்கள் இருக்கு. சந்தேகங்கள் வந்தால், சிநேகிதிகளிடம் தைரியமாக் கேட்டு விளக்கம், தெளிவு பெறலாம். நமக்குத் தெரிஞ்சதை,

ஒரு முறை என் மாமனை அவர் தந்தை அரக்கு வாங்கிவர அனுப்பினார். மாமா எந்தக் கடையில் அரக்குக் கிடைக்கும் என்பதையறியாமல், ஒரு பெட்டிக்கடைக்குச் சென்று அரக்கு இருக்கா என்பதை வேகமாக 'அரக்கிருக்கா?' என்று கேட்டாராம். கடையில் இருந்த மனிதர் தம்மை 'அரைக்கிறுக்கா' என்று இட்டுவதாக எண்ணி, 'நான் அரைக்கிறுக்கு என்றால் நீ முழுக்கிறுக்கு' என்று இட்டி அனுப்பினாராம். அதை என் மாமா சொல்ல, எங்கள் வீட்டில் எல்லோரும் வயிறு வலிக்கச் சிரித்தோம்.

— வெ. சுப்பிரமணியன்.

புரிஞ்சதை மற்றவங்களுக்குச் சொல்லித் தரும் போது நமக்குப் பாடங்கள் நன்றாக மனசிலே பதிந்து விடும்.

விஜயகுமார்: கேட்க நல்லாத்தான் இருக்கு. எங்க நண்பர்கள் வந்தால், அரட்டைதான்!

ரம்யா: டீ. வி. பார்க்கிறதை விட மோசம் இந்த வெட்டிப் பேச்சுப் பேசறது! டைம் வேஸ்ட் பண்ணிட்டா, பிறகு கிடைக்காதே!

விஜயகுமார்: அப்படி ஒரே அடியா சொல்லாதே... அரட்டையடிச்சா மட்டும் பொது அறிவு விஷயங்களைப் பற்றிப் பேசலையா?

ரம்யா: அதுசரி... பரீட்சையிலே மார்க்கு வாங்க அது உதவுமா? போகட்டும் விடு... உனக்கு ஏதாவது ஸ்பெஷல் கிளாஸ், கோச்சிங் உண்டா?

விஜயகுமார்: ஊஹ்ம்... அதெல்லாம் கிடையாது. ஏன்; உனக்கு உண்டா? அதனால்தான் நீ அதிக மார்க் வாங்கினாயா?

ரம்யா: நோ. நோ. அதெல்லாம் இல்லே. நான் அதிக மார்க் வாங்க எனக்கு ஸ்கூல்லேயும் சரி, வீட்டிலேயும் சரி, நல்ல ஒத்துழைப்புக் கிடைச்சுது. அதாவது பள்ளியிலே ஆசிரியர்கள் சந்தேகங்களைப் போக்குவாங்க. வீட்டிலே நான் படிக்கும்போது, அங்கே போ, இந்த வேலை செய்ன்னு டிஸ்டர்ப் பண்ண மாட்டாங்க.

விஜயகுமார்: முன்பே சொன்னபடி சினேகிதிகளோட சேர்ந்த படிப்பு வேறே!

ரம்யா: கரெக்ட்! இது தவிர, நான் ஸ்கூலுக்கு மட்டமே போட்டதில்லே. வகுப்பிலே நடத்தற பாடங்களை அன்றைய இரவே படித்து விடுவேன்.

விஜயகுமார்: இப்பத்தான் உன் வெற்றியின் ரகசியம் புரிகிறது.

ரம்யா: ரகசியம் என்ன? டிப்ஸ் மாதிரி வைத்துக் கொள்ளேன். பள்ளியிலே உள்ள லைப்ரரி புத்தகங்களையும் படிப்பேன். முக்கியமான கணக்குப் பாடங்களுக்கு, வெளியிலேயிருந்து கணக்குப் புத்தகங்களை வாங்கி, போட்டுப் பழக்





இக் கொண்டேன். அதனாலேயே இருநூறுக்கு 194 வாங்க முடிஞ்சுது.

விஜயகுமார்: பலே! பலே! நான் கூடச் சும்மா வெட்டிப் பேச்சு, அரட்டை, ஊர் சுத்தறது, டி. வி. பார்க்கிறது — இவையெல்லாம் குறைச்சிட்டிருந்தால், நிறைய மார்க் வாங்கியிருக்கலாமோ?

ரம்யா: நிச்சயமா! அதுவும் தவிர விளையாட்டிலே நேரம் ம்ட்டுமல்ல, நம்மோட சக்தியை அதிகமாப் பயன்படுத்தி, களைப்பு அதிகமாயிடுது. அதனாலே படிக்க உட்காரும் போதே தூக்கம் வந்துடுது...!

விஜயகுமார்: மற்றப் பள்ளி மாணவிகளிடமும் பேசி, விவாதிக்கிறது உண்டா?

ரம்யா: ஓ எஸ்! அதுலே என்ன சௌகரியம் என்றால், அந்தப் பள்ளிகளில் சொல்லித் தருகிற முறைகளையும் நாம் தெரிஞ்சுக்கலாம்! மொத்தத்திலே தினமும் காலையிலே இரண்டு மணி நேரம், இரவு இரண்டு மணி நேரம்னு படித்துக் கொண்டு வந்தால், மார்க் வராமலா போகும்? கடின உழைப்புக்கு மிஞ்சி எதுவுமேயில்லை. நிறைய மார்க் வாங்கியே தீரணும்னு லட்சியத்தோட, வருஷ ஆரம்பத்திலிருந்தே படிக்க ஆரம்பித்து, பள்ளியிலே வைக்கிற எல்லா டெஸ்ட்களிலும் தீவிரமா எழுதினால், பலன் நிச்சயமா இருக்கும்! சில பாடங்களை நெட்டுருப் போட்டுடணும் என்றால், அப்படிச் செய்வதே மேல்! மேலும் 'நோட்ஸ்' (கடைகளில் விற்பது) கைடு என்பதுகூட ஓரளவுக்கு உதவும்...



விஜயகுமார்: தேங்க்யூ ரம்யா... உன்னோட உரையாடலிலிருந்து பல பேருக்கு நிறைய டிப்ஸ் கிடைச்சிருக்கு... வர்ற வருஷம் மாணவர்கள் அதிக மார்க் வாங்க உதவும்...

ரம்யா: வரட்டுமே! போட்டியிருந்தால்தான் குஷி!

ஏற்பாடு, தொகுப்பு: 'பிரகலாதன்'

படங்கள்: பிரபுசங்கர்.

பாரதி



வடக்கில் இமயமலை பாப்பா!

ஆசியாக் கண்டத்தில் தெற்கில் மூன்று தீபகற்பங்கள். மேற்கில் அரேபியா. கிழக்கில் இந்தோசீனா. நடுவில் உள்ளதுதான் நமது பாரதம். இந்நாட்டின் வடக்கில் இமயமலைத் தொடர். தெற்கில் இந்தியப் பெருங் கடல். கிழக்கில் வங்காள விரிகுடா. மேற்கில் அரபிக்கடல். இவைதான் பாரதத்தின் எல்லைகள். இந்த மூன்று கடல்கள் கூடுமிடம்தான் கன்னியாகுமரி. அதுதான் நமது தெற்கு எல்லை. அதைக் குமரிமுனை என்போம். இதைப் பாரதி எளிமையாக,

'வடக்கில் இமயமலை பாப்பா — தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா!
கிடக்கும் பெரியகடல் கண்டாய் — அதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா!'

என்கிறார்.

இதை ஒரு தடவை படித்தால் போதும். இளம் சிறுவர்களின் பிஞ்சு நெஞ்சத்தில், பசுமரத்தாணி போல் ஆழமாகப் பதிந்துவிடும்.

பாரதியின் முழுப் பெயர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். பிறப்பு 1882 டிசம்பர் 11. மறைவு 1921 செப்டம்பர் 11. இது அவரது நினைவு மாதம்.

பாரதி ஒரு வர கவி. புதுமைகள் படைத்த புரட்சிக் கவிஞர்.

பாரத பூமி பழம்பெரும் பூமி!

இந்திய நாடு பழைமையானது. அதன் பண்பாடும் கலாசாரமும் உயர்வானவை. அத்துடன் பாரம்பரியப் பெருமை மிக்கது. இத்தகைய நாட்டில் பிறந்ததே நாம் பெற்ற பெரும்பேறு. இதை நாம் மறந்துவிடக் கூடாது.

போற்றும் பாரதநாடு

இமயமலை புனிதமானது. புவியில் அதைப் போன்ற ஒன்று, வேறு எதுவும் இல்லை. அதில் பல புனித நதிகள் உற்பத்தியாகின்றன. சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா ஆகிய நதிகள் சிறப்பானவை. சிந்து நதி பாயும் பூமி இது. எனவே, 'இந்தியா' எனப் படுகிறது. இந்தியாவில் பிறந்துள்ளதால் நாம் இந்தியர்கள் எனப்படுகிறோம்.

நமது வாழ்க்கை நெறிமுறைகள் மிகவும் உயர்வானவை. அவை வேதங்களை அடிப்படையாகக் கொண்டவை. வேதங்கள் நான்கு. அவை: ரிக், யஜுர், சாம அதர்வண வேதங்கள். இதைப் பாரதி, 'வேதம் உடைய திந்த நாடு' என்கிறார். இந்தியாவின் உயர்வுக்கு இது ஒன்று போதும்.

இவ்வுலகில் அன்பு, அகிம்சை போன்ற அறநெறிகளைப் பரப்புவதற்கு என்றே தோன்றிய மகான்கள் பலர். முக்கியமானவர் மூவர். அவர்கள் புத்தர், இயேசு மற்றும் காந்தி ஆவர். அவர்களில் புத்தரும் காந்தியும் நம் நாட்டில் தமது அருளைப் பரப்பினார்கள். இதைக் குறிப்பிடும் பாரதி, 'புத்தபிரானருள் பொங்கிய நாடு' என்கிறார்.

இப்படி, இந்தப் புண்ணிய பாரதத்தின் சிறப்புகள் இன்னும் பல.

"ஞானத்திலே பரமோனத்திலே — உயர்
மானத்திலே அன்ன தானத்திலே...
கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதையிலே உயர் நாடு...!"

என்றும்,

"யாகத்திலே தவ வேகத்திலே — தனி
யோகத்திலே பல போகத்திலே...
ஆகத்திலே தெய்வபக்தி கொண்டார் தம்
அருளினிலே உயர் நாடு!"

என்றும், பாருக்குள்ளே நல்ல நாடாகிய நமது பாரத நாட்டைப் போற்றிப் பாடுகிறார், பாரதி!

பேதம் இல்லாத இந்துஸ்தானம்

இந்தியா ஒரு பரந்த நாடு. இதில் 25 மாநிலங்கள் உள்ளன. அவை தவிரச் சில நேரடி ஆட்சிப் பிரதேசங்களும் உண்டு. இங்கெல்லாம் இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்துவர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், ஜைனர்கள் என்று பல மதத்தினர் வாழ்கின்றனர்., இந்த ஒவ்வொரு மதத்திலும் பல ஜாதிப் பிரிவுகள் உள்ளன. அவர்களின் பழக்கவழக்கங்கள், சாஸ்திர சம்பிரதாயங்கள் சடங்குகள் எல்லாமும் வேறுபட்டவை. நடையுடை பாவனைகளும் வெவ்வேறானவை. பேசும் மொழிகளும் பலப் பல! இருந்தாலும், நாம் பிறந்து வளர்ந்து வாழ்வது 'இந்தியா' என் ஒரே நாட்டில்தான். எனவே, பிறப்பால் நாம் அனைவரும் இந்தியர்கள். அத்தனை வேறுபாடுகளையும் மறந்து நாம் ஒற்றுமையாக வாழ்கிறோம்.

"முப்பதுகோடி முகம் உடையாள் — உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள் — இவள்
செப்பு மொழி பதினெட்டுடையாள் எனில்
சிந்தனை ஒன்றுடையாள்!"

— இது பாரதத் தாயின் தனிச் சிறப்பு. அதாவது 'வேற்றுமையில் ஒற்றுமை' காணல் — 'Unity in Diversity' நம்மை ஒற்றுமைப்படுத்தும் பல வழிமுறைகள், பண்டைக்காலம் முதற் கொண்டே இங்கு அமைந்துள்ளன. தென் பகுதியினர் வடக்கிற்குக் காசி

ஞானமணாளன்

யாத்திரை போகிறார்கள். வடக்கில் உள்ளவர்கள் தெற்கே ராமேஸ்வரம் வருகிறார்கள். 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை வடக்கில் மகா கும்ப மேளா! தெற்கில் கும்பகோணம் மகாமகப் பெருவிழா! அப்போது பாரத மக்கள் அங்கு கூடி வேற்றுமை யின்றிப் பழகுகிறார்கள். இவை தவிர, தீபாவளி, கார்த்திகை, தசரா போன்ற இந்தியா முழுவதுக்கும் பொதுவான பண்டிகைகள் வேறு! இந்த 'வேற்றுமையில் ஒற்றுமை' காணும் கருத்தைப் பாரதி ஓர் எளிய கதை மூலம் விளக்குகிறார்.

"வெள்ளை நிறத்தொரு பூனை — எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்..."

எனத் தொடங்கி, அப்பூனைக் குட்டி ஈன்றது; அவை ஒவ்வொன்றும் ஒவ் வொரு நிறம்; இருந்தாலும், அவை எல்லாவற்றையும் ஈன்றது ஒரே தாய்ப் பூனைதானே? எனவே, இந்த நிறக் குட்டி உயர்ந்தது என்றோ, இது தாழ்ந் தது என்றோ, எவரும் கூறுவதில்லை. பிறப்பால் அவை எல்லாம் சமம்.

"எந்த நிறம் இருந்தாலும் — அவை
யாவும் ஒரேதரம் அன்றோ...?
இந்த நிறம் சிறிதென்றும், இது
ஏற்றம் என்றும் சொல்லல் ஆமோ...?"

அதேபோல்தான், பாரத நாட்டு மக்க



ளும் என்கிறார் பாரதி!

சாதிகள் இல்லையடி பாப்பா

இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு. அதற்கு வழி காட்டிய முதல் மனிதர் பாரதிதான். அதற்கு ஆதாரம் இதோ:

"ஜாதி மதங்களைப் பாரோம் — உயர்
ஜன்மம் இத்தேசத்தில் எய்தினராயின்
வேதியர் ஆயினும் ஒன்றே — அன்றி
வேறு குலத்தினர் ஆயினும் ஒன்றே..."

இந்நாட்டில் பிறந்த 'எல்லாரும் ஒரே குலம்; எல்லாரும் ஒரே இனம் என்று சமத்துவம் பேசுகிறார். மேலும் சிறுவர்களைப் பார்த்து, உயர்வு தாழ்வு பார்ப்பது மிகவும் என்புதை.

"ஜாதிகள் இல்லையடி பாப்பா! — குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்..."


எனக் கூறிச் சமத்துவத்தை வலியு றுத்துகிறார். அப்படியானால், ஐந்து விரல்களும் ஒன்றாகிவிட முடியுமா? இதற்குப் பதில் கூறும் பாரதி, — 'சாதி இரண்டு ஒழிய வேறில்லை' என்ற ஔவையின் கூற்றை உதா ரணம் காட்டிப் பேசுகிறார். ஔவை கூறும் இரு ஜாதிகள் எவை? 'இட் டார் பெரியோர், இடாதோர் இழி குலத்தோர்...' — இது ஔவையின் ஜாதிப் பாகுபாடு! 'இடுவது' என்பது இல்லாதவர்களுக்குப் பிச்சை இடுவதைக் குறிக்கும். அதைக் குறிப் பிடும் பாரதி, 'தமிழ் மகள் சொல் லிய சொல் அமிழ்தம்!' என ஏற்றுக் கொண்டு, தனது கருத்தை இவ்வாறு கூறுகிறார்.

"நீதி நெறியில் நின்று பிறர்க்குதவும்
நேர்மையர் மேலவர், கீழவர் மற்றோர்!"

— இவ்வரிகள் மூலம், ஔவையின் ஜாதிப் பாகுபாட்டிலிருந்து மாறு படுகிறார் பாரதி!

அவரது கருத்துப்படி, இடுவது என்பது இன்னும் பரந்த நோக்கில் பொருள்படுகிறது. நீதி நெறி தவ றாமல் நின்று, நேர்மையோடு பிறர்க்குச் செய்யும் எல்லா வகை யான உதவிகளையும் குறிப்பிடுகிறது.

உயர்வு தாழ்வு பற்றிப் பாரதி, வேறு விதமாகவும் பாகுபாடு செய்துள்



ளார். அது கல்வி, நீதி, மற்றும் அன்பை அடிப்படையாகக் கொண்டது.

கற்றவர் மேலோர்; மற்றவர் கீழோர். நீதி தவறாது நடப்பவர் மேலோர்; மற்றவர் கீழோர். பிறரிடம் அன்பு செலுத்துபவர் மேலோர்; மற்றவர் கீழோர்.

> "நீதி, உயர்ந்தமதி, கல்வி — அன்பு
> நிறைய உடையவர்கள் மேலோர்!"

என்று இலக்கணம் வகுத்த பாரதி, தங்களிடம் மனிதர்களைப் பார்த்து, தனது ஆத்திரத்தை இவ்வாறு வெளிப் படுத்துகிறார்.

> "சாதிச் சண்டை போச்சோ...? — உங்கள்
> சமயச் சண்டை போச்சோ...?
> நீதி சொல்ல வந்தால்! கண்முன்
> நிற்கொணாது போடா..."

ஜாதியை ஒழிக்க வேண்டும் என்பதில் பாரதிக்கு இருந்த துடிப்பும், ஆர்வமும் இவ்வரிகள் மூலம் வெளிப் படுகின்றன.

> "சாதிக் கொடுமைகள் வேண்டாம் — அன்பு
> தன்னில் உயர்ந்திடும் வையம்!"

என்று உரைத்து, வருங்காலத்தில்,

> "...ஜாதியில்,
> இழிவு கொண்ட மனிதர் என்பது
> இந்தியாவில் இல்லையே!"

எனக் கூறிப் பூரித்துப் புளகாங்கிதம் அடைகிறார்.

இனியொரு விதி செய்வோம்!

"ஒப்பில்லாத இந்தியச் சமுதாயம், உலகத்துக்கு ஒரு புதுமை' என்கிறார் பாரதி! அதற்குக் காரணம் யாது? அவரே அளிக்கும் பதில் இது. இந்த நாடும், இங்கு வாழும்...

> "முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
> முழுமைக்கும் பொதுவுடைமை..."

அதுமட்டுமன்று... இந்த நாட்டில், "ஏழையென்றும்அடிமையென்றும் எவரும் இல்லை..." ஆகவே, இது

அட்டை வண்ணப்படம்: யோகா

ஒப்பில்லாத சமுதாயம் என்பது பாரதியின் கருத்து.

"முப்பது கோடியும் வாழ்வோம் — வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்"

என்று பொதுவுடமை பேசுகிறார்.

"இன்பங்கள் யாவும் பெருகும் — இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்..."

கூறும், பாரதி,

"இடம் பெரிது உண்டு வையத்தில் — இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்கிறீர்...?"

என வினவுகிறார்.

நெஞ்சு பொறுக்குதில்லையே!

பாரதி, இந்த நாட்டின் மீதும் மக்களிடமும் மிகுந்த பற்றுக் கொண்டவர். அந்த அன்பின் மிகுதியால், அவர்களிடம் காணும் குறைநிறைகளை வெளிப்படையாக அலசுகிறார். குமுறுகிறது அவர் நெஞ்சம்.

"நெஞ்சு பொறுக்குதில்லையே — இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால்..."

எனத் தொடங்கி, அவர்கள் எதைப் பார்த்தாலும் பயப்படுவார்கள்; அங்கே பேய், இங்கே பிசாசு என யாரும் சொன்னால் போதும்! அப்பக்கம் போகார்; மந்திரவாதி என்பார்கள்; அவரது மந்திரத்தில் கிலி அடைவார்கள்; யந்திர சூனியங்களைக் கண்டு நடுங்குவர். மக்களது வரிப்பணத்தைக் கொண்டு நடத்தப்படும் அரசியலைக் கண்டு, மக்களே நடுங்குகிறார்கள்; சிப்பாய்களைக் கண்டால் போதும். நடுக்கம் தான். தூரத்தில் ஒருவன் துப்பாக்கியுடன் வந்தால் போதும்; வீட்டினுள் ஓடி ஒளிவார்கள். சாலையோடு ஒருவன் நல்ல உடையணிந்து சென்றால், உடனே எழுந்து நின்று கைகட்டி வாய் பொத்திப் பூனைபோல் கூனிக் குறுகுவார்கள். சூதாக நடப்பவனிடம் பணிந்து போவார்கள். சைவ — வைணவச் சண்டைகள் புரிவார்கள். குடிக்கக் கஞ்சி கிடைக்காத காரணத்தை அறிய முயலாமல், 'பசி, பட்டினி, பஞ்சம்' எனப் பரிதவிப்பார்கள்.

இப்படியெல்லாம் கூறும் பாரதி, 'இவர்களது துயரங்களைத் தீர்க்க ஒரு வழி இல்லையே என ஏங்குகிறார்.

இவர்களிடம் உள்ள நோய்கள் ஏராளம். எழுந்து நடக்கவும் வலிமை கிடையாது. கண்ணில்லாத குழந்தைகள் போல் பிறர் காட்டிய வழியில் சென்று மாட்டிக் கொள்வார்கள்.

"புண்ணிய நாட்டினிலே — இவர்
பொறியற்ற விலங்குகள் போல் வாழும்..."
— இந்த
நிலைகெட்ட மனிதரை
நினைந்துவிட்டால் — என்
நெஞ்சு பொறுக்குதில்லையே..."

இப்படியெல்லாம், மதிகெட்டு வீணாகும் இவர்கள் திருந்த வழி இல்லையா? இப்படிக் கேட்டு மனம் குமுறி, அவர் பாடியுள்ள பாடல்கள், இந்நாட்டு மக்களிடம், அந்தக் கவிஞன் கொண்டிருந்த மதிப்பையும் அன்பையும் வெளிப்படுத்துகின்றன.

பாரதியின் மனத்தில் ஏற்பட்ட அந்தத் தேசிய உணர்வு, இந்த நாட்டில் வாழும் அனைவர் மனத்திலும் ஏற்பட வேண்டும். உயிர்களிடத்தில் அன்பு கொண்டு, தெய்வம் உண்டு என்று நம்ப, வைரம் உடைய நெஞ்சோடு, வாழும் முறைமையை, ஒவ்வோர் இந்தியனும் கற்க வேண்டும். இக்கருத்துள்ள பாடல் இதோ:

"உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்;
வயிரம் உடைய நெஞ்சு வேணும் — இது
வாழும் முறைமையடி பாப்பா!"

— இவ்வாறு ஒவ்வோர் இந்தியனும் வாழ்ந்தால், வாழ்க்கை செம்மையுறும். அத்துடன், இந்திய நாட்டைப் பெற்ற தாயென்று கும்பிட்டு வாழ வேண்டும். அப்போது நாட்டுப் பற்று ஏற்படும். அது தேசியத்தை வளர்க்கும். எனவே நாம் பாரதியை — அவரது பாடல்களை நமது நெஞ்சில் நிறுத்த வேண்டும்.

சார் தபால்!

'சுதந்திர தின மலர்' தான்!

கிடைக்காத அரிய புகைப் படத்துடன் 'ஆகஸ்ட் புரட்சி' பற்றிய கட்டுரையை வெளியிட்டது ஆகஸ்ட் புரட்சி பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிந்தது. 'நேதாஜி கூவிய ஏலம்', 'திப்புவின் வாள் தப்ப விடுமா?' போன்ற கட்டுரைகளும், கவிதைகளும் சுதந்திர தினத்தை நினைவூட்டுவதாக அமைந்து இருந்தன. ஆகஸ்ட் இதழை 'சுதந்திர தின மலர்' என்று சொன்னால் வியப்பில்லை.

ஊத்தங்கரை, பி. கோவிந்தசாமி.

* 'கோகுலம்' படிக்கும்போதெல்லாம் நாங்களும் குழந்தைகளாகும் அதிசயம், ஏன் என்று எங்களுக்கே தெரியவில்லை!

கடலூர் — 1, எம். ரவிச்சந்திரன்.

* சத்திய அரிச்சந்திரனின் கதையை இவ்வளவு அழகாக பதினாறு பக்கத்தில் வண்ணத்தில் கூற முடியுமா? ரியலி சூப்பர்.

புதுக்கோட்டை, கே. சின்னையா.

* 'மண்ணாங்கட்டியா திருடினான்?' என்ற கதையில் வரும் மண்ணாங்கட்டி மற்றும் அவன் தாயின் பாத்திரங்கள் என் மனதை உருக்கி விட்டன. ஆசிரியரின் நிலை தான் என்னை மேலும் வருத்தியது.

ஏம்பலம், சி. இராஜகோபாலன்.

* 'உயிர்களிடத்து அன்பு வேணும்' என்னும் சிறுகதை சிறு உயிர்களாகிய வாயில்லா ஜீவன்களிடம் அன்பு காட்டாத மாலதி போன்ற சிறுமிகளுக்குப் பாடமாகும்.

புன்செய்புளியம்பட்டி, பி. எல். கிரிஜா.

* துணுக்கு, கதைகள், பிட்டுகள், பிருந்தாவனக் கவியரங்கம் இது ஒரு மலைத்தேன்! சர்க்கரைப் பாகு! தெவிட்டாத பலா!

மொரப்பூர், எம். வீரமணிகண்டன்.

* 'உங்கள் நூலகம்' — அருமையான, எப்பொழுதோ ஆரம்பித்திருக்க வேண்டிய பயனுள்ள பகுதி தேசபந்து சார்! உங்கள் கைகளில் 'கோகுலம்' கோபுரக் கலசமாய் மின்னுகிறது!

செட்டிக்குறிச்சி, அ. சுப்பையன்.

* ப. மரிய ஆரோக்கியத்தின் 'திப்புவின் வாள் தப்ப விடுமா?' படித்தவுடன் அந்த வரலாற்று வீரரின் வீரம் மெய்சிலிர்க்க வைத்தது. உயிர் போகும் நிலையிலும் கடைசி வரை போராடிய திப்புவை நினைக்கையில் கண்கள் பனித்தன.

இடையகோட்டை, அல். அமீன் ஃபாரூக்.

* மாணவர்களின் பட்டிமன்றம் மிக அருமை. உத்தியோகமோ, சொந்தத் தொழிலோ — ஏதாவது ஒரு கைத்தொழிலைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை உறைக்கும்படி உணர்த்தியுள்ளனர்.

மொரப்பூர், ச. உமர்கான்.

* 'படிப்புச் சூடுபிடிக்கும் இந்த நேரத்தில் உங்கள் துடிப்பும் சூடுபிடிக்க வேண்டும். எழு தம்பி எழு!' என்று தாங்கள் கூறிய அறிவுரை எங்களுக்குத் தக்க சமயத்தில் ஒரு நோயாளிக்குத் தேனில் குழைத்து தரப்பட்ட மருந்து போல இருந்தது.

வந்தவாசி, சா. இரா. மணி.

* அன்பும், துடிப்புமிக்க உங்களின் அட்வைஸ் தம்பி, தங்கைகளுக்கு மட்டுமல்ல பெரியவர்களுக்கும் 'டானிக்!' ஆசிரியருக்கு நன்றி...!


திருவிடைமருதூர், எஸ். நாதன்பாபு.

* இம்மாத கோகுலம் சிறப்பாக இருந்தது. திகட்டாத சுவை கொண்ட கதைகள், துணுக்குகள், அருமை பிருந்தாவனக் கவியரங்கம் ஆகியவற்றைத் தந்து குழந்தைகளுக்கு அதிக முக்கியத்துவம் தருவது கோகுலம் ஒன்றே!


மொரப்பூர், என். முரளி.

* காலண்டர் பையன் கட்டுரையின் இறுதியில், பேட்டி ஜி. வேதா, படங்கள் முத்து லட்சுமி என்பதற்குப் பதிலாக, மாறி வந்துள்ளது.


சென்னை — 44, (பேட்டி கண்ட) ஜி. வேதா.


என்னாங்க சின்னப்பிள்ளை மாதிரி, கழித்தல் கணக்கு..?
வாழ்க்கைக் கணக்கு. இந்த மைனஸை ப்ளஸ் ஆக்குறது எப்படி?
இது சாதாரணக் கணக்கில்லை..
எட்டுக்கு எட்டு
4
இதுக்கே ஒரு கோடு போட்டாப் போச்சு!
யாரு போடப் போறாங்க?
அப்போது—
நான் போடறேன் அங்கிள்!
கதை: தேசபந்து
படம்: சிஜெ...


ஹலோ ரஞ்சித்! எப்போ வந்தே?
ஜஸ்ட் நௌ! சௌக்கியமா ஆன்ட்டி?
க்ரைம் ப்ராஞ்சுக்கு ஒரு சுறு சுறுப்பான அஸிஸ்டென்ட் தேவைன்னு கேட்டிருந்தேன்...
நான் தகுதி இல்லையா, அங்கிள்?
உன் சுறு சுறுப்பை நீ இன்னும் ப்ரூவ் பண்ணலியே!
வெய்ட் எ மினிட்...
போதுமா அங்கிள்?
ஒகேனக்கல் அருவி 8-2=6
காவேரிக் கரை 8-3=5
மேட்டூர் அணை 8-4=4


வெல் டின்ஸ் பெக்டர் ரஞ்சித். என் வாழ்த் துக்கள்!
தேங்க்ஸ் அங்க்கிள். நான் முதன் முதல்ல எடுத் துக்கப்போற மேஜர் இன்வெஸ்டிகேஷன் இதுதான்.
உன் வெற்றியிலே எனக்கு நம்பிக்கை இருக்கு. பட்...
எஸ்.. எதிர் அசகாய சூரன். அதுக்கு ஈடு கொடுக்கணும்!
அந்தக் கிரிமினலின் மோடிவ் தெரிய ணும்..
எஸ் அங்க்கிள்..ஸாரி! எஸ் ஸார்! இந்த வட்டா ரத்திலே அனுபவம் உள்ள அஸிஸ்டெண்ட் எனக் குத் தேவை.
சரிதான், ரஞ்சித் வந்ததும் வாராததுமா இங்கேயே ஆபீஸ் நடத்தறதா? சாப்பிட வாங்க.


அலுவலகத்தில் ரஞ்சித் உத்தியோகம் ஏற்றுக் கொண்ட பிறகு கமிஷனர் வீட்டில் –
ஹெட் கான்ஸ்டபிள் கன்னையா... பிறந்ததிலிருந்து உத்தியோக அனுபவம் வரை ரெகார்டுகளில் தான்.
எஸ் ஸார்!
கன்னையா, நாம நாளைக்கே காம்ப் போறோம்.
அவன் கொஞ்சம் டல் ஹெட்.. ஆனா ஞாபக சக்தி அதிகம்.
'கைடன்ஸ்' கொடுத்து சரிப்படுத்திக்கறேன் சார்!
ரஞ்சித்.... மறுபடியும் ஒரு மைனஸ்..
ஸோ... எட்டு மைனஸ் ஆச்சு! லெட்டர் எங்கே போஸ்ட் ஆகியிருக்கு?



தமிழுக்குப் பெருமை — தமிழ்முடி.

பெருஞ்சித்திரனாரை அவமதிப்பது போல் அற்பமான பொருளைப் பிச்சையிடுவது போல் தந்தான் இளவெளிமான் என்ற அரசன். அதைத் தூக்கியெறிந்துவிட்டு அந்த அரசனைப் பழிவாங்கினார். எப்படி? குமணனைப் பாடிப் பெற்ற யானையுடன் பொன்னையும் பொருளையும் அந்த அரசனின் காவல் மரத்திலே கட்டிப் போட்டு, அவையெல்லாம் அந்த அரசனுக்குத் தாம் தந்த பரிசில் என்று பாட்டெழுதி அனுப்பினார், புலவர்.

எப்படி இருக்கிறது தமிழின் பெருமை? இப்படிப் பெருமை மிக்க பழம் பாடல்கள் (நடுவிலே கவிமணி தேசிக் விநாயகம் பிள்ளையின் பாடலும் ஒன்று உண்டு) ஆறு எடுத்துக் கவி விளக்கத்தைக் கதை வடிவில் நயம்படச் சொல்கிறார் ஆசிரியர். நல்ல தமிழ்நடையில் எளிமையும் சேர்ந்திருக்கிறது. இலக்கிய விருந்து.

ரூ. 7.50 — பக்கம் 80 — தமிழ்முடி நிலையம், எச். 10, கே. பொன்னம்பலம் சாலை, கே. கே. நகர், சென்னை — 600 078.

தங்கத் தாமரை — செ. யோகநாதன்.

மொத்தம் பதினோரு கதைகள். இவற்றில் பெரும்பாலான கதைகள் மிருகங்களையும், பறவைகளையும் வைத்துத்தான். இவற்றிலே வளர்ப்புகளும் உண்டு; வனவாழ்வனவும் உண்டு. அவற்றிலே பஞ்சதந்திரக் கதைகள் மாதிரி ஒரு சுவாரஸ்யம் இருக்கிறது. பாலுக்குள் வெண்ணெய் மாதிரி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய நல்ல கருத்து — ஓர் அறிவுரை ஒளிந்து கொண்டிருக்கிறது. அது நன்கு மனசுக்குள் உறுத்தி உறைகிறது.

ரூ. 7 — பக்கம் 80 — சரவண பாலு பதிப்பகம், 33—C, கீழ் செட்டித் தெரு, விழுப்புரம் — 600 017.

*** தம்பிக்கு டாக்டரின் கடிதங்கள் — டாக்டர் கு. கணேசன்.**

அட, நம்ம டாக்டர்தான்! மருத்துவம் பற்றிய நூல்கள் தமிழில் அரிதாகத்தான் வெளிவருகின்றன. குழந்தைகளுக்குச் சொல்வது போல் சொல்ல வேண்டும். டாக்டர்கள் என்பார்கள். இவர் குழந்தைகளுக்கே சொல்லிப் பழக்கப்பட்டவர். இதயம், நுரையீரல், இரத்தம், இரைப்பை, சிறுகுடலும், பெருங்குடலும், கல்லீரல், சிறுநீரகம், கண்கள் இப்படி எட்டுப் பகுதிகளைப் பற்றிய நுணுக்கமான விவரங்களைச் சொல்லுவதோடு நிற்காமல், அவற்றால் விளையும் நோய் நாடி, நோய் குணம் நாடிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய முறைகளையும் சொல்கிறார். கடித வடிவில் விளக்கும் போது கப்பென்று மனசுக்குள் உட்காருகிறது.

பக். 80 — ரூ. 6. — கங்கை.

*** பாடு கண்ணே பாடு — கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியன்.**

நமது பெரிய அண்ணன் இந்த நூலுக்கு அணிந்துரை தந்திருக்கிறார். அதிலிருந்து சில பகுதிகள்:

அம்புலிப் பாட்டுப் பாடாதே!
அம்மா சும்மா தேடாதே!
அம்புலி இங்கே வரமாட்டான்!
அமெரிக்க மாமா விடமாட்டான்!

1972 — ஆம் ஆண்டு சென்னையில் நடந்த குழந்தை இலக்கிய மாநாட்டில் அரங்கேறிய இப்பாடலை, மாநாடு முடிந்து பல மாதங்கள் வரை பாடிப் பாடி மகிழ்ந்தனர் குழந்தைகள்!...

பாடு கண்ணே பாடு
பாசத் தோடு பாடு

என்று குழந்தைகளைக் கொஞ்சிக் கொண்டே பாடச் சொல்கிறார் கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம்.

குழந்தைகளுக்குப் பாட்டு என்ற கடைசிப் பாடலில்,

சிறிய வயதில் இதய வயலில்
அறிவை விதைக்கணும்
பெரிய வயதில் மேதை என்னும்
பெருமை கிடைக்கணும்

என்ற கவிஞரின் குறிக்கோள் பாராட்டத் தக்கது.

ரூ. 6 — பக்கம் — 72 — இரண்டு புத்தகங்களும்: கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தியாகராயநகர், சென்னை — 600 017.



* ஜவாஹர்லால் நேரு

அருமைக் குழந்தைகளே!

சங்கர்ஸ் வீக்லி 1949 — இல் ஒரு குழந்தைகள் சிறப்பிதழ் வெளியிட்டது. அதிலே பாரதத்தின் முதல் பிரதமர் ஜவாஹர்லால் நேரு இப்படி எழுதினார். அப்போது அவருக்கு அறுபது வயது.

ஜவஹர்லால் நேரு

நமது நாடு பெரிய நாடு. நாம் எல்லாரும் இங்கே பணி செய்ய எத்தனையோ வேலைகள் உள்ளன. நம்மிலே ஒவ்வொருவரும் ஒரு சிறு பங்கினைச் சரியாகச் செய்து விட்டால் போதும், அதெல்லாம் சேர்ந்து பெரிதாகி, நமது தேசம் வளமடைந்து விடும்.

நமது இந்திய நாடு ஒரு சிறு உலகம் போன்றது. இதிலேதான் எத்தனை வகை இடங்கள், எத்தனை விதவிதமான விஷயங்கள்! பார்க்கப் பார்க்கப் புதிது புதிதாகக் கண்டு பிடிப்பதற்கு எத்தனையோ உள்ளன. நான் இந்த நாட்டிலே நிறையப் பயணம் செய்துள்ளேன். எனக்கு வயதாகிறது. நான் மிகவும் நேசிக்கும் இந்தத் தேசத்தின் எத்தனையோ பகுதிகளை நான் இன்னும் பார்க்கவில்லை. எனக்கு மட்டும் நேரம் இருந்தால் இந்த நாட்டில் மூலை முடுக்கெல்லாம் பயணம் செய்வேன். துறுதுறு என்றிருக்கும் இளம் குழந்தைகளுடன் அங்கெல்லாம் செல்ல ஆசைப்படுகிறேன். அவர்களுடன் பெரிய நகரங்களுக்குப் பயணம் செய்

வதை விட மலை, காடு, பெரும் நதிகள், பழம்பெரும் நிலங்களில் எல்லாம் — இந்தியாவின் கதையைப் புலப்படுத்தும்பகுதிகளுக்கும்—இந்தக் குழந்தைகளுடன் செல்ல விரும்புகிறேன். நாட்டின் சில பகுதிகளில் பனியில் விளையாடி, வேறு பகுதிகளில் செழிக்கும் வெப்பக்காடுகளில் திரிந்து, எதையும் தாமே தெரிந்துகொள்ளும்படி விடுவேன். குழந்தைகளுடன் இப்படி நேரும் ஒரு பயணம் எத்தனை விஷயங்களைத் தெரிந்துகொள்ள வாய்ப்பளிக்கும்! நமது காடுகளில் உள்ள அழகியமரங்கள், மலைப் பகுதிகள், மாறிவரும் பருவங்களுக்கு எழில் சேர்க்கும் மலர்கள் என்று எத்தனை! நம் வாழ்வு வண்ணமயமானது என்பதை உணர்த்தும் பயணம் இது.

பறவைகளைக் கவனிப்போம். அவற்றை இனம் காண்போம். அவற்றுடன் நட்பு கொள்வோம். இந்தப் பயணத்திலே முக்கியமான சாதனை, காட்டுமிருகங்களை — சிறிதும் பெரிதுமான விலங்குகளைக் காண்பதே!

முட்டாள் மனிதன்தான் துப்பாக்கியுடன் போய் அழகு மிருகங்களை அழித்துவிடுகிறான். துப்பாக்கியோ வேறு ஆயுதமோ இன்றி, அங்கே உலவுவதுதான் சுவாரசியமானது. மனசுக்கு இனியது. காட்டுமிருகங்கள் பயமறியாதவை, அவற்றுடன் நெருங்கிப் பழகலாம். மனிதரை விட மிருகங்களுக்கு உள்ளுணர்வு அதிகம். கொலை நோக்கத்துடன் மனிதர்



அவற்றின் அருகே சென்றால் அவை மனிதர்களுக்குப் பயப்பட்டு ஓடிவிடுகின்றன. ஆனால் ஒரு மனிதன் மிருகங்களை நேசித்தால் அவை அவனை நண்பன் என அறியும்; அவனுக்குத் தொந்தரவு அளிக்காது. நீ பயந்தவனாக இருந்தால் மிருகமும் பயம் காரணமாக, தன்னைக் காத்துக் கொள்ள உன்னைத் தாக்கும். எப்போதும் பயமற்ற மனிதன், சாதாரணமாகத் தாக்கப்படுவதில்லை.

அழகு மிக்க, எழில் கொஞ்சும், சாகச வாய்ப்பு நிறைந்த அற்புத உலகிலே நாம் வாழ்கிறோம். நமது கண்ணைத் திறந்து பார்த்துத் தேடினால் போதும், எத்தனையோ வாய்ப்புக்கள் எதிரே இருக்கின்றன. ஆனால் பலரும் முழுமூச்சுடன் தம் தம் வாழ்க்கைப்பணியை மட்டும் கவனித்துக்கொண்டு போவது போலத் தோன்றுகிறது. அவர்கள் விளையாட இயலாதவர்கள்; மற்றவர்கள் விளையாடுவதையும் விரும்பாதவர்கள்.

.... குழந்தைகள் தமது தாய் தந்தையரை விடப் புத்திசாலிகள். வயதாக ஆக, பரிதாபமாக, பெரியவர்கள் போதனைகளாலும் வாழ்க்கை நடத்தை காரணமாகவும் குழந்தைகளின் இயல்பான புத்திசாலித்தனம் மங்கிவிடுகிறது. பள்ளிக்கூடத்தில் எத்தனையோ பயனுள்ள விஷயங்களைக் கற்றுக்கொள்கிறார்கள், ஆனாலும் வயதாக ஆக, வாழ்க்கைக்குவளம் சேர்க்கும் அவசியமான விஷயங்களை — மனிதாபிமானம், கனிவு, விளையாட்டுத்தனம் ஆகியவற்றை — மெல்ல மெல்ல இழந்துவிடுகிறார்கள்.

.... வயதானவர்களுக்கு ஒரு பழக்கம். எப்போதும் சிறுவர்களுக்குப் போதனைகளையும் நல்ல புத்திமதிகளையும் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். வெகு காலத்துக்கு முன்னே நான் ஒரு சிறுவனாக இருந்தபோது இதனை மிகவும் வெறுத்தேன் என்பது நினைவிருக்கிறது. இப்போது உங்களுக்கும் இதெல்லாம் பிடிக்காது என்று நினைக்கிறேன்!

சங்கர்ஸ் வீக்லி
குழந்தைகள் மலர் 49 — 50.

இங்கே சில
சாகித்ய அகாதமி
விருது பெற்ற நூல்களும்,
அதனை இயற்றிய
ஆசிரியர்களின் படங்களும்
கொடுக்கப்பட்டுள்ளன.
எந்தநூல் யாரால்
இயற்றப்பட்டது
என்பதைச் சரியாகக்
கண்டுபிடியுங்
களேன்!



7



8

யார்? எது?

கருத்து:
அ. அரவிந்தன்



1



2

- அலை ஓசை
- வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு
- அகல் விளக்கு
- பிசிராந்தையார்
- வேங்கையின் மைந்தன்
- சேரமான் காதலி
- சில நேரங்களில் சில மனிதர்கள்
- சக்ரவர்த்தித் திருமகன்
- சமுதாய வீதி



3



4



9



5



6

விடை: 22'ம் பக்கம்



மலைக்காட்டில்

மஞ்சு மூட்டம் மலைப் பாதையை மறைத்து விட்டதால் அவர்கள் பாறையில் அமர்ந்தனர்.

மெல்லத் தூறல் விழுந்து, பின் நின்று போனது. பனிச்சென்று சூரிய ஒளி பரவியது. அவர்கள் எழுந்து இறங்கி நடந்தனர்.

முதலில் ஏலத் தோட்டக்கங்காணியும் அவருக்குப் பின்னால் தோட்ட உரிமையாளர் கன்னையாவும் அடுத்து அவர் மகன் மணியும், அவன் நண்பன் பாலுவும் கடைசியில் தோட்டத் தொழிலாளியாகிய அழகுவும் வந்து கொண்டிருந்தனர்.

கன்னையா தோட்டம் பார்க்கச் செல்ல வேண்டுமென்று ஏற்பாடு செய்கையில், பள்ளி விடுமுறையாதலால் தானும் கூட வருவேன் என்று அடம் பிடித்து, தன் நண்பன் பாலுவையும் அழைத்துக் கொண்டு மணி வந்து விட்டான்.

ஒரு வாரம் அங்கு தங்கிவிட்டு அவர்கள் ஊருக்குக் கிளம்பி விட்டனர். நாலாயிரம் அடி உயர மலை விட்டு அவர்கள் இறங்கிவிட்டால் அடிவாரத்தில் ஜீப் காத்திருக்கும். அதில் ஏறி அவர்கள் கிளம்பியதும் கங்காணியும் அழகுவும் மறுபடி மலை ஏறித் தோட்டத்துக்குச் சென்று விடுவார்கள்.

உச்சி மலைச் சரிவுகளில் உள்ள ஏலத் தோட்டத்தையும், பல வண்ண மலர்களுடன் கூடிய செடி, கொடி, மரங்களுடன் பச்சைப் பசேல் என்ற சூழலில் இயற்கைக் காட்சி அழகினையும் கண்டதில் மாணவர்களான இருவருக்கும் மனத்தில் பெருமையாக இருந்தது. ஆனாலும் மலையில் ஏறி இறங்கி நடப்பது பெரிதும் சிரமமாக இருந்தது.

தோட்டத்தைச் சுற்றிப் பார்க்கையில் அடுத்த மலைச் சரிவில் மேய்ந்து கொண்டிருந்த யானைக் கூட்டத்தைப் பயமின்றிப் பார்த்த மகிழ்ச்சி சிரமத்தை மறக்க வைத்தது.

ஏதோ சத்தம் கேட்கவே அவர்கள் நின்று கவனித்தனர். தூரத்தில் யானைகள் பிளிறும் சத்தம். அவர்கள் பயந்து போய் ஒரு பெரிய பாறையில் ஏறிக் கொண்டனர்.

ஒற்றையடிப் பாதையில் யாரோ வருவது மாதிரித் தெரிந்தது.

ஒரு மருத்துவன்

''யாருப்பா அது?'' என்றார் கன்னையா.

''பளியங்க பையன் போல இருக்கு.'' என்றார் கங்காணி.

கோவணம் மட்டுமே உடுத்திப் பரட்டைத் தலையுடன் கறுப்பான ஒரு சிறுவன் வந்து கொண்டிருந்தான்.

''யேய், நீ யாருப்பா? தோட்டப் பாதையில எங்க போற?''

''கும்புடுதேஞ்சாமி! எம் பேரு நீலன் அய்யனார் கோவில் பளியங்க குத்தகைக்காரங்களுக்கு ஒடம்பு சொகமில்லேன்னு எங்கப்பன் மூலிகை பறிச்சிட்டுவரச் சொல்லிச்சு. அதான் இப்படித்தேடி வந்தேன்.'' நீலன் பவ்வியமாகக் குனிந்து வணங்கிப் பேசினான்.

''சரிப்பா, முதலாளி சாமியோட இப்ப நாங்க கிழ போவணும். யானைக நடமாட்டம் இருக் காப்புல தெரியுது. நீ அடிவாரம் வரக்கி கூட வாரியா?''

''வாரேஞ்சாமி!'' என்றவன், ''ஓங்ககிட்ட தீப்பெட்டி இருக்கா?'' என்று கேட்டான்.

கங்காணி, ''இருக்குப்பா,'' என்றார்.

''அப்ப ஈத்தப் பந்தம் கொண்டு போவலாம்,'' என்றவன், எங்கோ ஓடி இரண்டு நீளமான காய்ந்த ஈத்தைகளை ஒடித்துக் கொண்டு வந்து ஒரு நுனியைத் தட்டி அகலப் படுத்தி தீயைப் பொருத்தினான்.

அது தகதக வென்று எரிந்தது. ஒன்றைத் தான் வைத்துக் கொண்டு, ஒன்றைக் கங்காணியிடம் தந்து நீலன் முன்னால் நடந்தான்.

''ஈத்தப்பந்தம் கையில இருந்திச்சின்னா எந்த மிருகமும் பக்கத்துல வராது சாமி.''


மரத்திற்கு மேலே ஏதோ சத்தம் வரவே அவர்கள் மேலே பார்த்தனர். ''கூக் மூக்' கென்று சத்தமிட்டவாறே பல கரிய குரங்குகள் மரக்கிளையில் இருந்தன.

''கருங்குரங்கு தானே இது?'' கன்னையா கேட்டார்.

''இல்ல சாமி. இத நாங்க சிங்காளமுன்னு சொல்லுவோம். ஆனா பாரஸ்ட்டு ஆபீசருங்க சிங்கவால் குரங்கும் பாங்க. இதக்கொன்னா ஏழு வருசம் ஜெயிலுன்னு சொல்லுவாங்க.''

''ஏன் அப்படி?'' என்று ஆவலுடன் கேட்டான் மணி.





ஸ்மைல் ப்ளீஸ்...! எடுத்தாச்சு.



கழுவிப் பார்க்கணும்.



நெகடிவ் டக்கர்!

ஸ்ஸ்... ஒரு குட்டி போட்டோகிராபர்

"இந்தச்சாதி கொறைஞ்சிட்டு வருதாம். அதனால இதக் காப்பாத்த இப்படிச் சட்டம் போட்டுருக்காங்க சுருக்காரு."

"ஆனா இந்தக் குரங்கு பாக்கிறதுக்கு ரொம்ப அழகாயிருக்குல்லே?" என்றான் பாலு.

அவர்கள் பேசிக் கொண்டே நடந்தனர்.

திடீரென்று கன்னையா "உடம்புக்கு ஒரு மாதிரியா வருதுப்பா..." என்று கூறிவிட்டு உட்கார்ந்து கொண்டார்.

சற்றைக்கெல்லாம், "ஐயோ முதுகு வலிக்கே, ஒடம்பு வலிக்கே," என்றவர் படுத்து உருளத் துவங்கினார்.

"ஐயோ.... எங்கப்பாவுக்கு உடம்புக்கு வந்திருச்சே?" என்ற மணி, "புடிச்சித் தூக்குங்க. நல்ல இடத்துல படுக்க வைப்போம்," என்று பதறிக் கொண்டே கூற, அவர்கள் கன்னையாவைத் தூக்கிப் புல் முளைத்திருந்த சமதரையில் படுக்க வைத்தனர்.


அவர் 'ஹாங் ஹூங்' என்று முனகியவாறே உருண்டார்.

"என்னங்க ஒடம்புக்கு?" என படபடத்துக் கேட்டான். நீலன்.

"எங்கப்பாவுக்கு இப்படி அடிக்கடி வரும். இது என்ன வியாதின்னே டாக்டர்களால கண்டுபிடிக்க முடியல்லே, ஷுகர் இல்லே, பிளட்ப்ரஷர் இல்லே, ஹார்ட்லயும் ஒண்ணுமில்லே... இ.சி.ஜி, ஸ்கேன் எல்லாச் செக்கப்பும் பண்ணியாச்சி. ஒடம்புக்கு ஒண்ணுமே இல்லேங்கறாங்க. அப்புறம் எதால இப்படி வருதுன்னு யாருக்கும் தெரியல. வலி வந்துட்டா டாக்டருங்க தூங்கறதுக்கு ஊசி போடுவாங்க, மலைக்குப் போக வேண்டாம்னுகூட டாக்டர் சொன்னாங்க. அப்பா தான் ஒரே தோட்டம் தோட்டம்னு சொல்லிக்கிட்டிருப்பாரு. அம்மாவும்போகவேண்டாம்னு சொல்லிட்டாக, அப்பாதான் கேட்

யார்? எது? விடை!

1. அகிலன் — வேங்கையின் மைந்தன்.
2. கல்கி — அலை ஓசை.
3. ஜெயகாந்தன் — சில நேரங்களில் சில மனிதர்கள்.
4. நா. பார்த்தசாரதி — சமுதாய வீதி.
5. ம. பொ. சி. — வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு.
6. ராஜாஜி — சக்கரவர்த்தித் திருமகன்.
7. மு. வரதராசனார் — அகல் விளக்கு.
8. பாரதிதாசன் — பிசிராந்தையார்.
9. கண்ணதாசன் — சேரமான் காதலி.



என்லார்ஜ் பண்ணுவமா?




ப்ரிண்ட் எப்படி....?



சூப்பரா வந்திருக்கு!

வேலை பார்க்கிறார்!



கட் பண்ணி...



ஆல்பத்திலே ஒட்டறோம்!

புகைப்படங்கள்:

எம். பார்வதீசம் இதராபாத்

காம வந்துட்டாரு!'' மணி சொல்லி விட்டு அவர் கால், கைகளைப் பிடித்து விட்டான்.

அவர் வலியால் துடித்துக் கொண்டிருந்தார்.

''உங்ககிட்டே ஒரு டம்ளரு இருக்கா சாமி?'' நீலன் கேட்டான்.

''ஆமா, இருக்கு.'' கங்காணி பையில் உள்ள டம்ளரை எடுத்தார்.

நீலன் ஓடிச் சென்று ஏதோ ஒரு காட்டுப் புல்லைப் பறித்து வந்தான். ஓடையில் ஓடிச் சென்று கழுவிக் கொண்டு வந்து இரண்டு கற்களை எடுத்து புல்லை இடித்து, டம்ளரில் சாறு பிழிந்தான்.

''சாமி, இத அப்பாட்ட கொடுத்துக் கொஞ்சங் கொஞ்சமாக் குடிக்கச் சொல்லுங்க,'' என்று நீட்டினான்.

மணியும் பாலுவும் அவரைத் தூக்கி உட்கார வைத்து, சாற்றைக் குடிக்க வைத்தனர். சிறிது நேரம் அப்படியே சாய்ந்தவாறே பிடித்திருந்தார் அவர்.

''அப்பாடா'' என்று கன்னையா சிறுவர்களிடமிருந்து விலகித் தானாகவே எழுந்து உட்கார்ந்தார்.

நீலனைத் தேடினார். அவன் இல்லை. அவன் எங்கிருந்தோ வந்து கொண்டிருந்தான். கையில் ஏதோ பச்சிலைகள்.

''சாமி, இது கட்டுக் கொடி, இலைகளைத் தனியாய்ப் பறிச்சி இடிச்சி சாறெடுத்து ரெண்டு நாள் காலையில குடிங்க. இது கல் தாமரை இலை, இதை நிழல்ல காயப்போட்டுப் பொடி பண்ணி வச்சிக்கிட்டு, படுக்கப் போகும் போது நாப்பது நாள் சாப்பிடுங்க. ஒங்க ஒடம்புக்கு ஒண்ணும் இருக்காது. ராச்சாப்பாட்டை இனிமே நிறுத்திடுங்க. லேசாத் தொந்தி வச்சிருக்கு. வயிறு பெருத்தா



வாழ்க்கை சுருங்கும்னு எங்க அப்பன் சொல்லும்.''

கன்னையா அவனை முதுகில் தட்டிக் கொடுத்து நன்றி உணர்வோடு பார்த்தார். கொடி இலைகளை வாங்கி வைத்துக் கொண்டார்.

''நீ படிச்சிருக்கியா?''.மணி கேட்டான்.

''இல்ல சாமி...'' என்றான் நீலன்.

''அதிசயமா இருக்கே, எங்கப்பா ரெண்டு மணி நேரமாவது இப்படிக் கஷ்டப்படுவாரு. பத்தே நிமிஷத்துல எந்திரிச்சி உக்கார வச்சிட்டயே! பெரிய டாக்டர் மாதிரி மருந்துகளைச் சொல்றியே!'' மணி வியந்து கேட்டான்.

''படிப்பை விடப் பரம்பரை அனுபவம் இருக்கில்லே...'' என்றார் கங்காணி.

''சாமி இந்த மலயில எத்தனையோ மூலிகைக இருக்கு. எந்தச் சிக்கும் இதால தேவலையாக்கிடலாம்.''

வனம் பற்றிய அவனது அறிவும் உடற்கூறு பற்றிய அவனது தத்துவமும் கண்டு கன்னையா வியந்து போனார்.

''நீ எங்க வீட்டுக்கு வாப்பா. கொஞ்ச நாள் ஊர்ல வந்து இரு. எனக்கு மருந்து கொடுத்துக்கிட்டு.''

''சாமி, அடிவாரம் வந்து கொஞ்சம் புல்லு பறிச்சித் தாரேன். அதை நனைச்சி ஆயில் பேப்பருல சுத்தி வையுங்க. நாலு நாளக்குக் காலயில கொஞ்சம் புல்ல இடிச்சி, சாறு எடுத்துக் குடிங்க. ஒடம்புல இருக்கிற ரத்தம் புதுசா மாறிடும். அப்புறம் சிக்கே வராது.'' சொல்லி விட்டு அவன் எழுந்து முன்னே நடந்தான்.

கன்னையா எழுந்து பர்ஸ் எடுத்து ஓர் ஐம்பது ரூபாய்த் தாளை நீட்டி, ''தம்பி, இத வாங்கிக்கோ,'' என்றார்.

''வேண்டாம் சாமி. நான் வெறும் புல்லுச் சாறுதானே கொடுத்தேன்? இதுக்கெல்லாம் பணம் வாங்க மாட்டேன். நீங்க நல்லாருந்து எம்மேல அன்பு வச்சிருந்தா அது போதும்.''

கன்னையாவிற்கு நீலன் ஒரு சிறுவனாகத் தோன்றவில்லை. தெய்வமாகத் தோன்றினான்.

— கே. ரமேஷ்.

எண்ணிச் சொல்லுங்கள் எலிகளை.



விடைப் பக்கம் : 70



பிருந்தாவனம்

குதிரையும் கழுதையும்

நம் நாட்டின் ஜனாதிபதியாக இருந்த மாமேதை டாக்டர் இராதா கிருஷ்ணன் ஒருமுறை இங்கிலாந்து சென்றிருந்தார். அப்பொழுது ஓர் ஆங்கிலேயர் அவரிடம், "எங்கள் நாட்டில் மக்கள் அனைவரும் ஒரே நிறத்துடன் உள்ளனர். உங்கள் நாட்டில் ஏன் மக்கள் வேறுபட்ட நிறங்களில் உள்ளனர்?" என்று கேட்டார்.

அதற்கு இராதாகிருஷ்ணன் சொன்னார்: "கழுதைகள் ஒரே நிறத்தில்தான் காணப்படும். குதிரைகள் வேறுபட்ட நிறங்களில்தான் காணப்படும்," என்றார்.

— ஆர். குமரிராஜன், மன்னார்குடி.

தானியங்கி டெலிபோன்



எண்களைச் சுழற்றியோ அல்லது பொத்தான்களை அழுத்தியோதான் நாம் டெலிபோனில் பேசுகிறோம். குரல் கேட்டுத் தானாக இயங்கும் புதிய டெலிபோன் பற்றிய தகவல் கிடைத்துள்ளது.

இந்த டெலிபோன் முன் ஒருவர் நின்று கொண்டு தனக்குத் தேவையான எண்களைக் கூறினால் போதும். டெலிபோன் தானாக டயல் செய்து கொண்டு குறிப்பிட்ட எண்ணுடன் தொடர்பு கொண்டு விடும்.

ஆஸ்திரேலியாவில் உள்ள மெல்போர்ன் நகரைச் சேர்ந்த மின் அணுவியல் என்ஜினியர் வில்லியம் ஹேரால்டன் இதைத் தயாரித்து இருக்கிறார். இந்த டெலிபோனுக்குள் குரலை அடையாளம் கண்டுகொள்ளும் கம்ப்யூட்டர் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அதன் உதவியால்தான் டெலிபோன் இயங்குகிறது. வாகன சத்தம் மற்றும் சுற்றுப்புறச் சூழலில் ஏற்படும் சத்தங்களினால் இது பாதிக்கப்படாமல் இருக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த வகை டெலிபோன் வயதானவர்களுக்கும் ஊனமுற்றோர்களுக்கும் பெரிதும் பயன் உள்ளதாக இருக்கும். எந்தவிதமான குரலில் பேசினாலும் இந்த டெலிபோன் சரியாகச் செயல்படும் என்று வில்லியம் ஹேரால்டன் கூறினார்.

— சா. இரா. மணி, வந்தவாசி.

பள்ளிக் கூடம் போக மாட்டான். பாடம் படிக்க மாட்டான். ஆனால் கணக்குச் சொல்வான் — அவன் யார்?

அதிசயக் குளத்தில் அற்புதக் குருவி ஒன்று வாலினால் தண்ணீரை வற்ற வற்றக் குடிக்கிறது. — அது என்ன?

காட்டிலே மரம் வெட்டி, கடல் ஓரம் ஏற்றம் போட்டு, நாட்டுக்குச் சீட்டு எழுதி நடக்கிறாராம் தர்மராஜா. — யார்?


யார் என்ன?



விடை:

1. கம்ப்யூட்டர்
2. குத்து விளக்கு
3. கப்பல்

— சு. தியாகராஜன், குமராட்சி.



* ஒரு சமயம் கோவிந்த் வல்லப பந்த்தும் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியும் ஜீப்பில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். அப்போது ஜீப் விபத்துக்குள்ளாகி கவிழ்ந்து விட்டது. பந்த்தும் — சாஸ்திரியும் தூக்கி எறியப்பட்டு, பந்த் கீழே விழ அவர் மீது சாஸ்திரி விழுந்தார்.

சம்பவத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட நேருஜி மருத்துவமனைக்கு விரைந்து சென்று சாஸ்திரியைப் பார்த்தார். "நல்ல வேளை, நீங்கள் கீழே விழுந்து உங்கள் மீது பந்த் விழுந்திருந்தால் என்ன கதி நேர்ந்திருக்கும்!" என்று கூறி நேருஜி சிரித்தார் (சாஸ்திரியை விட பந்த் குண்டானவர்.)

— பி. கோவிந்தசாமி, ஊத்தங்கரை.



கருமை நிறம் உடையது — காகமல்ல
இனிய குரல் உடையது — குயிலும் அல்ல
நம் எதிரில் சுற்றி வரும் — நாயும் அல்ல
பெட்டியில் அடங்கி விடும் — பாம்பும்
அல்ல.

அது என்ன?

கனலை ஏந்தியதும் கண்ணீர் வடிப்பாள்
கண்ணீர் வடித்ததும் கரைந்து போவாள்
அவள் யார்?

மூன்று கால் உடையது முக்காலியல்ல;
முறுக்கு போன்றது தின்பண்டமல்ல;
முதுகிலே விழுவது அடியுமல்ல
அது என்ன?

மதிலோரம் போற பெண்ணே, உன்னைத்
தொட்டேனோ நான் கெட்டேனோ
அது என்ன?

மண்ணுக்குள் மாயாண்டி, உரிக்க உரிக்கத்
தோலாண்டி
அது என்ன?


கத்தி போல் இலை காய்க்கும்; கவரிமான்
போல் பூ பூக்கும்; திங்கப் பழம் காய்க்கும்.
திங்காத காய் காய்க்கும். அது என்ன?

ஓடோடும் சங்கிலி உருண்டோடும் சங்கிலி
பள்ளத்தைக் கண்டால் பாய்ந்தோடும்
சங்கிலி அது என்ன?

விடைகள்:

1. இசைத்தட்டு, 2. மெழுகுவர்த்தி, 3. சடைப்பின்னல், 4. தேள், 5. வெங்காயம், 6. வேப்பமரம், 7. தண்ணீர்.

— பி. நாகலட்சுமி, தூத்துக்குடி.



* கடலில் வாழும் 'கட்டில் பிஷ்' என்ற மீன் இனத்திற்கு மூன்று இதயங்கள் உள்ளன. இரண்டு இதயங்கள் அசுத்த மடைந்த இரத்தத்தை சுத்தம் செய்கிறது. இதன் ரத்தம் நீல நிறமாக இருக்கும். இதன் உமிழ்நீர் விஷத் தன்மையுடையது.
* திமிங்கிலக் குட்டியை ஆங்கிலத்தில் 'காஃப்' (கன்றுக்குட்டி) என்று அழைப் பார்கள்.
* கடலில் வாழும் மிகப் பெரிய மீன் திமிங் கிலச் சுறா மீன்கள். இதன் நீளம் 59 அடி. நிறை 42.9 டன்கள். நன்னம்பிக்கை முனையை அடுத்துள்ள கடலில் காணப் படுகிறது.
* பச்சடி மீன் (ஜெல்லிஃபிஷ்) என்று ஒரு வகை மீன் நீந்தும் முறை விசித்திரமாக இருக்கும். இது நீரை உறிஞ்சி மறுபடி யும் உமிழ்வதன் மூலம் இந்தச் சலனம்

அதன் கின்னம் போன்ற மேல் பாகத்தை துருத்திப் போல இயங்கச் செய்து நகர வைக்கிறது.

* டால்ஃபின் மீன் பாலூட்டும் இன மீனாகும்.
* சுத்தமான நீரில் வாழும் மிகப் பெரிய மீன் இனம் ஐரோப்பியப் பூனை மீன்களாகும். இவை ரஷ்ய நாடுகளில் காணப்படும். இவற்றின் எடை 565 பவுண்டு.
* உலகிலேயே நீருக்குள் மிக வேகமாக நீந்தக் கூடிய மீன் செயில்ஃபிஷ். இம் மீன்கள் அட்லாண்டிக் கடலில் வாழ்கிறது.
* சுறா மீன்களால் நீருக்கடியில் இருபது நிமிடங்களே இருக்க முடியும்.
* டால்ஃபின் என்ற மீனுக்கு மனிதனை விட ஏழு மடங்கு கூர்மையாகக் காது கேட்கும் சக்தி உண்டு.
* உலகிலேயே மிக அதிக முட்டையிடும் மீன் 'காட்' மீன்தான். இது ஒரு முறைக்கு சுமார் 60 லட்சம் முட்டைகளை இடுகிறது. ஆனால் அவற்றில் மிகச் சொற்ப முட்டைகள்தான் பொரிக்கப்படுகின்றன. மற்றவை வீணாகி விடுகின்றன.
* பழக்கப்பட்ட டால்ஃபின் மீன்கள் சர்க்கஸ் வேலை செய்வதில் திறமைமிக்கது. மனிதர்களுக்கு உதவும் பண்பு கொண்டவை.

தொகுப்பு: எஸ். விஜயா சீனிவாசன், திருச்சி — 14.




தமிழ்க் கவிஞர்கள்

தமிழ் நாட்டில் பழங்காலத்தில் பல பெண் கவிஞர்கள் இருந்தனர். தமிழ் நாட்டில் தோன்றிய பெண் கவிஞர்கள் போல் அந்த அளவு வேறு எந்த நாட்டிலும் இன்று வரை தோன்றியதில்லை. அவர்கள் பெயர்கள்:

1. ஆதி மந்தியார்
2. ஒக்கூர் மாசாத்தியார்
3. ஔவையார்
4. காக்கைப் பாடினியார்
5. காவற்பெண்டு
6. குறமகள் இளவெயினி
7. நக்கண்ணையார்
8. நல்முல்லையார்
9. நல் வெள்ளியார்
10. பாரி மகளிர்
11. பூங்கண் உத்திரையார்
12. பெருங்கோப்பெண்டு
13. பேய்மகள் இளவெயினி
14. பொன் முடியார்
15. போந்தைப் பசலியார்.
16. மாற்பித்தியார்.
17. மாறோக்கத்து நப்பசலையார்
18. முடத்தாமக் கண்ணியார்
19. வெண்ணிக் குயத்தியார்
20. வெள்ளி வீதியார்

— எஸ். ஜெயஸ்ரீ, திருச்சி — 14.



மழலை முத்துக்கள்

* குழந்தையின் மூலம் அன்பின் நியதியைப் புரிந்து கொள்ள முடியும் என்பதையும், கற்றுக் கொள்ள முடியும் என்பதையும் நான் கண்டறிந்திருக்கிறேன். அறியாமை குடிகொண்டுள்ள பெற்றோர்களாகிய நாம் மட்டும் தலையிடாமல் இருந்தால்,, குழந்தைகள் ஒருவித சூதுவாதையும் அறியாமலே இருப்பார்கள்.

— மகாத்மா காந்தி

* குழந்தைகளைத் திருத்த மிக நல்ல வழி, அவர்களைப் பாராட்டுவதுதான்.

— ஷெரிடான்.

* குழந்தைகளுக்குக் கவலை, பயம், அதிர்ச்சி, கோபம், வருத்தம், பொறாமை, கசப்பு இவை இல்லாத இலட்சிய வாழ்வு வாழ்வதற்குக் கற்றுக் கொடுங்கள்.

— எர்னஸ்மன் மாரிஸ்.

* குழந்தைகளை நல்ல பழக்கத்தில் வளர்க்க வேண்டும். ஏனென்றால், அவர்கள்தான் நமது வருங்காலப் பிரஜைகள்.

— வல்லபாய் படேல்.

* குழந்தை வளர்ப்புதானே? அது ரொம்பவும் சுலபமான வேலை. குழந்தை உன்னுடையது அல்ல; பிறருடையது என்று பாவித்துக் கொள்; அவ்வளவுதான். பிறருடைய குழந்தையை எப்படி வளர்க்க வேண்டும் என்பது தெரியாதவன் எவனுமே இந்த உலகத்தில் இல்லை.

— பிங்கிராஸ்பி.

* சிறிது அன்பு குழந்தையிடம் காட்டு;

அடடா, எத்தனை கொள்ளை கொள்ளையாகத் திரும்பவும் கொட்டுகிறது அது!

— ரஸ்கின்.

* குழந்தைகள் இல்லாத வீடு சூன்யமானது. குழந்தைகளே நிரம்ப வட்டிக்கு விடக் கூடிய பெருஞ் செல்வமாகும்.

— திரு.வி.க.

* குழந்தைகள் வாழ்க்கையில் புதிய கவலைகளை அதிகரிக்கிறார்கள். ஆனால் பழைய கவலைகளை மறக்கடிக்கிறார்கள்.

— பேகன்.

* குழந்தையின் குறும்புத்தனமே அதன் மூலதனம். குழந்தை ஓர் உயர்ந்த பொருள். அது உயிரும் உணர்ச்சியும் கொண்டது. அதன் சம்மதத்தைக் கேட்டு நாம் அதை உண்டாக்கவில்லை.

— ராஜாஜி.

தொகுப்பு: மா. லிங்கேஸ்வரன், திருச்சி — 20.



O.K எப்படி வந்தது?

மற்றெந்த மொழிச் சொற்களையும் விட, ஆங்கில O.K. உலகிலுள்ள அனைவராலும் புரிந்து கொள்ளப்படுகிறது. இது எப்படி வந்தது?

ஒரு கூற்றின்படி, 'Okeh' (எல்லாம் சரி) என்ற சொல்லிலிருந்து O.K. வந்திருக்க வேண்டும்.

மற்றொரு கூற்றின்படி, நாகரிகம் கருதி all correct என்பது Orl Korrect என்று எழுதப்பட்டு அதிலிருந்து O.K. பரவியிருக்கலாம்.

ஆனாலும் 1941ல் பேராசிரியர் ரெட் கூறியதே பலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது:

"1840ம் ஆண்டு அமெரிக்கக் குடியரசுக் கட்சி, அந் நாட்டின் ஜனாதிபதி தேர்தலுக்கு மார்ட்டின் வான் புரென் என்பவரை வேட்பாளராக நிறுத்தியது. அவருக்கு Old Kinderhock என்ற செல்லப் பெயர் இருந்தது. தேர்தல் சமயங்களில் புரென் O.K. என்றே குறிப்பிடப்பட்டார். இந்தத் தேர்தல் முழக்கமே பேச்சு வழக்கமாகி, O.K. all right என்ற பொருளில் பரவி விட்டது."

இந்த O.K. என்ற சொல்லை உலகெங்கும் பரப்பிய பெருமை அமெரிக்கப் படை வீரர்களையே சாரும். இந்த நூற்றாண்டிலே நடந்த இரு உலகப் போர்களின் போதும் அவர்கள் இந்த O.K.வை அதிகம் பயன்படுத்தினர்.

— கிருஷ்ணப்ரியா, அம்மாபேட்டை.



அமைதியற்ற ஞாயிறுகள்

ஞாயிற்றுக் கிழமை என்றாலே உலகெங்கும் மக்கள் ஒவ்வொருவருக்கும் அமைதியான நாள் என்றே நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த அமைதியான நாளுக்கும் உலகத்தையே நடுங்கச் செய்த அநேக சம்பவங்களுக்கும் எவ்வளவு தொடர்பு தெரியுமா?

* 'வாட்டர்லூ' என்ற போரில் மாவீரன் நெப்போலியன் கடைசியாகத் தோல்வியுற்றது 1815 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை.
* அமெரிக்கப் போர்க் கப்பல்கள் ஸ்பானிஷ் கடற்படையை நிர்மூலமாக்கியதும் 1898 ஆம் ஆண்டு மே மாதத்திலொரு ஞாயிற்றுக் கிடமையன்றுதான்.
* இரண்டாம் உலகப் போர் ஆரம்பித்த பின் ஹிட்லர் ரஷ்யாவை இரண்டு ஆண்டுகள் கழித்து தாக்கியது ஜூன் 22— ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமைதான்.
* பின்னர் ஆறு மாதங்கள் கழித்து டிசம்பர் மாதத்தில் ஒரு ஞாயிறன்று ஜப்பானியர்கள் பேர்ல் ஹார்பரில் குண்டு வீசி, போரை அமெரிக்கக் கரைக்கே கொண்டு போய் விட்டார்கள்.
* 1941 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமையன்று நேசப் படைகள், ரோமபுரி நகரத்தைக் கைப்பற்றி ஹிட்லரின் வெறியாட்டத்துக்குச் சமாதி கட்டின.
* 1944 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் தேதியன்று, அதுவும் ஞாயிற்றுக் கிழமையில் ஐரோப்பாவில் போர் நிறுத்தப்பட்டு ஹிட்லரின் சாம்ராஜ்யக் கனவுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.
* ஜப்பானில் உள்ள ஹிரோஷிமா நகரத்தில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை அணுகுண்டு வீசப்பட்டது.

— தொகுப்பு: ஆர். குமரிராஜன் மன்னார்குடி



மாஜிக்

தலையில் கிரீடம். பளபளக்கும் நட்சத்திரம் மின்னுகிறது. நீண்ட கறுப்பு கோட். வெள்ளைக் குர்தா — இறுக்கமாய்க் கண்களில் குறும்பு, சிரிப்பு, மூக்குக் கண்ணாடி. சிரிப்புடன் பேசிக் கொண்டே, இரண்டு கைகளின் விரல்களையும் லாகவமாய்ப் பயன்படுத்தி, மாஜிக் பல செய்துகாண்போரை பிரமிக்க வைக்கும் திறமை —

இடையிடையே குட்டி நீதிக் கதைகள் —

'தெய்வீக மாயாஜாலம்' என்ற தனிப் பாணியுடன் சுமார் 600 நிகழ்ச்சிகளைச் செய்திருக்கிறார் இதுவரை. 1980 முதல் நிகழ்ச்சிகள் நடத்துகிறார் — குரோம்பேட்டை ஜே. வி. சுப்பிரமணியன். சுருக்கமாக ஜே. வி. எஸ். காஞ்சி மாமுனியின் சால்வையும், தங்கப் பதக்கமும் பெற்றவர்.

கோகுலம் குழந்தைகளுக்காகச் சில மாஜிக்குகளைச் சொல்லித் தர முன்வந்தார். ஆர். பாலாஜி, வி. பிரகாஷ், ரூபா, சுபா, வி. சேகர், ஆர். சந்தானம், எஸ். புவனேஸ்வரி ஆகியோர் எதிரில் மாஜிக் செய்தார்.

இதோ மாஜிக் ஆரம்பமாகிறது.

கையில் ஒரு கயிற்றை எடுத்தார் ஜே. வி. எஸ். பேசிக் கொண்டே பார்வையாளர்களின் கையில் கொடுத்து, சந்தேகத்துக்கு ஒருமுறை பார்த்துக் கொள்ளச் சொன்னார்.

"குடும்பமோ, நாடோ, அதில் ஒற்றுமை வெட்டுப்படவே கூடாது." என்று கூறியவாறு, கத்தரிக்கோலை எதிரிலிருந்த சிறுவன் ஆர். சந்தானத்தின்கையில்கொடுத்து, "இந்தாப்பா... இதைக் கட் பண்ணு," என்றார்.

அவனும் கத்தரித்தான்.

"ஒற்றுமை வெட்டுப்பட்டாலும் மீண்டும் பாட்ச் பண்ணப் பார்க்கணும்," என்று சொன்னவாறு முடிச்சுப் போட்டார் — வெட்டுப்பட்ட முனைகளை. இப்போது முடிச்சை இடக் கையால் மூடிப் பிடித்தவாறு கயிற்றை வலக் கையால் உருவினார். முடிச்சை வலக் கையால் பிடித்து இடக் கையால் உருவினார். பாக்கெட்டிலிருந்து மந்திரப் பொடி எடுத்துத் தூவியவாறு சட்டென்று மூடிய கையைப் பிரிக்க... என்ன மாயம்! முடிச்சையும் காணோம். வெட்டுப்பட்ட சுவடும் இல்லை! நீளமாய்க் கயிறு நம்மைப் பார்த்துச் சிரிக்கிறது! இரண்டு பக்கமும் பிடித்துக் கொண்டிருந்த பாலாஜி, பிரகாஷ் முகங்களில் வியப்பு.

அடுத்தபடி ஒரு பிரவுன் (Brown) நிற பாட்டிலை எடுக்கிறார் ஜே.வி.எஸ். அதற்குள் நீண்ட நூலை உள்ளே விட்டு விட்டு, "இதோ இந்தக் கயிற்றை விட்டுட்டா என்னா

• ஒற்றுமை வெட்டுப்பட்டாலும்...



ஏற்பாடு + தொகுப்பு: 'சின்ன முருகன்'
படங்கள் : பிரபுசங்கர்.

கத்துக்கலாம் வாங்க!



* பாட்டில் விழுந்துடுமா?

கும்?'' என்று கேட்க, ''விழுந்துடும் பாட்டில்...'' என்று கோரஸாகப் பதில்.

''இப்போ நூலை விட்டுடப் போறேன், காதைப் பொத்திக்குங்க... விழுந்து நொறுங்கப் போறது... பாவம்!'' என்று ஜே.வி.எஸ். சொல்ல, எல்லோரும் இமைகளைச் சுருக்கிப் பயந்த பாவத்துடன் காதுகளைப் பொத்திக் கொள்ள,

சடக்கென்று அவர் கயிற்றைப் பிடித்துத் தூக்கியவாறு, பாட்டிலின் அடியில் இருந்த கையை விட்டு விட... அடடே! கயிற்றின் நுனியால் பாட்டில் எந்தவித ஆதாரமும் இன்றித் தொங்குகிறதே ரூபா சுபா வியக்கின்றனர்.

அடுத்தபடியாக ஒரு ரூபாய் நாணயத்தைக் கைமாற்றிக் கைமாற்றிக் காண்பித்து, திடுதிப்பென்று காணாமல் போக்கி, எதிரில் இருக்கும் ரூபாவின் காதிலிருந்து ரூபாயை எடுத்துக் காண்பிக்கிறார்!

சிறுவர்கள் தங்களின் ஆச்சரியத்தை வெளிப்படுத்தி முடித்த பிறகு, நிதானமாய் இந்தத் தந்திரக் காட்சிகளை எப்படிச் செய்வது என்று அழகாய், தெளிவாய், திரு. ஜே.வி.எஸ். விளக்கினார்.


முதலில் கத்தரித்த கயிறு இணையும் ஜாலத்தை விளக்கினார்:

அரை மீட்டர் நீளமுள்ள ஒரு திரிக் கயிற்றின் நீளத்தை எதிரிலிருப்பவரிடம் காண்பித்து ஒரே கயிறு என்று நிரூபியுங்கள். பிறகு கயிற்றின் A நுனியை இடக் கையின் கட்டை விரல

* ஒரு ரூபாயைக் கைமாற்றி...



டியில் வைத்து, நுனி வெளியே நீண்டு தெரியுமாறு காண்பித்து.. B நுனியை இடக்கையின் கட்டை விரல் ஆள் காட்டி விரல்களால் பிடித்துக் கொள்ளவும். கயிற்றின் நட்ட நடு மத்ய பாகத்தை (C என்போம்) தூக்கி, AB இரண்டு முனைகளுக்கும் இடையே எதிரிலிருப்போருக்குத் தெரியாமலிருக்கும்படி உயர்த்திப் பிடிக்கவும் இப்போது AB முனைகளுக்கிடையே 'C' வரும்.



நிஜமாய்க் கத்தரிக்கப்படும் இடம் இப்போது, Bயின் மிக அருகிலிருக்கும் பகுதியை, Cயின் அடி வழியே வருமாறு அமைத்து, விரலுக்கு வெளியே எதிராளிக்கு 'லூப்' வடிவம் தெரியுமாறு அமைக்கவும். எதிராளியை வெட்டச் சொல்லவும். C பகுதியை வெட்டுவதாய் நினைக்கும் எதிராளி நிஜத்தில் Bயின் மிக அருகில் ஓர் இடத்தை வெட்டுகிறார். C மறைவாய் நம் விரலடியில்! பிறகு முடிச்சுப் போட்டு விட்டு, அதைக் கையால மறைத்தவாறு பேசிக் கொண்டே உருவினால், பெரிய கயிற்றின் மேல் ஒரே ஓர் அங்குலத்துக்கு ஒரு சின்ன நூல் முடிச்சு, கையோடு உருவிக் கொண்டு வந்து விடும். மந்திரப் பொடி எடுக்கிறேன் என்று கதை விட்டவாறு பாக்கெட்டுக்குள் அந்தத் துணுக்கு நூலைப் போட்டுக் கொள்ளலாம். இதில், நூலுக்கு நடுவில் ஏற்கெனவே எந்த முடிச்சும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிடில் சிக்கி விடும்!

அடுத்தது பாட்டில் ஜாலம்:

இது சுலபம். பிரவுன் நிற பாட்டிலில் கார்க்கைச் சிறிய உருண்டையாய் உள்ளே தள்ளிவிட வேண்டும். பிறகு கயிற்றைப் பாட்டிலுக்குள் நுழைத்து, கயிற்றுடன் பாட்டிலைத் தலைகீழாக உயர்த்த, கார்க் பாட்டிலின் வாயருகில் அழுத்திக் கயிற்றை வெளியே வராமல் பிடித்துக் கொள்ளும். பிறகு பாட்டிலை விட்டால் அது விழாதே! மீண்டும் பாட்டிலின் வாயில் லேசாய்க் கயிற்றைத் திருகி விட்டால் கார்க் உள்ளே போகும்! கயிறு வெளியே வரும்!

அடுத்தது நாணயம்:

இடக் கையால் காசை வைத்து வலக் கையால் இரண்டு மூன்று தடவை எடுத்து எடுத்து வைத்துக் காட்ட வேண்டும். நான்காம் முறை வைப்பது போல் பாவனை செய்தவாறு ஆள்காட்டி விரலால் நாணயத்தைத் திருப்பி வலக்கைக் கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் நடுவில் பிடித்துக் கொண்டு, இடக் கையை மூடிக் கொள்ள வேண்டும். பிறகு திறந்து காட்டினால் இடக் கை காலி. எதிரிலிருப்பவர் காதிலிருந்து எடுப்பது போல் விரல்களுக்கிடையே உள்ள நாணயத்தை எடுக்கலாமே!




தன் கையெழுத்து அழகாயில்லை என்ற வருத்தம் காந்திஜிக்கு எப்போதும் உண்டு. அவர் சொல்கிறார்,

"மோசமான கையெழுத்தை அரை குறையான படிப்புக்கு அறிகுறியாகக் கொள்ள வேண்டும். ஒவ்வோர் இளம் பெண்ணும், இளைஞனும் கையெழுத்து நன்றாக இருக்க வேண்டியது படிப்பின் ஒரு பகுதி என்பதை அறிய வேண்டும்."

— கிருஷ்ணப்ரியா, அம்மாபேட்டை.


டாக் ஜோக்ஸ்
கோவிலுக்கு எதிரில் குழந்தைகள் டாக்டருக்கு கிளினிக் இருப்பது தொல்லையாப் போச்சு!
ஏன்?
கோவிலுக்கு யாராவது சிதறுகாய் உடைச்சா அதைப் பொறுக்க டாக்டர் ஓடிடறார்!
அந்த ஆள் கில்லாடிப்பா!
எப்படி டாக்டர் சொல்றீங்க?
பத்து ரூபாய் என்னிடம் கடன் வாங்கி... பீஸ்னு சொல்லி, திருப்பித் தந்துட்டாரே!
கண்ணைத் தோண்டிடுவேன்; காதைத் திருகிடுவேன்; மூக்கை உடைச்சுடுவேன்னு அடிக்கடி திட்டறாரே? யார் அவரு?
கண், காது, மூக்கு-ஸ்பெஷலிஸ்ட் டாக்டர்
குக்கிராமத்திலே பல் டாக்டரா போனது தப்பு!
ஏன் டாக்டர்?
எண்பது வயதுக் கிழவர் தனக்குப் பல் முளைக்க மருந்து தாங்கன்னு கேட்டு அடம் பிடிக்கிறார்!
நான் ரிடையர் ஆகப் போவதை எண்ணி, எங்க ஆஸ்பத்திரியிலே எல்லோரும் வருத்தப்படறாங்க!
ஏன்?
எல்லோரும் தூங்கும் போது, நான் தான் கதை சொல்வேன். எனக்குப் பிறகு யார் சொல்வாங்கன்னு நினைச்சுத் தான்.
—குத்தாலம் ராஜா

யார் சிறியவன்?



அந்தப் பள்ளியில் அன்று எட்டாம் வகுப்பு மாணவர்கள், கொட்டம் அடித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் கொட்டத்திற்குக் காரணம் இரண்டு. ஒன்று, அவர்கள் வகுப்பாசிரியர் வரவில்லை. இரண்டாவது, அன்றுஅவர்கள் வகுப்பில்புதியமாணவன் ஒருவன் வந்து சேர்ந்திருந்தான்.

அவனுக்கு வயதுக்குஏற்றவளர்ச்சி இல்லை. அப்புதிய மாணவன் பெயர் ஸ்ரீதர். குள்ளமாக இருந்த அவனைப் பெரிய மாணவர்கள் கிண்டல் செய்து சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தனர்.

''தம்பி, நீ எட்டாவது வகுப்புக்குத் தவறுதலாக வந்துட்டே போல இருக்கே!'' என்றான் முரளி சுந்தரம்.

''ஸ்ரீதர்... நீ அம்மாவை விட்டுட்டு கொண்டிருந்தனர். அகத்தியர்' 'குள்ளக்கத்திரிக்காய்' என்று பட்டப் பெயர்கள் வேறு சூட்டி மகிழ்ந்தனர்.

அன்று பள்ளியே அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது. பள்ளிக்கண்காணிப்பாளர் அவர்கள் பள்ளிக்கு வருவதாக இருந்தது. வகுப்பாசிரியர் மிகச் சிரமத்துடன் எல்லாப் பாடங்களையும் சொல்லிக் கொடுத்திருந்தார்.

எட்டாம் வகுப்பு. தலைமை ஆசிரியர், பள்ளிக் கண்காணிப்பாளர் இருவரும் நுழைந்தனர். வகுப்பு மிக அமைதியாக இருந்தது. கேள்விகள் கேட்கப்பட்டன. கண்காணிப்பாளர் யாரைக் கேட்டாரோ, அவன் பதில் சொல்ல முடியாமல் விழித்தான். ''வேறு யாராவது பதில் சொல்ல முடி

இப்பொழுது மற்ற மாணவர்களின் கிண்டல் கொஞ்சம் குறைந்திருந்தது. ஆயினும்சிலர் கேலிசெய்துகொண்டு தான் இருந்தனர்.

''தம்பி... நீ பெரிய அறிவாளின்னு நினைத்துக் கொள்ள வேண்டாம். அன்று ஏதோ ஒப்பிச்சிட்ட....'' என்றான் பாலாஜி.

வகுப்புத் தேர்வுகள், அரையாண்டுத் தேர்வுகள் எல்லாவற்றிலும் ஸ்ரீதரன்தான் முதல் மதிப்பெண். மாணவர்கள் முழுத் தேர்வுகளுக்குக் கவனமாகப் படித்துக் கொண்டிருந்தனர்.


அன்று வகுப்பாசிரியர் உள்ளே நுழைந்ததும், ''ஒரு முக்கிய செய்தி,'' என்றார். ''நம்ம பள்ளிக்கு வயது 25... இந்த வருடம் நிறையப் போட்டிகள் வைக்கப்போகிறோம். நாடகம், பேச்சுப்போட்டி, பாட்டுப்போட்டி... நீங்க அனைவரும் கலந்துக் கொள்ள வேண்டும்,'' என்றார்.

மாணவர்கள் உற்சாகமாகக் கலந்து கொண்டனர்.

ஸ்ரீதரன் நிறையப் பரிசுகள் வாங்கினான். ஆண்டு விழாவில், ''ஸ்ரீதர்...'', ''ஸ்ரீதர்..'' என்று அவன் பெயரையே கூப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

ஸ்ரீதரன் பரிசுகள் வாங்கிக் குவித்துக் கொண்டிருந்தான்.

ஸ்ரீதரனின் வகுப்பாசிரியர் பேச ஆரம்பித்தார். ''என் வகுப்பு மாணவன் ஸ்ரீதரன் நிறையப் பரிசுகள் வாங்கியது குறித்து நான் பெருமைப் படுகிறேன். உங்களுக்குத் தெரியாத சில



வந்திட்டாயே...பாதிவகுப்புல அம்மா ஞாபகம் வந்து அழக் கூடாது..." என்று கிண்டலடித்தான் சிராஜ்.

ஸ்ரீதர் எதையும் இலட்சியம் செய்ய வில்லை. அவன் வருத்தப்படவும் இல்லை. மாறாக, புன்னகையோடு அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தான். திடீரென அவன் தந்தைக்குச் சென்னைக்கு மாற்றல் ஆகவே, அவனும் புதிய பள்ளியில் சேர வேண்டியதாயிற்று.

நாட்கள் ஓடின. ஆனால் ஸ்ரீதர் வகுப்புமாணவர்கள் மாறவேயில்லை. தினமும் ஸ்ரீதரைக் கேலி செய்து யுமா?" என்றார்.

"முடியும்," என்ற பதில் ஸ்ரீதரிட மிருந்து வந்தது.

"சொல் தம்பி... முதலில் உன் பெயரைச் சொல்."

பெயரைச் சொன்னான். பின் சரியாக விடையையும் சொன்னான்.

அடுத்த அரை மணி நேரம். மற்ற மாணவர்களால் பதில் சொல்ல முடியாத கேள்விகளுக்கு ஸ்ரீதரன் தைரியமாகப் பதில் சொன்னான்.

எல்லோருக்கும் வியப்பு, சந்தோஷம். கண்காணிப்பாளரும் மகிழ்ச்சியுடன் சென்று விட்டார்.

சில நாட்கள் ஓடின.

ஸ்ரீதரன் சிறுகதைகள், கவிதைகள் எழுதும் திறன் பெற்றவன். அதைத் தவிர அவன் பொறுமை என்னை வியக்க வைக்கிறது. ஆம், எனக்கு இன்றுதான் தெரிய வந்தது. அவன் வகுப்பு மாணவர்கள் அவனைக் குள்ளமாக இருக்கிறான் என்று தினமும் கேலி பேசி இருந்திருக்கின்றனர் என்று. அவன் உருவத்தில் சிறியவனாக இருக்கலாம். ஆனால் ஆற்றலில் பெரியவன். மகிழம்பூவை விடத் தாழம்பூ பெரியது... ஆனால் மகிழம் பூவின் வாசனை இனிது. கடல் பெரிதுதான். அதன் அருகில் உள்ள ஊற்று நீர் சுவை கடலுக்கு வருமா? எனவே உருவம் கண்டு எள்ளக் கூடாது."


பாலாஜி, சிராஜ், முரளிசுந்தரம் ஆகிய மாணவர்கள் தலை குனிந்து கொண்டனர். எவ்வளவு பெரிய தவறு செய்தோம் என்று புரிந்து கொண்டனர். அவர்கள் கண்களில் நீர்.... அதில் அவர்கள் தீய பழக்கம் கரைந்து ஓடியது.

மடல் பெரிது தாழை;
மகிழ் இனிது கந்தம்
உடல் சிறியர் என்று
இருக்க வேண்டா — கடல்
மண்ணீரும் ஆகாது:
அதன் அருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகிவிடும்.

— மூதுரை; ஔவையார்

ஓர் அரும்பு பிரார்த்திக்கிறது!

மம்சாபுரம் துரை அழகர்சாமி



கலா மகிழ்ச்சிப் பெருக்கில் திந்தினாள். அன்று அவளின் எட்டாவது பிறந்த நாள். அம்மா ஸ்வீட் மழை பொழிந்தாள். அழகான பாலியெஸ்டர் மாக்ஸியைப் பிறந்த நாள் பரிசாகத் தந்தார். அதை அணிந்து கொண்டு ஆளுயர நிலைக் கண்ணாடியில் பார்த்த கலாவுக்கு,பள்ளி செல்ல நேரமாகிறதே என்ற நினைவு வந்தது. புத்தகங்களையும் குறிப்பேடுகளையும் பையில் திணித்துக் கொண்டு, ''அப்பா!'' என்று செல்லமாக அழைத்தாள்.

''என்னம்மா கண்ணு, ஸ்கூலுக்குக் கிளம்பிட்டியா?'' என்றார் மாதவன் அன்பொழுக.

''இன்னிக்கு ஒரு நாள் லீவு போடக் கூடாதா கலா?.... மத்தியானம் வடை பாயசம் பண்றேன். சாயந்திரம் கோவிலுக்கு உன்னை அழைச்சிட்டுப் போறேன்,'' என்றாள் பாகீரதி.

''எனக்குப் பிறந்த நாள்.... லீவு போட்டுடலாம்..... என் ஃப்ரண்ட்ஸுக்கெல்லாம் ஸ்வீட் தரணும்.... எங்க மிஸ் என்னை வாழ்த்துவாங்க. ஸ்கூலுக்குப் போகலேன்னா பிறந்த நாள் மறந்துடுமே? அப்புறம் அடுத்த வருஷம்தானே வரும்? நான் ஸ்கூலுக்குப் போறேம்மா,'' என்று அவள் சொல்லி முடிக்க வில்லை.

வாசலில் ஹாரன் ஒலி!

''எங்க ஸ்கூல் பஸ் வந்துடுத்து அப்பா!'' என்று கூறிய கலா, அப்பாவின் கன்னத்திலும் டிபன் பாக்ஸைத் தந்த அம்மாவின் கன்னத்திலும் அன்புடன் முத்த மிட்டாள். புத்தகப் பையையும் டிபன் பாக்ஸையும் எடுத்துக் கொண்டு ஓடிச் சென்று பள்ளிப் பேருந்தில் ஏறிக் கொண்டாள். பள்ளியில் அவள் நுழைந்த போது அவளைச் சூழ்ந்து கொண்ட பள்ளித் தோழிகள் 'ஹாப்பி பர்த்டே டு யு' பாடினார்கள். அவளின் கண்ணைக் கவரும் புத்தம் புதிய பாலியெஸ்டர் 'மாக்ஸி'யைத் தொட்டுத் தொட்டுப் பார்த்து, ''நைஸ்! வெரி நைஸ்! ஃபென்டாஸ்டிக்! மார்வலஸ்! எக்ஸலண்ட்!'' என்று பாராட்டு மழை பொழிந்தார்கள்.

புத்தகப் பையினுள் முன்தினமே பத்திரமாய் வைத்திருந்த பொட்டலத்தைப் பிரித்த கலா, சிறுமியர் அனைவருக்கும் பாரிமிட்டாய்களை வழங்கினாள்.

பள்ளியின் காலைப் பிரார்த்தனை முடிந்து வகுப்பறைகளுக்குச் சென்றார்கள் மாணவியர். மூன்றாம் வகுப்பறையினுள் நுழைந்த கலா வகுப்பாசிரியையின் அருகில் சென்று, ''குட் மார்னிங் மேடம்.... இன்னிக்கு என் பிறந்த நாள்.... இந்தாங்க மிட்டாய்,'' என்று கூறியபடி மிட்டாய் தந்தாள்.

''ஓ! கிளாட்.... ஐ விஷ்யு மெனி ஹாப்பி ரிட்டர்ன்ஸ் ஆஃப் தி டே...'' என்று கலாவை வாழ்த்திய ஆசிரியை வருகைப் பதிவேட்டை எடுத்து, மாணவியரின் பெயர்களை ஒவ்வொன்றாகக் கூவியழைத்து வகுப்பின் வருகைப் பதிவை முடித்தார்.

பாடங்கள் தொடங்கின. அன்று



வினாக்கள் யாவும் கலாவிடம் தான் கேட்கப்பட்டன. அவள்தான் நன்றாகப் படிப்பவள் ஆயிற்றே! ஒவ்வொரு கேள்விக்கும் 'டாண் டாண்' என்று விடையளித்தாள். மற்ற மாணவிகள் எல்லோரும் கலாவையே பார்த்துக் கொண்டிருந்தனர். ஏனென்றால் ஆசிரியை அவர்களிடம் கேட்ட ஒன்றிரண்டு கேள்விகளுக்குக் கூட அவர்கள் யாருமே பதில் சொல்ல

வில்லை.

"பார்த்தீர்களா? கலாவுக்கு இன்னிக்கு பர்த் டே. அவள் பாடங்களை ஒழுங்காப் படிச்சிட்டு வந்திருக்கா. நீட்டா ஹோம்ஒர்க் செஞ்சிருக்கா. அதான் அவள் எல்லாக் கேள்விகளுக்கும்சரியா விடைசொல்லிட்டா. நீங்கள்லாம் நேற்று ராத்திரி ஒண்ணுமே படிக்கலே. அதான் இப்படி மரம் மாதிரி நிக்கறீங்க... ஸிட் டவுன்," என்று கூறி மாணவியரைக் கடிந்து கொண்ட மூன்றாம் வகுப்பு ஆசிரியை, பள்ளியின் ஏவலரைக் கடைக்கனுப்பி ஒரு அழகான காந்தி பொம்மையை வாங்கி வரச் செய்து அதைக் கலாவுக்குத் தமது அன்பளிப் பாகத் தந்தார்.

கலாவுக்கு அளவில்லா மகிழ்ச்சி... "தாங்க்ஸ் எ லாட் மேடம்.... காந்தித் தாத்தாவை எனக்கு ரொம்பப் பிடிக்கும் ஏன்னா, 'நம்ம நாட்டிலே ஏழைகள் போடறத்துக்கு சட்டையில்லாமே இருக்கறப்ப எனக்கெதுக்கு சட்டை, கோட்டு, டர்பன் எல்லாம்'ன்னு எல்லாத்தையும் கழட்டி எறிஞ்சிட்டு, இடுப்பிலே ஒரு வேட்டியை மட்டும் கட்டிக்கிட்டு, நாட்டுக்காக உழைச்சவராமே.... அப்பா சொல்லியிருக்கார்," என்றாள்.

மதிய உணவு வேளையில் (அப்போதெல்லாம் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டமோ, சத்துணவு திட்டமோ கிடையாது) கலாவைச் சுற்றி அமர்ந்த மாணவியர் அவரவர் டிபன் பாக்ஸ் மூடியைத் திறந்தனர்.

"பிறந்தால் கலாவைப் போலப் பிறக்கணும்.... உம்.... எங்க வீட்டிலே எப்பப் பாரு..... பழையதுதான்..." என்றாள் சாந்தி.

"அவளுக்கென்ன வீட்டிலே ரொம்ப வசதி. அம்மா அப்பா படிச்சவங்க.... அவங்கப்பா பெரிய தொழிலதிபர். எந்தக் குறையும் இல்லே.... ஒரு கவலையில்லே? அதான் நல்லாப் படிக்கறா..." இன்னொரு மாணவி கூறினாள்.


"நம்மளை மாதிரியா? ஸாரிப்பா.... என்னைப் போல யாரும் இல்லே... எங்கப்பா ஒரு கூலிக்காரர். ரொம்பக் குறைஞ்ச வருமானம். எங்கப்பா பாவம்.... எப்போ பாரு..... ஒரே 'இல்லைப் பாட்டு' தான்..... இன்னிக்கும் பழைய சோறுதான் கொண்டு வந்திருக்கேன். எல்லாரும் பார்த்துக்கோங்க," என்று கூறிய சாந்தி, தன் தூக்கைத் திறந்து எல்லோரிடமும் காட்டினாள்.

கலா உடனே டிபன் பாக்ஸிலிருந்து பாதி எலுமிச்சை சாதத்தை எடுத்து மூடியில் போட்டு அவளிடம் தந்து

"டேய் சாந்தி, நான் எச்சல் பண்ணலேடா. நீ சாப்பிடு உன் பழைய சாதத்திலே கொஞ்சம் எனக்குக் கொடேன். நான் சாப்பிடறேன்," என்றாள்.

"உனக்கு எத்தனை நல்ல மனசு? உன் சாதத்தை நான் சாப்பிடறேன். என் சோற்றை உனக்கு நான் தர





* இங்கிலாந்திலே சிறந்த ராணுவ விருது விக்டோரியா கிராஸ்.
* உலகிலேயே மிக நீளமான எஸ்கலேட்டர் ஹாங்காங் தீவில் உள்ளது. இதன் நீளம் 745 அடி.
* டெலிபோன் இணைப்பு நம் நாட்டில் 1879—ம் ஆண்டு ஏற்பட்டது. கல்கத்தாவிற்கும் டைமண்ட் துறைமுகத்திற்கும் இடையே 34 கிலோ மீட்டர் தூரத்திற்கு இந்த இணைப்பு ஏற்படுத்தப்பட்டது.
* மைனாக்களில் பலவகை உண்டு. சுதேசி மைனா, ஆற்று மைனா, ரோஜா மைனா, காட்டு மைனா எனப் பல இனங்கள் இருந்தாலும் வீட்டில் வளர்ப்பது காட்டு மைனாதான். பிறர் குரலை அப்படியே காப்பி அடிக்கும் திறனுடையது மைனா.
* மிக வேகமாக ஓடக் கூடிய நாயின் பெயர் கிரேஹவுண்ட்.
* உலகிலேயே மிகப் பெரிய மருத்துவமனைக்கேந்திரம் சிகாகோவிலுள்ள 'டிஸ்ட்ரிக்ட் மெடிகல் சென்டர்'.
* கழுத்து மிக நீளமாக உள்ள ஒட்டகச்சிவிங்கிக்குக் கழுத்தில்

லேங்கலே.... தர்றேன்.... ஆனா நீ சாப்பிட மாட்டே....." என்றாள் சாந்தி.

"தாயேன்.... சாப்பிட்டுப் பார்க்கறேன்," என்று கூறியவாறே சாந்தியின் அலுமினியத் தூக்குப் பாத்திரத்தை வாங்கிய கலா அதிலிருந்து ஒரு கவளம் பழைய சோற்றை எடுத்து உண்டாள். ஆனால் அவள் கை மறுபடி தூக்கினுள் செல்லவில்லை. சாந்தியையே ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"பார்த்தாயா நான் சொன்னேனே.... என் சோற்றை நீ சாப்பிட மாட்டேன்னு..... உன்னாலே சாப்பிட முடியாது கலா... கொண்டா இப்படி..." என்று கூறித் தன் தூக்கை வாங்கிக் கொண்டாள் சாந்தி.

"தினம் இதையே எப்படிச் சாப்பிடறே சாந்தி?" என்று வினவி வியந்த கலா, அவள் நிலைக்காகப் பெரிதும் வருதினாள்.

அந்தச் சம்பவத்துக்குப் பின் கலாவின் போக்கில் பெரும் மாற்றம். வீட்டில் சரியாகச் சாப்பிடுவதில்லை, விலை உயர்ந்த ஆடையணிகளை விரும்பி அணிவதில்லை. விலை மலிவான பருத்தி ஆடைகளைக் கேட்டு வாங்கி அணிந்தாள். எப்போதும் ஏதோ சிந்தனையிலாழ்ந்தவளைப் போல் காணப் பட்டாள்.

பள்ளியிலும் முன்பிருந்தது மாதிரி கல கலப்பாக அவள் இருக்க வில்லை என்றும் கேள்விப் பட்ட போது அதற்கான காரணம் புரியாமல் பெற்றோர் கலங்கிப் போய் விட்டனர்.

கலாவின் அப்பா மாதவன் தன் குடும்ப மருத்துவர் டாக்டர் சங்கர நாராயணனிடம் அவளை அழைத்துச் சென்றார். கலாவைப் பரிசோதித்த டாக்டர், அவளுக்கு உடலில் எவ்வித மான கோளாறும் இல்லை என்று கூறி விட்டார். ஆனால் மனம் தான் ஏதோ சில காரணங்களால் பாதிக்கப் பட்டிருக்க வேண்டும் என்று கூறி நகரில் மிகச் சிறந்த மனநோய் மருத்துவர் டாக்டர் மகாதேவனிடம் கலாவைக் காட்டுமாறு சிபாரிசு செய்தார்.

சைக்யாட்ரிஸ்ட் டாக்டர் மகாதேவன் கலாவை மிக அன்புடன் தம் மருகில் அமர்த்திக் கொண்டு,

"கலாக் குட்டி! காலையிலே என்ன சாப்பிட்டேன்னு சொல்லேன்" என்றார்.

"ரவா கேசரி கொஞ்சம்.... அப்புறம் சாப்பாத்தி...." என்றாள் கலா.

"குருமா போட்டுக்கலையா?" என்று வினவினார் அவர்.

"போட்டாளே அம்மா," என்றாள் கலா.

"கேசரி இத்தனூண்டு சாப்பிட்டா.... சப்பாத்தி ஒண்ணு கூடச் சரியா சாப்பிடலே," என்று குறுகிட்டார் மாதவன்.

"ஏன்?"

"என் கூடப் படிக்கிற சாந்தி பாவம். தினம் பழைய சோத்தைத் தான் சாப்

ஏழு கழுத்தெலும்புகள் மட்டுமே உள்ளன. ஆனால் குட்டைக் கழுத்துள்ள குருவிகளுக்குப் பதினான்கு கழுத்தெலும்புகள்.

* முதலைக்கு வாழ்நாள் பூராவும் பற்கள் விழுவதும் முளைப்பதுமாக இருக்கும். பல் என்பது முதலைக்கு மிக மிக அவசியமான ஒன்று.
* தேனீக்கள் விநாடிக்கு 250 முறை தனது சிறகை அடித்துக் கொள்கிறது.
* வேழம், மாதங்கம், சிந்துரம், களபன், ஆம்பல், தந்தி, அப்பமா, கைம்மா, வாரணம், அத்தி, மத்தகம், இபம் இத்தனை சொற்களும் யானையைக் குறிக்கும்.
* ராகூன் என்று ஒருவகை மிருகம். இது சாப்பிடும் பொருளைத் தண்ணீரில் போட்டுக் கழுவிச் சுத்தம் செய்த பிறகே சாப்பிடும்.
* திமிங்கிலக் குட்டி பிறந்த ஒரே ஆண்டில் தாயின் எடையில் பாதி அளவு வளர்ந்து விடும்!

— எஸ். மாதவன், திருச்சி — 14.



கபடி

• 1990ம் ஆண்டு பெய்ஜிங் நகரில் நடைபெற உள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கபடியும் ஒரு போட்டியாகச் சேர்க்கப்பட்டுள்ளது. கபடிப் போட்டியிலாவது இந்தியா பதக்கம் ஏதாவது பெறுமா?

பிடறா... நாமெல்லாம் வகை வகையா வாய்க்கு ருசியா சாப்பிடறதினால்தானே அவளெல்லாம் பழையது சாப்பிடறான்னு நெனச்சி அழுதுட்டேன் அன்னிக்கு. அதிலேர்ந்து எனக்குச் சாப்பிடவே பிடிக்கலே...'' என்று கூறிய கலா கேவிக் கேவி அழுதாள்.

சைக்யாட்ரிஸ்ட் டாக்டர் மகாதேவனின் பரிசோதனை நிறைவுற்றதை அவர் முகத்தின் மலர்ச்சி காட்டியது. இனி என்ன செய்ய வேண்டும் என்பதை மாதவனுக்கு ஆங்கிலத்தில் கூறினார் அவர். கலாவுக்கு நல்ல டானிக் ஒன்றைத் தந்து, ''இந்த டானிக்கை தினம் ஒரு வேளை சாப்பிடும்மா கலா.... உணவின் மேல் உனக்கு இருக்கற 'அலர்ஜி' போயிடும். அப்புறம் நீ நல்லா சாப்பிடுவே" என்றார்.

அவ்வப்போது கிடைத்த கூலி வேலையில் கஷ்ட வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த சாந்தியின் தந்தை குப்புசாமியையும், அவரைப் போலவே, கலாவின் வகுப்புத் தோழிகள் சிலரின் ஏழைத் தகப்பன்மாரையும் அழைத்து, தாம் புதிதாகத் தொடங்கிய தொழிற்சாலையில் நிரந்தரமாக அவர்களுக்கு வேலை தந்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திய மாதவனை ஊரே போற்றியது.

''புண்ணியவான்... ஏழைகளுக்கு இரங்கும் இனியவர்... நல்லாயிருக்கணும் அவர்... அவரோட பிள்ளை குட்டியெல்லாம் நல்லாயிருக்கணும்...'' என்று எத்தனையோ பேர் வாழ்த்துவதைக் கேட்ட கலாவின் போக்கில் வியக்கத்தக்க மாறுதல் தெரிந்தது.

உணவுப் பதார்த்தங்களை முன்போல் வெறுக்கவில்லை. அணில் கொறித்தாற் போல் கொறித்துக் கொண்டிருக்கவில்லை. நன்றாகச் சாப்பிட்டாள். மகிழ்ச்சியுடன் பள்ளிக்குச் சென்றாள்.

அவர்கள் ஓரளவு வசதி படைத்தவர்களாக இருந்ததனால் கலாவின் மன நோயைக் கண்டுணர்ந்து அதற்கான சிகிச்சையை அவளறியாமலே செய்து அவளைக் குணமாக்கி விட்டனர்.

ஆனால் நாட்டில் உள்ள ஏழை மக்களுக்கெல்லாம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தைத் தங்களால் உயர்த்த இயலாதே என்ற கவலை அவர்களுக்கு இருந்தது. அதை கலாவுக்கு எப்படிப் புரிய வைப்பது என்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருந்தனர்.

அன்று பள்ளியில் கலாவை மாதிரியே பள்ளிச் சீருடை அணிந்து வந்த சாந்தியையும், இன்னும் பல மாணவியரையும் கண்டு, மகிழ்ச்சியுடன்....

''ஏன் சாந்தி! எங்கப்பா ஃபாக்டரிலே உங்கப்பாவுக்கும், இன்னும் நம்ம ஃப்ரண்ட்ஸோட அப்பாமாருக்கும் வேலை தந்து ஆதரிச்ச மாதிரி நம்ம நாட்டிலே உள்ள பணக்காரங்கள்லாம் நம் நாட்டிலே உள்ள ஏழைகளை அன்பா ஆதரிச்சா நம்ம நாட்டிலே ஏழைகளே இருக்க மாட்டாங்கல்ல...? நம் நாட்டிலே வறுமை ஒழிஞ்சு சுபிட்சம் வந்துடாதா?'' என்று வினவினாள் கலா.

''வந்து விடும் கலா... ஆனா உங்கப்பா மாதிரி நம்ம நாட்டிலே உள்ள பணக்காரர்கள் எல்லாம் மனசு வைக்கணும்... அதுக்கு நாம் வீணாக் கவலைப்படறதை விட ஒண்ணு செய்யலாம். 'கடவுளே! மாதவன் என்கிற நல்ல மனிதரை மாதிரி, இந்த நாட்டில் இருக்கும் செல்வந்தர்கள் எல்லோரையும், ஏழைகளுக்கு உதவுகின்றவர்களாக மாற்றும்...' என்று பிரார்த்தனை செய்...'' என்றாள் சாந்தி.

கலாவின் இப்போதைய தினசரி பிரார்த்தனை இதுதான். 'கடவுளே! இந்த நாட்டிலே இருக்கற பணக்காரங்களையெல்லாம் எங்கப்பா மாதிரி ஏழைகள்கிட்டே இரக்கம் காட்டுறவர்களாக மாற்றும்...'



உபமன்யு முனிவர் ஆசிரமம்...
தவசிரேஷ்டரே! எங்களுக்குச் சிவபக்தர்கள் கதையைக் கேட்க ஆவலாய் இருக்கிறது...
இளம் முனிகுமாரர்கள், ரிஷிகள் ஆகியோர் ஆசையைப் பூர்த்தி செய்தார் உபமன்யு...
நல்லது... பக்தனுடைய கதையைக் கேட்பது நம் பக்தியையும் தூண்டி விடும்...
...சிவபக்தியால் உள்ளத் தூய்மை அடைந்தவன் எந்தக் குலத்தில் பிறந்தவன் ஆனாலும் வேதங்களைப் படித்தவனை விடச் சிறந்தவன் ஆவான்!
அது எப்படி?
எடுத்துக்காட்டாக நந்தன் சரித்திரத்தைக் கூறுகிறேன். கேளுங்கள்! சோழ நாட்டில் ஆதனூர் என்று ஒரு கிராமம்...
அங்கு நாற்பது வேலி நிலத்துக்குச் சொந்தக்காரரான வேதியர் ஒருவர் இருந்தார்...
நந்தா! பயிர் முற்றிச் சாய்ந்து விட்டதே...!
பக்த நந்தனார்
கதை: ஆனந்தி
படம்: விஷு


உடனே அறுவடைக்கு ஆட்களை அழைத்து வா...
செய்யறேனுங்க...
பயிர் அறுவடையாகி...
உம்... உம்... ...சீக்கிரம்...
களத்து மேட்டில் போரடித்தார்கள்...
நந்தா! இந்த ஆண்டு நல்ல விளைச்சல். ஆட்களுக்கெல்லாம் பதக்கு நெல் அளந்து போடு!
ஆகட்டும் ஐயா! கொள்ளிடத்துப் பாசனம்; ஈசன் கருணை!
என்னடா, ஏதோ வேதாந்தி போல் பேசுகிறாய்!
வேதியர் ஏளனம் செய்தார்...
இருளன், காத்தவராயன் என்று கும்பிடுகிற குலத்தில் பிறந்து விட்டு ஈசன் கருணை என்கிறாயே! நல்ல வேடிக்கை!


வேதியரின் கேலியை
நந்தன் பொருட்படுத்தவில்லை..
கொள்ளிடத்தில் குளித்து,
திருநீறு அணிந்து, கோயில்
கைங்கர்யம் செய்ய வேணும்...
நந்தா நேரமாச்சு!
ஆண்டை காத்திருப்பார்!
நீ சீக்கிரம் போ! நான்
கோயிலுக்குப் போயிட்டு
வந்திடறேன்... எசமான்
கேட்டா சொல்லு..
கோயில் வாசலில்
குருக்கள்...
தள்ளி நில்லு!
என்ன வேணும்?
சுவாமி! கோயில் வாத்தியத்
துக்குத் தோலும் நரம்பும்
கொண்டு வந்திருக்கேன்...
சிவ!
சிவா!
மேளக்
காரனிடம்.
கொடுத்துட்டுப்
போ!
சரிங்க,
ஐயா!
மேளக்காரர்...
தோல் பதமா
இருக்கா?
நல்லா இருக்குது சாமி! நீங்க
பாக்கிய சாலிங்க... வாத்தியம்
வாசிச்சு சிவகைங்கர்யம்
பண்ணறீங்க...



நீயும் தான் கோயில் வாத்தியத்துக்குத் தோலும் நரம்பும் தந்து கைங்கர்யம் பண்ணுகிறாய்... சுவாமி உன்னால்தானே பாட்டுக் கேட்கிறார்!
நந்தன் வணங்கி விடை பெற்றுப் போன பிறகு...
நந்தனுக்கு எவ்வளவு பக்தி!
அதுசரி, அவன் குல தெய்வத்தைக் கும்பிட்டா நல்லது... திருநீறும் பஞ்சாட்சரமும் சிவ பக்தியும் எதுக்கு.....?
ஆனால் நந்தனின் சிவபக்தி நாளுக்கு நாள் வளர.....
திருப்புன்கூர் கொஞ்ச தூரத்திலே தானே இருக்கும். அங்கே கோயில் கொண்டிருக்கும் சிவலோக நாதரை தரிசிக்க வேணும்...
இருளா! ஆண்டி! முத்துமாரி! எல்லாரும் வாங்க...
எங்கே வரணும்?
சிவலோக நாதனைக் கண்டு சேவித்திடுவோம் வாரீர்....!
நமக்கு எதுக்கு அண்ணே சிவ தரிசனம்?


அப்படிச் சொல்லாதே! 'அரகரோகரா'ன்னு சொல்லு! எல்லாரும் சொல்லுங்க. கூட்டமா வாங்க!
நந்தனாரின் பக்தியால் கவரப்பட்டவர்கள் அவருடன் சென்றனர்.
அரகரா! சிவசிவா!
அரகரோகரா!
திருப்புன்கூரை அடைந்தனர்...
திரிபுராந்தகா! சுந்தரா!
அரகரோகரா!
கோவில் வாசலைக் கண்டனர்...
அண்ணே! இதென்ன இம்மாம் பெரிய மாடு!
சந்நிதியை மறைக்குதே!
தாழ்ந்த குலம் என்று கருதப் பட்டவர்கள் கோவிலுக்குள் செல்ல அந்நாளில் அனுமதி இல்லை.
வெளியே நின்னு கூடச் சாமியைப் பார்க்க முடியாதே!
மாட்டு வாலைப் பார்க்கவா இம்மாந் தூரம் வந்தோம்!


நான் செய்த பாவங்கள் தான் இப்படி மலை போன்ற மாடுவடிவமாகக் கிடந்து சுவாமியைத்தரிசிக்க விடாமல் பண்ணுகிறதா?
நந்தன் நெஞ்சுருகிப் பாடினான்..
வழி மறைத்திருக்குதே மலை போலே ஒரு மாடு படுத்திருக்குதே!..
நந்தன் பக்தியில் மகிழ்ந்த சிவபெருமான்... கைலாசத்தில் நந்தியை நோக்கி...
சற்றே விலகி இரும் பிள்ளாய் சந்நிதானம் மறைக்குதாம்!
திருப்புன்கூரில்...
ஈசனே! இந்த நந்தி ஒரு அடி விலகினாலும் போதுமே! உங்களைத் தரிசித்துக் கொள்வோமே!
அப்போது ஓர் அற்புதம் நிகழ்ந்தது... நந்தி நகர்ந்து கொள்ள, கருவறை ஜோதி மயமாகத் தெரிந்தது...


நந்தனும் நண்பர்களும் பரவசமானார்கள்....
அரகரோகரா!
நந்தனார் ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார்...
பிறவிப்பயன் பெற்றேன்!
திருப்புன்கூர் கோயில் எதிரில் ஒரு குட்டை இருந்தது...
இந்தக் குட்டையை ஒரு திருக்குளமாக வெட்டினால் நன்மாயிருக்குமே...!
எல்லாரும் எனக்கு உதவுங்கள்... கோயிலுக்கு ஏற்ற திருக் குளம் அமைப்போம்!
அண்ணே! உனக்கென்ன பைத்தியம் பிடிச்சிருக்கா...?
குளம் வெட்டப் பத்து நாள் ஆகும்... வேலைக்குப் போகலைன்னா ஆண்டை சும்மா இருப்பாரா?



வேலை போயிடும்; கூழு கஞ்சி கூடக் கிடைக்காது! குழந்தை குட்டிங்க கதி என்ன?
குளம் வெட்டிட்டுத் தான் போகணும்.
கைலாசத்தில்...
விநாயகா! நம் பக்தன் நந்தன் திருக்குளம் வெட்ட ஆசைப்படுகிறான்... நீ போய் உதவி செய்கிறாயா!
ஓ!
முருகன்...
நானும் செல்லுகிறேன், அப்பா!
அப்படியே செய்!
கோவிலுக்குள்ளிருந்து இருவர் கடப்பாரை, மண்வெட்டிகளைச் சுமந்து கொண்டு வந்தனர்...
நீங்க யாருப்பா?
கூலி ஆளுங்க சாமி!
திருக்குளம் வெட்ட உதவுறீங்களா? படி நெல்தான் கூலி தரமுடியும்
கோவில் குளம் வெட்டறது சிவ புண்ணியம்.
நீங்க கொடுக்கிற கூலி போதும்!


கூலியாட்கள் இருவரும் சுறுசுறுப்பாக இயங்கினர்...
முருகா! ஆழமா வெட்டணும்! கடப்பாறையைப் பலமாப் போடு!
என் வேலையில் பழுது இருக்காது. நீ கவனமா இரு!
குளக்கரையில் அமர்ந்த நந்தனார் நிஷ்டையில் ஆழ்ந்து விட்டார்....
நந்தனாருடன் வந்த மற்றவர்கள் கூலியாட்கள் இருவருக்கும் உதவினர்...
ஆச்சர்யமா இருக்கே! இவங்க இரண்டுபேர் வேகத்துக்கும் நம்மால் ஈடு கொடுக்க முடியலையே!
நந்தனார் தியானம் கலைந்து குளமும் படித்துறையும் கண்டு...
என் கண்களையே நம்ப முடியலையே! அந்த இருவரும் எங்கே?
மண்வெட்டியைத் தோளில் போட்டுக்கிட்டுக் கோயில் வாசல் பக்கமாப் போனாங்க...




நந்தனார் மனம் நெகிழ்ந்தது...
இது தெய்வச் செயல்தான். ஒரே நாளில் நம்மால் இப்படி குளம் வெட்ட முடியுமா?
முடியவே, முடியாது!
எல்லோரும் கோவிலை வலம் வந்து வணங்கினார்கள்...
அரகரா! சிவசிவா!
அரகரோகரா!
சிலகாலம் சென்று... நந்தனாருக்குச் சிதம்பரம் போக ஆசை உண்டாயிற்று...
திருச்சிற்றம்பலம்!
நாளைப்போகாமல் இருப்பேனோ? நாளை வீணாகக் கழிப்பேனோ!
ஊர்ப்பெரியவர்...
நந்தா! இதென்ன பித்து உனக்கு? சிதம்பரம் எம்மாந்தூரம் இருக்கு! எப்படிப் போவ?
கோபுரதரிசனமாவது செய்து திரும்பணும்....
நந்தனார் ஆர்வத்தை அடக்க முடியாமல் கிளம்பி விட்டார்...
எல்லோரும் வாருங்கள்... சுகமிருக்குது பாருங்கள்!


நந்தனாரின் அழைப்பை ஏற்றுப் பலர் அவரோடு புறப்பட்டனர்...
நல்லோர் பணிந்திடும் தில்லையம்பல நாதன் பாதம் பணிந்து கொள்வோம்!
ஆனால் ஊர்ப்பெரியவர் தடுத்து விட்டார்...
நந்தா! நம் குலவழக்கம் வேறு... பார்ப்பார் வழக்கம் வேறு... நமக்கு வேதஞ் சொல்லத் தெரியுமா? பூஜை பண்ணத் தெரியுமா?
நந்தனார் சோர்ந்து போனார்.
சேரிப் பெரியவரைப் பகைத்துக் கொள்ள முடியவில்லை. சிவனே தெய்வம்! சிதம்பரமே கைலாசம்! இது இவர்களுக்குத் தெரியவில்லை.
நந்தனாரை உற்சாகப் படுத்த எண்ணி, கிழவர் அவரைக் காத்தவராயன் கோயிலுக்கு அழைத்துப் போனார்.
இங்கபாரு! நம்ம தெய்வம்!
சேரிப்பெரியவர் கூத்தாடினார்...
பாத்தி கட்டி விதை தெளிச்சு; தழுக்கடிச்சு, உண்டு களிச்சு; காத்தவராயனுக்குப் பொங்கல் படைச்சு; கள்ளு படைச்சு....



நந்தனார் காதுகளைப் பொத்திக் கொண்டார்..
கள்ளு படைப்பதா! அபசாரம்! நம் பலவீனங்களைக் கடவுள் பேரிலும் சுமத்தலாமா?
நந்தனார் புத்தி சொன்னார்...
மீசை நரைத்துப் போச்சே – கிழவா ஆசை மறக்கலாச்சோ! அம்பலத்தரசனடா கிழவா ஆருந் தெய்வமடா!
கிழவனார் காதில் மந்திரம் ஓதினார் நந்தனார்...
இப்பத்தான் எனக்குக் கண் திறந்தது! சிவசிதம்பரம்! சிவ சிதம்பரம்!
அறியாமையால் கிராமத்தில் பலர் பயங்கரமான தெய்வங்களுக்குப் பூஜை போட்டார்கள்... பூசாரி...
மாடன், இருளன், பேயன் எல்லாரும் பலி கேட்கறாங்க! கறுப்பனும் மாரியும் கள்ளு கேக்கறாங்க!
கிராம மக்கள் கடவுளைத் திருப்திப்படுத்த எண்ணி...
இதோ பலி ஆடு!
பலி கொடுக்கக் கோழி கொண்டாந்தேன்!
சாமிக்குக் குடம் நிறையக் கள்ளு!


நந்தனார் இதைக் கண்டு கோபமடைந்தார்.
மடப்பசங்களா! கடவுள் கருணையே வடிவானவர்... அவர் ஆடுவெட்டச் சொல்வாரா? கள்ளு குடிப்பாரா?
பலசாலியான நந்தனார் ஆடு கோழிகளை விடுதலை செய்தார். கள்ளுப் பானையை உடைத்தார்...
இப்படியா சாமி கும்பிடுவது...?
எல்லாரும் நான் சொல்கிறபடி சொல்லுங்கள்... அரகர சிவ சிவ அம்பலவாணா...
...அம்பலவாணா!
அன்று முதல் எல்லாரும் சிவபக்தர் ஆனார்கள்... பஜனை செய்தார்கள்...
அனுதின மன்றுள் ஆடிய பாதா! பிழை பொறுத்தாளும் புண்ணியம் தாதா!
ஒரு நாள் வேதியரிடம் சிதம்பரம் போக நந்தனார் அனுமதி கேட்டார்...
பைத்தியக்காரா! உனக்குச் சிதம்பரமாவது, சிற்சபையாவது? போய் வேலையைப் பாரு!


ஆண்டே! தில்லை தரிசித்து வந்து உங்கள் எல்லையைக் காத்து நிற்பேன்! நாளை போகிறேன்...
சொன்னால் கேட்க மாட்டாய்? நாற்பது வேலி நிலமும் நடவு செய்து பயிர் விளைந்த பிறகு நீ சிதம்பரம் போகலாம்...!
நந்தனார் துயரத்துடன் திரும்பினார்....
அம்பலவாணா! உங்களைத் தரிசிக்காத இந்த ஜன்மம் இருந்தாலென்ன போனாலென்ன...
நந்தனார் கனவில்...
பூதகணங்கள் நடவு நட்டு விட்டனர்! வேதியருக்குக் காட்டும்!
மறுநாள் காலை நந்தனார் வேதியரை அழைத்து வந்தார்...
இதென்ன ஆச்சர்யம்! களை எடுக்காமல், தண்ணீர் பாய்ச்சாமல் கதிர் ஒரு முழம் விளைந்திருக்கிறதே!



நந்தா! உன் பெருமையறியாமல் உன்னைப் பைத்தியம் என்று பேசினேன்... என்னை மன்னித்து விடு!
'நாளைப் போவேன் நாளைப் போவேன்' என்று தினமும் கூறிவந்த நந்தனார் சிதம்பரத்துக்கு விரைந்தார்...
அம்பலவாணா! சிதம்பர நாதா! இதோ வருகிறேன்!
தில்லைக் கோபுரங்களைத் தரிசித்தார்...
ஆகும் சிதம்பரமே! - ஐயன் கூத் தாடும் சிதம்பரமே!
தில்லையை வலம் வந்த நந்தனார், தெற்கு கோபுர வாசலில் விழுந்து வணங்கினார்...
ஐயனே! என்னை ஏன் கீழ் சாதியில் பிறக்கச் செய்தாய்? உன்னைத்தரிசிக்க உள்ளே வர முடியாமல் தவிக்கிறேனே?
அன்றிரவு தில்லை வாழ் அந்தணர் மூவாயிரம் பேர் கனவிலும் நடராஜர் தோன்றினார்...
நந்தன் தன்னைக் கீழ் ஜாதி என்று எண்ணி பயந்து குளக்கரையில் இருக்கிறான்....



நீங்கள் எல்லாரும் போய் அவனை அழைத்து வாருங்கள். பக்திதான் முக்கியம், ஜாதி அல்ல என்பதை உலகுக்கு உணர்த்துங்கள்!
தில்லை வாழ் அந்தணர்கள் நந்தனைத் தேடினார்கள்...
இவனைப் பார்த்தால் பக்தனாகத் தெரிகிறது...
உன் பெயர் நந்தனா?
ஆம், ஐயா! கீழ் ஜாதியில் பிறந்து, ஆலயத்தில் பிரவேசிக்க முடியாமல் தவித்து, ஆண்டவன் தரிசனம் கிடைக்காமல் உருகும் பாவி நான்!
அப்படிச் சொல்லாதே! உன்னைவிட பாக்கியசாலி யார்? உன்னை அழைத்து வர நடராஜரே எங்களுக்குக் கட்டளையிட்டார்..!
தெய்வம் எனக்கும் இரங்கிற்றா!
நந்தனார், உடலாலும் உள்ளத்தாலும் பரிசுத்தமானவர். சந்நிதியில் பாதச் சிலம்பொலிக்க ஆனந்தக் கூத்தாடினார். இறுதியில் இறைவனுடன் ஜோதி வடிவமாகக் கலந்தார்.

லிதுவேனிய நாட்டுக் கதை:

நஷ்டத்தின மலை வேலை.



மூன்னொரு காலத்தில் ஒரு கிராமத்தில் ஒரு கிழவியும் அவளுடைய ஒரே மகனான மிராலியும் வசித்து வந்தனர். அவர்கள் பரம ஏழைகள். கிழவி கஷ்டப்பட்டு உழைத்து, தானும் தன் மகனும் சாப்பிடுவதற்கு எப்படியோ கொஞ்சம் சம்பாதித்தாள்.

மிராலி பெரியவனானதும் அவன் தாய், "மகனே, இனிமேல் வேலை செய்ய எனக்குத் தெம்பு இல்லை. ஆகவே நீ ஏதாவது வேலை தேடிக் கொண்டு உன் பிழைப்புக்கு வகை செய்துக்கொள்," என்றாள்.

சரியெனச் சொல்லி மிராலி வேலை தேடிச் சென்றான். எங்கும் வேலை கிடைக்காததால் முடிவில் அவன் ஒரு கோமானின் வீட்டுக்குச் சென்றான்.


"சாமி, வேலைக்கு ஆள் வேண்டுமா?" என்று மிராலி அவரைக் கேட்டான்.

"வேண்டும்," எனக்கூறி வேலைக்கு அமர்த்திக் கொண்டார் அந்தக் கோமான்.

மூன்று நாள் கழித்து அவர் அவனை எந்த வேலையும் செய்யச் சொல்ல வில்லை. மிராலிக்கு இது விபரீதமாக இருந்தது.

ஆகவே அவரிடம் சென்று, "எஜ

தமிழில்
அ. மாதவன்



மானே, எனக்கு வேலை ஒன்றும் இல்லையா?'' என்று கேட்டான்.

''இருக்கிறது. நாளைக்கு நீ என்னுடன் வரப் போகிறாய்,'' என்று அவர் பதிலளித்தார்.

மறுநாள் கோமான் ஒரு காளையைக் கொன்று தோலுரிக்கும் படி மிராலிக்கு உத்தரவிட்டார். அவன் இதைச் செய்து முடித்ததும், நான்கு பெரிய சாக்குகளை எடுத்து வரும் படியும், பிறகு இரண்டு ஒட்டகங்களைப் பயணத்திற்குத் தயார் செய்யும்படியும் சொன்னார்.

காளையின் தோலும் சாக்குகளும் ஓர் ஒட்டகத்தின் மீது வைக்கப்பட்டன. அவர்கள் அடுத்த ஒட்டகத்தின் மீது ஏறிச் சென்றனர்.

அது ஒரு நெடும் பயணம். அடுத்த அடுத்த ஊர்களைத் தாண்டிப் போனார்கள்.

ஒரு மலையின் அடிவாரத்தை அடைந்ததும் கோமான் ஒட்டங்களை நிறுத்தினார். மிராலி சாக்குகளையும் மாட்டுத் தோலையும் கீழே இறக்கினான். பிறகு கோமான் அவனைக் காளையின் தோலை உட்புறம் வெளிப்புறமாகும்படிப் புரட்டியெடுத்துப் போடச் சொல்லி, மிராலியை அதனுள் புகுந்து படுத்துக் கொள்ளச் சொன்னார்.

மிராலிக்கு ஏன் இப்படி கூறுகிறார் எனப் புரியவில்லை. ஆனால் எஜமானனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, புகுந்து படுத்துக் கொண்டான். மிராலியை உள்ளே வைத்துக் கட்டிவிட்டு ஒரு பாறையின் பின்னால் கோமான் மறைந்து கொண்டார்.

சிறிது நேரத்தில் இரு பெருங் கழுகுகள் அங்கே காளையின் மாமிச வாடை நோக்கி வந்தன. இராட்சதக் கழுகுகள்! அந்தத் தோலை அலகுகளால் கவ்வித் தூக்கிக் கொண்டு பறந்தன. எங்கே? யாரும் செல்ல முடியாத நவரத்தின மலை உச்சிக்குக் கொண்டு சென்றன. தன் அலகால் கிழித்தன.

தோல் பிரிந்ததும் மிராலி வெளி வந்தான். அவனைக் கண்டு பயந்து போன கழுகுகள், அந்தத் தோலைத் தூக்கிக் கொண்டு அங்கிருந்து வேறு எங்கோ பறந்துவிட்டன.

மிராலி எழுந்து நின்று சுற்று முற்றும் பார்த்தான். கீழே தரையிலிருந்த கோமான், ''ஏன் சும்மா நிற்கிறாய்? உன் காலடியில் கிடக்கும் வண்ணக் கற்களைப் பொறுக்கியெடுத்துக் கீழே போடு,'' என்று கத்தினார்.

மிராலி தன் காலடியில், பலவகை இரத்தினக் கற்கள் குவிந்திருப்பதைக் கண்டு வியந்தான். மிராலி அந்தக் கவர்ச்சியான இரத்தினத்தைக் கீழே பொறுக்கிப் போட்டான். கோமான் இரண்டு கோணிப் பைகளில் பொறுக்கி எடுத்து வைத்துக்கொண்டார்.

இரத்தினத்தைப் பொறுக்கிக் கீழே போட்டுக் கொண்டிருந்த மிராலிக்குத் திடுமென ஓர் எண்ணம் தோன்றியது. உடனே அவனுக்கும் பகீரென்றது.

''எஜமானே, இங்கிருந்து எப்படி நான் கீழே இறங்குவேன்?'' என்று பீதியுடன் கேட்டான்.

பொறுக்கிமுடித்த கோமான், ''ஏய் பையா, என் வேலையாட்களுக்கு இப்படித்தான் வேலை கொடுப்பேன். பார் உன் கூட எவ்வளவு பேர் மேலே உள்ளனர்!'' என்று குரூரமாய்க் கொக்கரித்து விட்டுக் கோமான் சென்று விட்டார்.

மிராலி தனியே விடப்பட்டான். சுற்றிலும் பார்த்தான். கைகால் எலும்புகளும் மனித மண்டைகளுமாக ஒடு மயமாகக் காட்சியளித்தது. கீழே இறங்குவதற்கு ஏதாவது வழி கிடைக்குமா கடவுளே! சுற்றிலும் பார்த்தான்.

திடுமென அவன் தலைக்கு மேல் சிறகுகள் அடிக்கும் சப்தம் கேட்டது. அவன் மேலே உராய்ந்து கொண்டு ஓர் இராட்சதக் கழுகு வந்தது. மிராலி புத்திசாலி. அந்தக் கழுகின் கால்களைக் கெட்டியாகப் பிடித்து கொண்டான். கழுகு மேலே எழுந்து சுற்றிச் சுற்றிப் பறந்து மிராலியைக் கீழே தள்ள முயன்றது. மிராலி பிடியை விடவில்லை. அதுவும் களைத்துப் போய் கீழே வந்து அமர்ந்த பிறகே மிராலி தன் பிடியை விட்டான்.

பயங்கரச் சாவிலிருந்து இவ்விதம்



மிராலி தப்பி விட்டான்!

சிறிது காலத்துக்கெல்லாம் மீண்டும் வேலை தேடி அலைந்து அவன் சந்தைப் பக்கம் சென்றபோது பழைய எஜமானனான அந்தக் கோமான் திடுமென அங்கே எதிரே வரக் கண்டான்.

"சாமி, வேலைக்கு ஆள் வேண்டுமா?" மிராலி அவரிடம் கேட்டான்.

தனது வேலையாள் யாரும் இது வரை மலையிலிருந்து திரும்பி வருவதில்லை என நினைத்து, வேறு யாரோ ஒரு பையனாக அவனைக் கருதிக் கொண்டு, அவனை மறுபடியும் வேலைக்கு அமர்த்தினார்.

மறுநாள் அதேபோல் காளையைக் கொன்று அதன் தோல், சாக்கு முதலியவற்றை ஒட்டகத்தின் மேல் வைத்து நவரத்தின மலைக்கு மிராலியைக் கோமான் கூட்டிச் சென்றார்.

இருவரும் போய்ச் சேர்ந்தவுடன் முன்பு போலவே மாட்டுத் தோலுக்குள் மிராலியைப் படுத்து கொள்ளும்படி சொன்னார்.

"எனக்குத் தெரியவில்லை, இதனுள் எப்படிப் படுப்பது என்று முதலில் நீங்கள் படுத்துக் காட்டுங்கள்," என்றான் மிராலி.

கோமானுக்குப் பண ஆசை. "இது கூடவா தெரியாது? இப்படித்தான் படுக்க வேண்டும்," என்று உள்ளே நன்றாகப் படுத்துக் காண்பித்தார்.

மிராலி அதுதான் சமயம் என அவரை அப்படியே கட்டிப் போட்டு விட்டான்.

இராட்சதக் கழுகுகள் மேலிருந்து பறந்து வந்து கல்வித் தோலைச் சாப்பிட மலை உச்சிக்குக் கொண்டு சென்றன.

மலையுச்சியில் ஒரு வழியாய்க் கழுகுகளின் பிடியிலிருந்து மீண்ட கோமான், மேலிருந்து அடிவாரத்தைப் பார்த்தார்.

மிராலி, "சாமி, நேரத்தை வீணாக்காதீர். உடனே அந்த இரத்தினக் கற்களை அள்ளிப் போடுங்கள்," என்றான்.

இப்போது கோமான் மிராலியை அடையாளம் தெரிந்து கொண்டார். "மலை உச்சியிலிருந்து எப்படி நீ கீழே இறங்கி வ ந் த ா ய்? சீக்கிரமாகச் சொல்." என அங்கிருந்து கத்தினார்.

"முதலில் இரத்தினங்களைப் பொறுக்கிக் கீழே போட்டால் தான் நான் இறங்கும் வழியைக் கூறுவேன்," என்றான் மிராலி.

கோமான் அழுது புலம்பியவாறே இரத்தினங்களைப் பொறுக்கிக் கீழே போட்டார். அவற்றை நிறைய எடுத்துச் சாக்குகளில் நிரப்பிக் கொண்ட மிராலி, சாவகாசமாக அவற்றைத் தூக்கி ஒட்டகத்தின் மேல் வைத்தான்.

"இறங்குவது எப்படி?" என்று கூவினார் கோமான். "கோமானே, அங்கே உம்மைச் சுற்றிலும் பாருங்கள். நீங்கள் செய்த துரோகத்தினால் உயிரிழந்த வேலையாட்களைப் பாருங்கள்! மலை உச்சியில் இருந்து எவ்வாறு இறங்குவது என அந்த எலும்புக்கூடுகளைக் கேளுங்கள்! நான் வீட்டுக்குப் போகிறேன்," எனக் கூறிக் கொண்டே மிராலி ஒட்டகத்தை ஓட்டிக்கொண்டு தன் தாயின் வீட்டை நோக்கிச் சென்றான்.

கோமான் மலை உச்சியில் அங்கும் இங்கும் ஓடி மிரட்டியும் கெஞ்சியும் பலவாறு கத்தினார். கத்தி என்ன பயன்? அவருடைய கத்தலைக் கேட்க அங்கே யாரும் இல்லையே!

நீங்களும் காளான்

நான் உங்களைப் போலச் சிறுவனாக இருந்தபோது தோட்டக் கலையில் மிக்க ஆர்வமுடையவனாக இருப்பேன். படிக்கும்போதும் தாவரவியலில் மற்றப் பாடங்களை விட அதிக மதிப்பெண் பெற்று இப்பொழுது தாவரவியல் முதுநிலைப் பட்டதாரியாகியுள்ளேன்.



• காளான் உருளை தயாரிக்க தேவை வைக்கோல், பாலிதீன் கவர், விதை

தாவரவியலில் அதிக ஆர்வம் இருந்ததால் காளான் பண்ணை அமைத்துக் காளானும், காளான் மூலவித்து, காளான் தாய்வித்து, காளான் வித்து போன்றவைகளைத் தயாரித்து நுணுக்கங்களையும் ஆராய்ந்து வருகிறேன்.



• இதோ, காளான் உருளை தயாரிக்கிறார்கள்

காளான் ஒரு சுவை மிக்க, மணம் மிக்க, ஊட்டச்சத்து அதிகம் நிறைந்த தாவரம். இதன் வளர்ப்பு முறையை தெரிந்து கொண்டால் நீங்கள் வீட்டிலேயே ஓய்வு நேரங்களில் பயனுள்ள பொழுதுபோக்காக, அறிவு வளர்ச்சியுள்ள சிறு தொழிலாக, குடும்பத்திலுள்ள அனைவருக்கும் புரதச்சத்தினை பூர்த்தி செய்யக்கூடியதாக இதைப் பயிர் செய்யலாம்.

பொதுவாகக் காளான்

பயிரிடலாம்!



• முழுமையாக தயாரித்த காளான் உருளை இப்படி வரும்.

கள் மழைக் காலங்களில் இடி மின்னல் தொடர்புடன் தோன்றுகின்றன. ஆனால் இந்தக் காளானைச் செயற்கை முறையில் வெய்யில் காலங்களில் கூட வளர்க்கலாம். தமிழ் நாட்டில் சிப்பிக் காளான், வைக்கோல் காளான், ஐரோப்பியக் காளான் என்று செயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் சிப்பிக் காளானை எந்த இடத்திலும் பயிர் செய்யலாம். உற்பத்திச் செலவும் குறைவு. செய்முறையும் சுலபம்.

சிப்பிக் காளான் வகையிலும் சாம்பல் சிப்பிக் காளான் தமிழகத்தில் அதிக விளைச்சலைத் தருகின்றன. இது சிப்பி போன்ற உருவத்தைக் கொண்டது. இந்தக் காளானின்



• ஹைய்யா, நாம் வளர்த்த காளான்!



• 20 நாட்கள் கழித்து பாலிதீன் பையைப் பிரித்தவுடன் காளான் வெளிப்படுகிறதே!

• பே. முத்துக்குமார்

தனிச் சிறப்பு அதிகப் புரதசத்தும், ருசியுமே.

<u>காளான் ஊட்டச்சத்து:</u>

காளானில் நம் உடலுக்கு தேவையான புரதச்சத்து, உயிர்சத்து, தாது சத்து, மாவுசத்து போன்றவை அடங்கியுள்ளன. காய்கறி, பழங்கள், ஆகியவற்றில் உள்ள புரதச் சத்தினைக் காட்டிலும் சிப்பிக் காளானில உள்ள புரதச்சத்து அதிகம். காளானில் கொழுப்புச்சத்தும், மாவுச் சத்தும் மற்ற உணவுப் பொருட்களைக் காட்டிலும் குறைவாகவே உள்ளன. எனவே நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கும் இரத்த அழுத்தம் கூடுதலாக உள்ளவர்களுக்கும் காளான்கள் சிறந்த உணவுப் பொருளாகப் பலராலும் கருதப்படுகின்றன.

இடவசதி: சிப்பிக் காளானை உபயோகமற்ற கூரை வேய்ந்த குடிசையிலோ, ஈரச் சூழ்நிலை நிலவும் அறையிலோ, குளிக்கும் அறையிலோ வளர்க்கலாம். இக் காளான் 20 முதல் 25 டிகிரி சென்டிகிரேட் வெப்ப நிலையில் மிக நன்றாக வளரும்.


<u>காளான் தயாரிக்கத் தேவையான பொருட்கள்:</u>

வைக்கோல், பாலிதீன் கவர், காளான் வித்துப்புட்டி தேவை.

<u>காளான் வளர்ப்பு முறை:</u>

வைக்கோலைச் சிறு துண்டுகளாக 3—5 செ.மி. நீளம் வெட்டிக் கொண்டு தண்ணீரில் 4 மணி நேரம் ஊறவைக்க வேண்டும். பின்பு நீரை வடித்து விட்டு கொதிக்கும் நீரில் இரண்டு மணி நேரம் மூழ்கி இருக்கச் செய்ய வேண்டும். பிறகு நீரை வடிகட்டி விட்டு நிழலில் உலர வைக்க வேண்டும். பாலிதீன் பைகளில் அடி பாகத்தை சணல் நூலினால் சுருக்கிக் கட்டிப் பை போல் செய்து கொள்ள வேண்டும். பாலிதீன் பைகளின் அகலம் 25 செமீ, நீளம் 50 செமீ இருக்கலாம். பாலிதீன் பைகளில் இருபுறமும் 1 செமீ அளவுக்குத் துளை போட வேண்டும். பாட்டிலிலுள்ள காளான் வித்துக்களை (வெண்ணிறமான பூசணம் உள்ள தானியங்கள்) சுத்தமான கம்பியினால் நன்றாகக் கிளறி விட்டுத் தூளாக இருக்கும்படி எடுத்துக் கொள்ள வேண்டும்.

முதலில் பாலிதீன் பையினுள் மேற்சொன்ன பதப்படுத்தப்பட்ட வைக்கோல் துண்டுகளை 5 செமீ உயரத்துக்கு நிரப்ப வேண்டும்.



பாட்டிலில் இருந்து எடுக்கப்பட்ட காளான் வித்துக்களை எடுத்து, வைக்கோல் பரப்பு முழுவதிலும் தூவ வேண்டும். மேலும் ஒருமுறை வைக்கோல் துண்டுகளை இரண்டாவது அடுக்காக 5 செமீக்கு இட வேண்டும். இதன் மீது காளான் வித்துக்களைத் தூவ வேண்டும். இம் முறையில் 4 அல்லது 5 அடுக்குகள் வைக்கோலும் காளான் வித்தும் இட்டு, பையின் வாயினைக் கட்டிவிடவும். இப்போது வைக்கோலும், காளான் வித்துக்களும் இடப்பட்ட பாலிதீன் பை உருளை போல் இருக்கும். ஒரு பாட்டில் காளான் வித்து இரண்டு பைகளுக்குப் போதுமானது.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட பாலிதின் உருளைப் பைகள் ஈரச் சூழ்நிலை நிலவும் அறையில் 20 நாட்கள் இப்படியே வைத்திருக்கவும். வைக்கோல் துண்டுகள் முழுவதும் வெண்ணிறப் பூசணம் வளர்ந்து வருவது நாளுக்கு நாள் அதிகரித்து விடும். 20 நாட்கள் கழித்து பாலிதீன் பைகளை அகற்றி விட்டுக் காலை மாலை இரண்டு நேரமும் வைக்கோல் உருளையில் நீர் தெளித்து வர வேண்டும். 24 நாட்களில் நன்றாக மலர்ந்த காளான்கள் அறுவடைக்கு வந்து விடும். சில மழைக் காலங்களில் 10—லிருந்து 15 நாட்களில் காற்றோட்டத்திற்காகப் போடப்பட்ட துவாரம் வழியாகக் காளான் வெளி வர ஆரம்பிக்கும். அப்படி வந்தால் உடனே பிரித்து வைக்க வேண்டும். முதல் அறுவடைக்குப் பின் தினமும் இவ்வுருளையில் தண்ணீர் தெளித்து வநதால் ஒரு வாரம் கழித்து இரண்டாவது தடவை காளான் அறுவடை செய்யலாம். இவ்வாறு மூன்று தடவை அறுவடை செய்யலாம். காளான் வித்துப்புட்டி வேண்டுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: காளான்: முத்துக்குமார், பாப்பம்மாள் தோட்டம், ரயில்வே கேம்ப் அருகில், போத்தனூர், கோயமுத்தூர் — 641023.

மேலும் காளானைப் பற்றி எந்தச் சந்தேகம் வந்தாலும் உடனே மேற்கண்ட முகவரிக்கு எழுதுங்கள். பதில் அனுப்புகிறேன். வீட்டிலேயே குறைந்த செலவில் உங்களுடைய இச் சிறிய வயதில் நீங்களாகவே சுயமாக இதுபோன்ற சிறு சிறு வேலைகளை செய்து அறிவையும் பெருக்கிக் கொண்டு வருங்காலத்தில் நீங்கள் அனைவரும் பெரிய தாவரவியல் வல்லுநர்களாகவும் தோட்டக்கலை, வேளாண் துறை, நுண்ணுயிரியல் துறை வல்லுநர்களாகவும் ஆராய்ச்சியாளர்களாகவும் வர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

கே.முத்துக்குமார்









colour photo: Raja Ponsingh.



புஷ்ப விமானம்

தங்கமணி

காட்டுக்கு நடுவிலே, ஒரு மலை. அந்த மலையின் அடிவாரத்திலே ஒரு குகை. அந்தக் குகைக்குள்ளே, அக்கம் பக்கங்களிலுள்ள பாறைகளில் அழியாத வண்ணங்களில் அற்புதமாகத் தீட்டப்பட்டிருக்கிற நூற்றுக்கணக்கான நூதன ஓவியங்களைச் சுற்றிச் சுற்றிப் பார்த்துப் பார்த்துச் சுவைக்கிற மாதிரி —

பச்சைப் பசேலெனப் பரந்த புல்வெளிக்கு நடுவில், ராஜ கம்பீரத்துடன் நிற்கிற கறுப்புக் குதிரையை வெகு நேரமாக வட்டமிட்டுக் கவனித்த மன்னர் மகிழ்ச்சி பொங்கக் கூவினார். ''சப்பாஷ்ஷ்ஷ்!''

இதைக் கேட்டதும் —

அரசருக்குச் சற்று விலகி நிற்கிற குதிரைக்காரக் கிழவரின் முகம் காலைத் தாமரையாக விகசித்தது.

நொடி நேரத்துக்குப் பின் —

வேந்தர் வந்தார். குதிரைக்காரக் கிழவருக்குப் பக்கத்தில் நிற்கிற அமைச்சரை அணுகினார். புன்னகையுடன் கேட்டார்: ''குதிரை எப்படி...?''

மந்திரி ரசனை மயக்கத்துடன் கூறினார். ''அஹ்ஹா..! அற்புதம்! கிரேக்க நாட்டுச் சிற்பி ஒருவன் கருங்காலி மரத்தில் செதுக்கி வைத்திருக்கிற மகோன்னதமான... அடடா! அதனுடைய உடலும், உருண்டு திரண்ட உடல்கட்டுக்கோப்பும் எடுப்பான தோற்றமும் துடிப்பு மிகுந்த...''

ராஜா, குறும்புச் சிரிப்புடன் குறுக்கிட்டார்: ''இஹ்ஹி ஹ்ஹிஹி.. இந்தக் குதிரையைப் பற்றிக் கவிதையே பாடுவீர் போலிருக்கிறதே!''

''அரசே...'' என்றார், குதிரைக்காரர்.

''என்ன?'' என்றார் மன்னர்.

''பாரசீக நாட்டில், இந்தக் குதிரையின் அழகையும், படுவேகமாய்ப் பாய்ந்தோடும் பேரழகையும் கண்ட ஒரு கவிஞர் நிஜமாகவே ஒரு கவிதையே பாடிப் பாராட்டினார்!'' என்று பூரிப்புடன் சொன்னார் குதிரைக்காரர்.

உடனே, ''என்ன கவிதை? அதென்ன கவிதை?'' என்று வேட்கையுடன் வினவினார் ராஜா.

''ஆமாம், ஆமாம். அரசருக்குக் கவிதை என்றால்... ரொம்பப் பிடிக்கும்,'' எனச் சொல்லிக் குதிரைக்காரரைத் தூண்டினார், மந்திரி.

குதிரைக்காரர் பாடினார்:

'பாரையெல்லாம் பாழ்படுத்தும்
சூறைக் காற்றின் வேகமும்

ஊரையெல்லாம் கதி கலக்கும்
சீறும் புயல் வேகமும்

வீறுள்ள இக் குதிரை மனோ
வேகத்துக்கு எதிரிலே

நேருமில்லை, நிகருமில்லை!
நேரில் கண்ட உண்மையாம்...!''

குதிரைப் பாட்டைக் கேட்டதும் —

''அஹ்ஹா..! சப்ப்..ப்பாஷ்ஷ்ஷ்!'' எனக் குதூகலத்துடன் கூவிய மன்னர், ''பெரியவரே, உங்களுடைய அற்புதமான குதிரையின் அதிசயமான ஓட்டத்தைக் கண்ணாரக் கண்டு ரசிக்க விரும்புகிறேன்..'' என்று குதிரைக்காரரிடம் கனிவுடன் கோரினார்.

அரசரின் அன்பார்ந்த கோரிக்கையைக் கேட்டவுடனே, மரியாதையுடன் தலைவணங்கிச் சலாமிட்ட குதிரைக்காரக் கிழவர், புல்வெளியைச் சுற்றுமுற்றும் கவனித்தார். மேற்குத் திசையில், பார்வைக்கெட்டிய தூரத்தில் புகை மூட்டமாய்த் தோன்றும் மலையை நோக்கி, ''இந்த மலை எவ்வளவு தூரமிருக்கும்?'' எனக் கேட்டார்.



"கிட்டத்தட்ட... ஐந்து கல் தூரமிருக்கும்," என்றார், அமைச்சர்.

மறு நொடி —

கிழவர், தலைப்பாகையை வரிந்து கட்டிக் கொண்டு, எடுப்பும் துடிப்புமாய்த் தவிக்கிற குதிரையை அணுகினார். நீண்ட கழுத்தின் இருபுறமும் கரும்பட்டு நூலிழையாய்த் தொங்கித் துவளும் பிடரி மயிரைத் தடவிக் கொடுத்துத் தட்டிக் கொடுத்தவாறே நகர்ந்தார். முதுகில் பொருத்தியுள்ள சேணத்தைச் சரிப்படுத்தியபடி. கடிவாளத்தைக் கையில் சுருட்டிக் கொண்டு சரேலெனத் தாவினார். முதுகிலமர்ந்தபடியே, கடிவாளத்தைச் சுண்டியபடியே ஒரு கூவல்: "ஹேய்ய்ய்...!"

தீப்பட்ட நொடியே, வானத்தை நோக்கிக் குபீரெனக் குமுறிப் பாயும் புஸ்வாணம்போல், தாவிப் பாய்ந்து...

அதோ...! அதோ...! புல்வெளியைக் கடந்து... காட்டுக்குள் புகுந்து... எங்கே...? எங்கே...?

அங்கே...! அங்கே...! அதோ...! அதோ...!

மலைப் பக்கத்திலிருந்து காட்டுக்குள் தாவி, புல்வெளிக்குப் பாய்ந்து




பறந்தோடி வந்து, அரசருக்கு முன் தவித்து நின்று கனைத்துக் குதிக்கிற குதிரையிலிருந்துசலாமிட்டுப்பணிந்த வாறே இறங்கிய கிழவர், ராஜாவை நெருங்கினார்.

மன்னர், நெடுமூச்செறிந்தார்.

மந்திரி, பெருமூச்செறிந்தார்.

''பெரியவரே, அந்தப் பாரசீகக் கவிதை, இந்தக் குதிரைக்குப் பொருத் தமானதுதான்!'' என்று வியப்புடன் சொன்னார், ராஜா.

''ஆமாம், ஆமாம் இந்தக் குதிரை





யைப் பற்றிய மெய்யான ஓவியம், அந்த பாரசீகப் பாடல்,'' என்று அதி சயத்துடன் சொன்னார் அமைச்சர்.

அப்புறம் என்ன நினைத்தாரோ! குதிரைக்காரரைப் பார்த்து, ''இந்தக் குதிரையின் விலை எவ்வளவு?'' என்று ஆசையும் ஆவலுமாய்க் கேட் டார் அரசர்.

குதிரைக்காரக் கிழவர், சற்றுப் பின்வாங்கிச் சென்றார். தலைப் பாகைத் துணியை அவிழ்த்து உதறி, வியர்த்துக் கிடக்கிற முகத்தைத் துடைத்துக் கொண்டார். துணியைத் தோளில் போட்டுக் கொண்டு மன்னரை அணுகினார். ''மகா ராஜா...'' என்று மேலும் என்னவோ சொல்ல எண்ணியவர் சற்றுத் தயங் கினார்.

''என்ன தயக்கம்?'' என்றார், அரசர்.

''ஒன்றுமில்லை... வயதானவரா யிற்றே! அதனால் சவாரி செய்த மயக் கம்,'' எனப் புன்சிரிப்புடன் சொன் னார், மந்திரி.

கிழவர், குறுஞ் சிரிப்புடன் கூறி னார்: ''மன்னர் பெருமானே.. பல

மாதங்களுக்கு முன்னே... அரேபிய நாட்டிலிருந்து, பதினெட்டுக் குதிரைகளுடன் நாடுநகரமெல்லாம் அலைந்து திரிந்தேன். பேரரசர்கள், சிற்றரசர்கள், கோடீசுவரப் பிரபுக்கள் எனப் பலரைச் சந்தித்தேன். அழைத்து வந்தவைகளில் பதினேழு குதிரைகளை விற்று விட்டேன். ஆனால்... இந்தக் குதிரையை மட்டும் யாரும் வாங்கவில்லை!''

இதைக் கேட்டதும் —

திடுக்கிட்டுத் திகைத்த ராஜா, ''ஏன்...? ஏன்...? ஏன் வாங்கவில்லை? எதற்காக வாங்கவில்லை?'' எனப் பதைப்பும், தவிப்புமாய்க் கேட்டார்:

''மதிப்புமிக்க குதிரையை யாரும் மதிக்கவில்லை என்றால்... அதற்குக் காரணம் என்ன?'' என்று என்னவோ அய்யத்துடன் வினவினார் அமைச்சர்.

''இந்த மகோன்னதமான குதிரையின் மாபெரும் மதிப்புத்தான் காரணம்,'' எனச் சட்டென விடையளித்த கிழவர், மேலும் கூறினார்: ''மரியாதைக்குரிய ராஜாவே! இந்தக் குதிரையின் அழகையும், ஆற்றலையும் நுணுகி அறிந்த எல்லோரும்.. இதை வாங்குவதற்குத்தான் மிகவும் விரும்பினார்கள். ஆனால்... குதிரையின் விலையைச் சொன்னதும் விலையைத்தான் பெரிதாக மதித்தார்கள்; குதிரையை மதிக்கவில்லை.''

''ஓ...! அப்படியா...!'' என்றார், அரசர்.


''பொருளுக்குத் தகுந்த மதிப்பு இருக்க வேண்டும். மதிப்புக்குப் பொருத்தமாகப் பொருள் இருக்க வேண்டும். இல்லையெனில்...'' என்று மேலும் என்னவோ சொல்லிய கிழவரின் பேச்சைக் குறுக்கிட்டு, ''இந்தக் குதிரையின் மதிப்புத்தான் என்ன?'' எனக் கேட்டார் மந்திரி.

கிழவர், தயங்கவில்லை. மயங்கவில்லை. சுருக்காகவும் நறுக்காகவும் சொன்னார்: ''ஐந்து லட்சம் ரூபாய்.''

விலையைக் கேட்ட நொடியே —

அரசர் ஆச்சரியமும் அதிர்ச்சியுமாய்க் கூவினார்: ''ஓ...! ஒரு குதிரையின் விலை... ஐந்து லட்சம் ரூபாயா?''

''வணக்கத்திற்குரிய ராஜாவே! இந்த அற்புதக் குதிரையின் மதிப்பு ஐந்து லட்சம் ரூபாய்தான்! இதில்..., ஒரே ஒரு செப்புக் காசையும் குறைக்க



மாட்டேன். வேண்டுமானால்... இந்தக் குதிரைக்கு ஒரு மாற்று விலை சொல்லுகிறேன்... சம்மதமானால்...'' எனத் தயங்கினார், கிழவர்.

''அதென்ன... மாற்று விலை?'' என்றார், மந்திரி.

''இந்தக் குதிரையின் கால்களில் லாடம் அடித்து வைத்திருக்கிறேன். லாடங்களைப் பொருத்தியுள்ள ஆணிகளுக்குரிய விலையைக் கொடுத்தால்... குதிரையைக் கொடுத்து விடுகிறேன்,'' என்றார் கிழவர்.


''என்ன? ஆணிகளுக்குரிய விலையைக் கொடுத்தால்... குதிரையைக் கொடுத்து விடுகிறீரா?'' எனப் புரியாமல் கேட்டார் மன்னர்.

''ஆமாம் அரசே... அப்படித்தான். ஆணியின் விலைக்குக் குதிரையை விற்று விடுகிறேன்,'' எனத் தெளிவாகச் சொன்னார் குதிரைக்காரக் கிழவர்.

''ஆணியின் விலை என்ன?'' எனப் பரபரப்புடன் கேட்டார், அமைச்சர்.

கிழவர், நிதானமாகக் கூறினார்: ''ஓர் ஆணியின் விலை, ஐந்து செப்புக் காசுகள்...!''

ஆணியின் விலையைக் கேட்ட அரசர், ''அப்படியெனில்... ஐந்து செப்புக் காசுகளைக் கொடுத்தால்... இந்த அருமையான குதிரையைக்



கொடுத்து விடுவீர்களா?'' என்று கிழவரைப் பார்த்துக் குறும்புச் சிரிப்புடன் கேட்டார்.

''நிச்சயமாய்க் கொடுப்பேன்! குதிரையின் நான்கு கால்களிலும் லாடங்களைப் பொருத்துவதற்காக, இருபத்து நான்கு ஆணிகளை அடித்திருக்கிறேன். அவைகளில் முதல் ஆணியின் விலை ஐந்து காசுகள். இரண்டாவது ஆணியின் விலை பத்துக் காசுகள். மூன்றாவது ஆணியின் விலை இருபது காசுகள். நான்காவது ஆணியின் விலை நாற்பது காசுகள். இவ்வாறே... இருபத்து நான்கு ஆணிகளின் விலையையும் இரட்டிப்பாகப் பெருக்கிக் கொண்டே போய்.. கடைசியில், எல்லா ஆணிகளின் விலையையும் கூட்டி...'' கிழவர், மேலும் கூறுவதற்குள் —

அமைச்சர் திடீரெனத் தாவியோடினார். அரண்மனையை நோக்கிக் காற்றாய்ப் பறந்தோடி...

சற்று நேரத்திற்குள் —

விரைந்தோடி வந்த அமைச்சர், அரசரை அணுகியதும் அலறினார்: ''ராஜாவே! ஆணி விலைக்கு வேண்டாம், குதிரை விலையையே கொடுத்து விடலாம்!''

மன்னர், விளங்காமல் கேட்டார்: ''என்ன சொல்லுகிறீர், அமைச்சரே?''


''குதிரையின் விலை, ஐந்து லட்சம் ரூபாய். ஆனால்... குதிரையின் கால்களில் லாடங்களை அடித்துள்ள இருபத்து நான்கு ஆணிகளின் விலை.. வந்து...'' என்றவாறே, கையிலிருக்கிற ஓலைச் சுவடியில் எழுதியிருக்கிற கணக்கைப் பார்த்தபடி, மந்திரி கூறினார்: ''இருபத்து நான்கு ஆணிகளின் மொத்த விலை... வந்து... பதினோரு லட்சத்துப் பன்னிரண்டாயிரத்து எண்ணூற்று எண்பத்தேழு ரூபாயோடு, எழுபத்தைந்து காசுகள்...!''

ஆணிகளின் பிரம்மாண்டமான விலையைக் கேட்ட அரசர், கிழவரைப் பார்த்தார். ''பெரியவரே... தங்களது நுணுக்கமான கணக்கியல நிலைவைப் பாராட்டுகிறேன், சப்பாஷ்ஷ்ஷ்...!'' என்று மகிழ்ச்சிப் பெருக்குடன் கிழவரைத் தட்டிக் கொடுத்தார். ''பெரியவரே...! உங்களுடைய குதிரையை ஆணியின் விலைக்கு வேண்டாம், குதிரையின் விலைக்கேபெற்றுக்கொள்ளுகிறேன். வாருங்கள், அரண்மனைக்குப் போகலாம்,'' என்றபடியே அரண்மனையை நோக்கி மெல்ல நடந்தார். நடந்தவாறே கேட்டார்: ''பெரியவரே, உங்கள் குதிரையின் பெயர் என்ன?''

கிழவர் சொன்னார்: ''புஷ்ப விமானம்.''

சித்திரப்புதிர்! 39

ஆழி———



1 தபால் துறை வெளியிட்ட இந்த சிறப்பு முத்திரை எந்த ஊரைக் குறிக்கும்?



2 இது எந்த மாநிலத்தின் சுற்றுலாச் சின்னம்?




புராணத்தில் இந்தக் காட்சி எந்தச் சம்பவத்தை நினைவு படுத்துகிறது?

3



4 இந்தக் காற்று ஆலை எந்த நாட்டில் அதிகம்?



5

நம்நாட்டில் உள்ள பிரசித்திப் பெற்ற கட்டடத்தின் ஒரு பகுதி இது. இதன் பெயர் என்ன?

விடை 73'ம் பக்கம்

அந்தப் பார்சலை அனுப்பியவர் யார்?

சிற்பி சோமு

அன்று காலாண்டுத் தேர்வு தொடக்க நாள்.

அதில் நல்ல மதிப்பெண் எடுக்க வேண்டுமென்பதற்காகக் கணேஷ் மாடியில் அவனது அப்பாவின் தனியறையில் மிகுந்த உற்சாகமாகப் பாடங்களை மனப்பாடம் செய்வதும், அதைத் தனியே எழுதிப் பார்ப்பதுமாக இருந்தான்.

அப்போது அவனது அம்மா கீதா, அவனை அழைத்த வண்ணம் மாடிப் படிகளில் ஏறி வருவது கேட்டுப் புத்தகங்களை மூடிவைத்துவிட்டு அவன் எதிரே வந்து நின்றான்.

''கணேஷ்! உன் பெயருக்கு ஏதோ ரிஜிஸ்டர் பார்சல் வந்திருக்கு. வா வா... வந்து கையெழுத்துப் போட்டு வாங்கு வா,'' என்றவாறு கீதா கீழே வர, அவளைத் தொடர்ந்து வந்த கணேஷ், வாசலில் நின்ற தபால்காரரிடம், ''என்ன ஸார், என்ன பார்சல்?'' என்றான்.

''எங்கிருந்து வந்திருக்கு?'' என்றாள் கீதா.

''என்னன்னு எனக்கெப்படித் தெரியும்? வடக்கே குஜராத் மாநிலத்திலிருந்து வந்திருக்கு. பிரதாப் பானர்ஜி என்பவர் அனுப்பியிருக்கிறார்,'' என்ற தபால்காரர், பாரம் ஒன்றில் கணேஷிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டு பார்சலைக் கொடுத்துச் சென்றார்.

வேகமாக ஆர்வத்தோடு பார்சலைப் பிரிக்கப் போன கணேஷைத் தடுத்த கீதா, ''கணேஷ்! நில் யாரு அனுப்பியதோ.... உள்ளே என்ன இருக்கோ! எனக்குப் பயமாயிருக்கு," என்றாள்.

''ஏம்மா, ஏன் பயப்படுறே? பார்சலில் ஏதேனும் வெடி குண்டு இருக்கும்ன்னா?''

''ஆமாப்பா.... நாம தினமும் பேப்பர்லே பார்க்கலே? அங்கே பார்சல்லே வெடிகுண்டு வந்தது, இங்கே வந்ததுன்னு,'' என்று ஒருவித நடுக்கத்துடனேயே கூறினாள் கீதா.

''அம்மா, ஒருத்தருக்கு ஒருத்தர் எதிரியாயிருக்கிறவங்களுக்குத்தான் அப்படியெல்லாம் வரும். எனக்கு யாரு எதிரியிருக்கப் போறாங்க?'' என்று வினவினான் கணேஷ்.

''கணேஷ், உனக்கு இல்லையானாலும் அப்பாவுக்கு வேண்டாதவங்க யாராவது அவருக்குப் பதில் உன் பெயருக்கு அனுப்பி.... ஏதோ எனக்குப் பயமாயிருக்கு. எதுக்கும் அப்பா வந்ததும் கேட்டுக் கொண்டு பிரித்துப் பார்க்கலாம்.''

மேற்கொண்டு கணேஷ் ஒன்றும் பேசவில்லை. 'ஒருவேளை, அம்மாவின் பயம் ஏன் உண்மையாக இருக்கக் கூடாது?' என்று எண்ணியவனாக அந்தப் பார்சலைப் பத்திரமாக எடுத்துச் சென்று ஜன்னல் ஓரமாகக் கிடந்த நாற்காலியில் வைத்தான். பிறகு மாடிக்குப் போய்விட்டான்.

கீதா பார்சல் வந்த விவரத்தைத் தொலைபேசி மூலம் தனது கணவருக்கு — கணேசன் அப்பாவுக்குத் தெரிவித்தாள். கீதாவின் பயத்தை ஊர்

ஜிதம் செய்யும் வகையில். ''நான் மதியம் சாப்பிட வரும்போது பிரித்துப்பார்க்கலாம். அதுவரை பத்திரமாகப் பார்த்துக் கொள்ளச் சொன்னார்,'' என்றார் கீதாவின் கணவர்.

''சரி,'' என்ற கீதா சமையற்கட்டிற்குள் நுழைந்து விட்டாள்.

பகல் ஒருமணி.

தேர்வு எழுதப்புறப்பட்ட கணேஷ் பூஜை அறைக்குச் சென்று விநாயகப் பெருமானை வணங்கிக் கும்பிட்டு வெளிவந்தான். அங்கே கீதா நிற்கவும் அவள் காலிலும் விழுந்து வணங்கி எழுந்தான். அவனது நெற்றியில் திருநீறு இட்டு ஆசீர்வதித்த கீதா, ''நல்லா பரீட்சை எழுதிவிட்டு வாப்பா,'' என்றாள்.

''சரியம்மா....'' என்ற கணேஷ், பள்ளிக்கூடம் சென்றான்.

கணேஷ் போன சற்று நேரத்திற்கெல்லாம் அவனது அப்பா ஸ்ரீதரன் ஸ்கூட்டரில் வந்து இறங்கியவர் வீட்டினுள் சென்றார்.

அவருக்காகக் காத்திருந்த கீதா சோபாவில் உட்கார்ந்தபடியே அப்போதுதான் லேசாகக் கண்ணயர்ந்திருந்தாள்.

அவர் வரும் சத்தம் கேட்டதும் கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு எழுந்த வண்ணம், ''வாங்க,'' என்றாள்.

''என்ன கீதா, பகல் தூக்கமா? ஆமா.... கணேஷ் பரீட்சை எழுதப் போய்விட்டானா? அவனுக்கு ஏதோ பார்சல் வந்ததாய்ப் போன்லே சொன்னாயே, என்ன அது? எங்கே வைச்சிருக்கே?'' என்றார் மிகுந்த ஆவலோடு.





"அதோ பாருங்க. அந்த நாற்காலி மேலே இருக்கே.... அதான்," என்ற கீதா கிட்டே போக பயந்து ஐந்தடி எட்ட நின்றே பதில் கூறினாள்.

"அசடே..... அசடே! தைரியமா இரு. நடக்கிறது நடந்தே தீரும்," என்றவர் மளமளவென்று மிகத் துணிச்சலோடு பார்சலைப் பிரித்தார்.

உள்ளே.....

மிக அழகான அட்டைப் பெட்டியினுள் ஊதா கலரில் பாலித்தின் பேப்பர் போட்டுக் கட்டிய பார்சல் இருந்தது. அதை வெளியே எடுத்தார் ஸ்ரீதரன்.

உயர்வான ரெடிமேட் கம்பெனியின் அட்டைப் பெட்டி ஒன்றும் அதனுள் கோட்டும் சூட்டும், மற்றும் கைக் கடிகாரமும் பளபளப்புடன் மின்னின.

தேர்வு எழுதிவிட்டு வந்த கணேஷ், கையில் கடிதம் ஒன்றையும் கொண்டு வந்திருந்தான்.

"என்ன கணேஷ்! தேர்வை நன்றாக எழுதியிருக்கியா?" என்ற ஸ்ரீதரன், "ஆமா.... இது என்ன கையில் கடிதம்?" என்று கடிதத்தை வாங்கிப் பிரித்துப் பார்த்தார்.

கடிதம் இந்தியில் எழுதியிருந்தது.

"அப்பா, எனக்குப் பார்சல் அனுப்பியிருக்காரே, அந்த மாமா தான் இந்த லெட்டரையும் எழுதியிருக்கார்," என்றான் கணேஷ்.

"கணேஷ், யாருடா அந்த மாமா?" என்றாள் கீதா ஆவலோடு.

"கீதா! பிரதாப் பானர்ஜி என்ற வடக்கெத்திக்காரர், குஜராத் மாநிலத்திலிருந்து எழுதியிருக்கார். 'கணேஷ் பாபு, உனது உதவியை எங்களால் என்றும் மறக்க முடியாது. இன்னும் சில தினங்களில் எங்கள் குழந்தை பாலமுரளியின் பிறந்த நாள் வருகிறது. அதன் நினைவாக உனக்கு எங்களது அன்புப் பரிசாக ஒன்றை அனுப்பி வைக்கிறோம். அதை நீயும் உனது பெற்றோரும் ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்,' என்று இந்தியில் எழுதியிருந்த கடித வாசகங்களை தமிழில் கூறினார் ஸ்ரீதரன். பிறகு, கணேஷ்! இந்தக் கடிதம் எப்போ வந்தது?" என்றார்.

"ரெண்டு மூணு நாளாச்சாம். தபால்காரர் சொன்னார். அவரும் கிட்டு அலையறேன். இன்னிக்குப் பார்சல் ஒண்ணு இதே விலாசத்திலேயிருந்து ரிஜிஸ்டரில் வந்சகு கண்டு கடிதமும் உனக்குத்தான்னு முடிவு செய்தேன்," என்றார்.

"ஏம்பா கணேஷ், இந்தப் பிரதாப் பானர்ஜி யார்? இவர் உனக்கு எப்படிப் பழக்கம்? ஒருவேளை, நமது லாட்ஜில் இவர் எப்போதாவது வந்து தங்கியிருந்தாரா?" என்றார் ஸ்ரீதரன்.

"இல்லேப்பா.... ஐந்தாறு மாதத்துக்கு முன்னாடி ஒருநாள் பள்ளிக்குப் போகும்போது மணிக்குண்டு திருப்பத்தில் ஒரு சுற்றுலா ப ஸ் நிற்பதையும், அதை ஒட்டினாற் போல ஒரே கூட்டமாயிருந்ததையும் கண்டேன். ஏதேனும் வி ப த் த ா க இருக்குமோ என்ற சந்தேகத்தில் ஓடிப் போய்ப் பார்த்தேன், இந்தப் பிரதாப்ஜி கையில் ஒரு தூக்குக் குவ

சித்திரப் புதிர் — 39

விடை:

1. பழனி.
2. ஜம்மு — காஷ்மீர்.
3. மகாபலியிடம் மூன்று அடி மண் கேட்டு அடக்கிய வாமனாவதாரம்.
4. ஹாலந்து.
5. டில்லி பார்லிமெண்ட் ஹவுஸ் கட்டிடம்.

ளையை வைத்துக் கொண்டு அந்தத் திருப்பத்திலிருந்த டீக்கடைக் காரரிடம் குழந்தைக்குக் கொடுக்கப் பால் வேண்டுமென்று இந்தியில் கேட்டிருக்கிறார். அந்தக் கடைக்காரருக்கு இந்தி தெரியாததால், 'போ போ,' என்று சொல்ல, இவர் ஒன்று சொல்ல — இருவருக்கிடையே மொழி புரியாமல் வீணாகச் சண்டை போட, அதைக் காண ஒரு கூட்டமே கூடியிருக்கிறது. நான் கூட்டத்தினுள் புகுந்து பார்த்த போது விவரம் தெரிந்தது.

''இந்தப் பிரதாப்ஜியிடம் என்ன வேண்டுமென்றுஇந்தியில்கேட்டேன். அவர், 'எனது குழந்தைக்குக் கொடுக்கப் பசும்பால் வேண்டும்,' என்றார். அவர் கேட்டதைத் தமிழில் விளக்கிக் கடைக்காரரிடம்சொன்னேன். அந்தக் கடைக்காரர் பால் தனியே வியாபாரம் செய்வதில்லை என்று கூறிவிட்டார். இந்த விவரத்தை இந்தியில் இவரிடம் கூறினேன். அவர் முகம் வாடிப் போயிற்று. அதைக் காண எனக்குப் பாவமாயிருந்தது. அதனால் நான் பால் வாங்கித் தருவதாகச் சொல்லி அவரிடமிருந்த பாத்திரத்தை வாங்கிப் போய் நீங்க வழக்கமாய்க் காப்பி சாப்பிடும் தேவி ஹோட்டலில் பால் கேட்டேன்.... அவங்க கொடுத்தாங்க, அதை வாங்கி வந்து கொடுத்தேன்.

''என்னை முதுகில் தட்டிக் கொடுத்தவாறு 'குட்பாய்..... குட் பாய்...' என்றவர் ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து என்னிடம் கொடுத்தார். நான் வாங்க மறுத்துவிடவே, மேலும் என்னைப் பாராட்டியவர், என் பெயரையும் நமது வீட்டு முகவரியையும் வாங்கிப் போனார். அந்த உதவிக்காக இப்போ அனுப்பியிருப்பார் போல் தெரிகிறது,'' என்றான் கணேஷ்.

பார்சலில் வந்த கோட்டையும், சூட்டையும் போட்டுப் பார்க்க ஆவலோடு எடுத்துப் பிரித்தான். அதில் ஒரு கடிதம் இருந்தது. அதை எடுத்துத் தன் அப்பாவிடம் கொடுத்தான் கணேஷ்.

ஸ்ரீதரன் கடிதத்தைப் பிரித்துப் படித்தார்.

''நமஸ்காரம்.

தளர்ந்து விடாதே!



சேற்றுக்குள்ளே வீழ்ந்த விதையும்
செத்துப் போகுமோ?
நாற்றுக் கன்றாய் வளர்ந்து நெல்லை
நன்கு தராதோ?

கடலில் வீழ்ந்த கதிரோன் பின்பு
கதிரும் வீசாதோ?
உடலம் குறைந்த நிலவும் பின்பு
ஒளியுங் கொடாதோ?

இலையுதிர்ந்த அரச மரத்தில்
இலையுந் தோன்றாதோ?
நிலை குலைந்த உனக்கு மட்டும்
நிலைமை மாறாதோ?

'வீழ்ந்தேன், ஐயோ!' என நினைந்து
வாழ்வு கெடாதே!
தாழ்ந்தும் வாழத் தருணமுண்டு!
தளர்ந்து விடாதே.



— கவிஞர் ஆர். ஆர். என். ஜார்ஜ்

புதுமைப் பெண்ணாய் மாறணும்!




மணக்கும் தமிழைப் படிக்கணும் — பாப்பா!
மானம் காக்கத் துடிக்கணும்!
கணக்கில் புலியாய் ஆகணும் — பாப்பா!
கலையில் சிறந்து விளங்கணும்!

குணமாய் வாழ முயலணும் — பாப்பா,
குன்றாப் புகழை அடையணும்!
பணமும், பொருளும் சேர்க்கணும் — பாப்பா,
பண்பா டோடு நடக்கணும்!

சாதனை நிறையப் படைக்கணும் — பாப்பா,
சான்றோர் கதையை அறியணும்!
வேதனை யாவும் விலக்கணும் — பாப்பா,
வேதம் வழியில் ஒழுகணும்!

சோதனை யெல்லாம் வெல்லணும் — பாப்பா,
சுகமாய் நாளும் செல்லணும்!
போதனை கோடி கேட்கணும் — பாப்பா,
புதுமைப் பெண்ணாய் மாறணும்!



— அணக்குடி சீதா.

கணேஷ் பாபுக்கு இந்தப் பிரதாப் அங்கிள் வந்தனத்துடன் எழுதுவது...

அன்று, அந்தக் கூட்டத்தில் உனக்கு மட்டும் எங்கள் மொழி தெரிந்து இருந்ததால் எங்களுக்கு உதவ முடிந்தது. அந்த உதவியை நாங்கள் என்றும் மறக்க மாட்டோம். அதற்கு உறுதி எடுத்துக் கொள்ளும் வகையில் உனது தாய் மொழியாகிய தமிழைக் கற்று வருகிறோம். மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம்.

தேசப்பிதா மகாத்மா காந்திஜி தோன்றிய மண்ணில் பிறந்த நான் அனைவருக்கும் அவரவர் தாய்மொழியுடன் எல்லா மொழிகளும் தெரிந்திருக்க வேண்டியதன் அவசியத்தை அந்தச் சம்பவம் எனக்கு உணர்த்தியது. ஆகவேதான் இந்த முயற்சி.

ஒருவருக்கொருவர் பேதம் பாராட்டாமல் ஒரு கூட்டுப் பறவையாக, சகோதர பாசத்துடன் இந்திய பூமியின் பெருமையையும் அதன் மகத்துவத்தையும் உயர்த்திட நாம் அனைவரும் எல்லா மொழிகளையும் கற்றுத் தெரிந்து கொள்வோம். உலக நாடுகளுக்கு நமது ஒற்றுமையை எடுத்துச் சொல்வோம்.

நம் முன்னோர்கள் தியாகச் செம்மல்கள். மகாத்மாஜி, நேருஜி, காமராஜ்ஜி, லால்பகதூர்ஜி, ராஜாஜி ஆகியோர் பெற்றுத் தந்த சுதந்திரத்தைக் காத்திட அவர்கள் நம் தேச மக்கள் மீது வைத்த நம்பிக்கையை ஒற்றுமையுணர்வோடு பேணிக் காப்போம். உனது பெற்றோர்களுக்கும் எனது வந்தனத்தைக் கூறு.

பிரதாப்ஜி.''

கடிதத்தைப் படித்து முடிந்த ஸ்ரீதரனின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்கி வழிந்தது.

''ஒரு சின்ன நிகழ்ச்சி எவ்வளவு பெரிய விஷயமாக உருவாகியிருக்கிறது! அவரது இதயத்தில் எத்தகைய ஒற்றுமை உணர்வு ஏற்படத் காரணமாக அமைந்திருக்கிறது!'' என்று பெருமைப்பட்ட ஸ்ரீதரன், அதற்குக் காரணமான தன் செல்வன் கணேஷை வாரியெடுத்து முத்தமழை பொழிந்தார். கீதாவும் அதே உணர்வுக்குள் அடைக்கலமானாள்.

பிருந்தாவனக் கதையரங்கம்



ராமு, இரண்டு வயதில் தாயை இழந்து, நான்கு வயதில் தந்தையே இழந்து தேலூர் கிராமத்தில் பிச்சையெடுத்து வாழ்ந்து வந்தான். அங்குள்ள கோயில் மண்டபம்தான் அவன் குடியிருப்பு. சில சமயங்களில் அவனுக்கு நிறைய உணவுகளும் காசும் கிடைக்கும், பல சமயங்களில் ஒன்றும் கிடைக்காது.

அன்றும் அப்படித்தான் அவனுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. அன்றிரவு ராமு மண்டபத்தில் அழுது கொண்டு படுத்திருந்தான். அப்பொழுது அவன் முன் அதிர்ஷ்ட தேவதை தோன்றியது. தேவதை, ராமுவைப் பார்த்து, ''ஏன் அழுகிறாய்?'' என்றது.

அதற்கு ராமு, ''நான் சாப்பாடு இல்லாமல் பசியால் பரிதவிக்கிறேன்,'' என்றான்.

இதைக் கேட்டுத் தேவதை மனமிரங்கி, ''இங்கிருந்து பத்து மைல் சென்றால் திருவாரூர் வரும். அங்கு சிவன் கோயிலில் உள்ள ஆலமரத்துப் பொந்திலே கைவிட்டு ஒரு பெட்டி இருக்கும். அந்தப் பெட்டிக்குள் ஒரு மோதிரம் இருக்கும். அந்த மோதிரம் நீ கேட்டதையெல்லாம் கொடுக்கும்,'' என்று கூறி விட்டு மறைந்தது.

அதன்படியே ராமு திருவாரூர் சென்று மோதிரத்தை எடுத்து அணிந்து கொண்டான். பிறகு திருவாரூரிலேயே வீடு ஒன்று வேண்டும் என்று நினைத்தான்; வீடு ஒன்று வந்தது. பல வேலைக்காரர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டான். ராமு பெரிய கோடீஸ்வரன் ஆனான். பணம் கொழித்ததால் பழைய நினைப்பும் இரக்க குணமும் மறைந்து விட்டன.

ஒரு நாள் மதியம் உணவு உட்கொண்டிருந்தான். அப்போது வாசலில் ஒரு பிச்சைக்காரியின் குரல் கேட்டது. ராமு வெளியில் வந்து பிச்சைக்காரியை அடித்து விரட்டினான்.

அப்போது பிச்சைக்காரி அதிர்ஷ்ட தேவதையாக மாறினாள். தொடர்ந்து ராமுவின் கையிலிருந்த மோதிரம் மாயமாய் மறைந்தது! மோதிரம் மறைந்தவுடன் வீடும் மறைந்தது. அவனும் பழைய பிச்சைக்காரன் ஆனான்!

அப்போது அதிர்ஷ்ட தேவதை ராமுவைப் பார்த்து, ''நீ ஏழையாக இருக்கும் பொழுது நான் இரக்கப்பட்டு உனக்கு வாழ்வு அளித்தேன். நீயோ இரக்கமின்றி இருந்தாய். அதனால் நீ பணக்காரனாய் இருக்க கூடாது என்று எண்ணி நான் பிச்சைகாரியாய் வந்தேன். நீயோ விரட்டியடித்தாய். எனவே இரக்கம் சிறிதும் இல்லாத வரிடத்தே நான் இருக்க மாட்டேன்,'' என்று அதிர்ஷ்ட தேவதை கூறி மறைந்தது.

இப்போது பிச்சையெடுக்க ராமு தேலூரை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறான்.

— ச. ராஜப்பா.



பள்ளிக்கூட மணி மாலை நாலரை மணிக்கு அடித்தது.

மாணவிகள் வகுப்பை விட்டு வெளிவரத் தொடங்கினர்.

பள்ளிக்கூட கேட்டிலிருந்து கடைசியாக மஹாலக்ஷ்மியும், கார்த்தியும் வெளியில் வந்தார்கள்.

அவர்களுக்காகவே காத்திருந்த அனுரேகா, தன் தோழியரை நோக்கி, "ஏய், நொண்டி மஹா வரா பாருங்கடி. நொண்டி, நொண்டி நொடிச்சுக்கோ! வெல்லம் தாரேன் கடிச்சுக்கோ," என்று கூறினாள். உடனே தோழியர் அனைவரும் சிரித்தனர்.

மஹாவிற்குக் கண்களில் தண்ணீர் தளும்பிவிட்டது. கார்த்தி கோபத்தோடு அவர்கள் எதிரே போய், " "ஆமாண்டி, அவள் நொண்டிதான். அவளுக்கு கால் தாண்டி ஊனம். ஆனால் உங்களுக்கு மனசு, மூளை எல்லாமே ஊனம், வாய்கிழியப் பேசுகிறீர்களே அவளை மாதிரி எல்லாவற்றிலும் முதல்ல வர முடியுமா உங்களாலே? யாராவது அவளைக் கேலி செய்திங்க, நான் பொல்லாதவளா இருப்பேன்," என்று கூறிவிட்டு வந்தாள்.

மஹாலக்ஷ்மி ஏழை பள்ளிக்கூட ஆசிரியரின் மகள். மூன்று வயதில் டைஃபாய்டு ஜுரம் வந்ததால் இளம்பிள்ளை வாதம் ஏற்பட்டு, சற்று விந்தி, விந்தி நடப்பாள். ஆனால் பள்ளியில் எல்லாவற்றிலும் — விளையாட்டு தவிர — அவள்தான் முதல். அதனால் ஆசிரியர்கள் அவளிடம் அன்பாக இருப்பார்கள். இதைக்கண்டு அனுரேகாவும், அவளது தோழியரும் எரிச்சலிலும், பொறாமையிலும் புழுங்கிப் போவார்கள்.

மஹாலக்ஷ்மி, கார்த்தியுடன் அனுரேகாவும் தங்கள் ஊருக்கு செல்ல வேண்டிய பஸ்ஸில் ஏறிக் கொண்டார்கள். பேருந்தும் புறப்பட்டு ஓடிக் கொண்டிருந்தது.

டிக்கெட் வாங்குவதற்குத் தனது தோல் பையில் கையை விட்ட அனுரேகாவுக்குப் பகீரென்றது. பையில் பணம் இல்லை! பள்ளியில் யாரோ எடுத்து விட்டார்கள். கண்டக்டர் அருகில் வந்துவிட்டார். அவளுக்கு வேர்த்துக் கொட்டியது. திரு திருவென்று முழித்தாள். கண்களில் கண்ணீர் தளும்பிவிட்டது.

ஓட்டுநர் பக்கத்து இருக்கையில் உட்கார்ந்து இருந்த மஹா பேருந்தின் இறுதி இருக்கையில் அமர்ந்திருந்த அனுரேகாவின் நிலையைப் பார்த்தாள். அவளுக்கு என்னவென்று புரியவில்லை. கார்த்தியை விட்டு என்னவென்று கேட்டு வரச்சொன்னாள். அதற்கு அவள் 'மாட்டேன்' என்றாள். பின்பு மஹாவே அவளிடம் சென்று விசாரித்து, காரணத்தை அறிந்து கொண்டாள். மஹாவே அனுரேகாவிற்கும் டிக்கெட் வாங்கினாள்.

மறுநாள் பள்ளியில் அனுரேகா மஹாவிடம் வந்து, 'மஹா!, என்னை மன்னித்துவிடு. நான் உன்னை எவ்வளவு கேவலமாய்ப் பேசியும் நீ என்னை வெறுக்காமல் ஆபத்துல உதவி செய்தாய். உன்னுடைய இந்தச் செய்கையினால் நான் திருந்தி விட்டேன்," என்றாள்.

பக்கத்திலிருந்து கேட்டுக் கொண்டிருந்த கார்த்தி தனக்குள் சொல்லிச் சிரித்துக் கொண்டாள்: 'அடியே திமிர் பிடிச்ச அனுரேகா, உன் பையிலே இருந்த காசை எடுத்துக்கொண்டு, உனக்கு டிக்கெட் எடுக்க வழியில்லாமல் திண்டாட விட்டது நான்தான்னு உனக்கும் தெரியாது. உனக்காக டிக்கெட் வாங்கினாளே அந்த மஹாவுக்கும் தெரியாது. மஹாவின் நல்ல மனசை நீ புரிஞ்சிக்கணும்; நீ திருந்தணும்கிறதுக்காகத் தான் அப்படித் திருடவும் துணிஞ்சேன்.

— என். ஸ்ரீவித்யா.

வஞ்சகத்துக்கு வஞ்சகம்



மகிளபுரம் என்னும் நாட்டை வீரலிங்கம் எனும் அரசர் ஆண்டு வந்தார். அரசருக்கு தமயந்தி எனும் மனைவியும் மகிலபாலன் எனும் மகனும் வாழ்ந்து வந்தனர்.

சிலபுரம் எனும் பக்கத்து நாட்டில் உமர் எனும் கொடுங்கோலன் ஆட்சி செய்து வந்தான். ஒருநாள் உமர் தான் ஒரு போட்டி வைக்கப் போவதாகவும் துணிவுள்ள

அரசர்கள் கலந்து கொள்ளும்படி அறிக்கை ஒன்றை விடுவித்தான்.

விஷயம் வீரலிங்க மன்னருக்கும் எட்டியது. உடனே அவர் சிலபுரம் நோக்கிப் புறப்பட்டார். எல்லா அரசர்களும் சிலபுரத்தில் கூடினர்.

போட்டி அறிவிக்கப்பட்டது. ஒரு சின்ன வளையத்தைக் காட்டி, "இதனுள் சென்று வர வேண்டும். சென்று வந்தால் இந்த நாட்டையே பரிசாக அளிப்பேன். ஆனால் சென்று வரவில்லையென்றால் அவர்கள் எனக்கு அடிமையாக வேண்டும்," எனக் கூறினான்.

ஒவ்வொருவரும் முயன்று தோற்றனர். கடைசியில் அரசர் வீரலிங்கம் முயற்சி செய்தார். அவராலும் முடியவில்லை. எல்லோரும் அடிமையாயினர்.

மன்னர் வீரலிங்கம் அடிமையான செய்தி மகிளபுர இளவரசன் மகிலபாலனுக்கும் எட்டியது. மகிலபாலன் தாயின் ஆசியுடன் குதிரையில் சிலபுரம் சென்றான். வழியில் அவனுக்குத் தண்ணீர் தாகம் எடுத்தது.

அருகில் ஒரு குளம் தெரிந்தது. குளத்தைச் சுற்றிலும் செடியும், கொடியும் மண்டிக் கிடந்தன. மகிலபாலன் வாளை எடுத்துச் செடி கொடிகளை அப்புறப்படுத்தினான். என்ன அதிசயம்! வாள் முன்பு இருந்ததை விடச் சற்று நீண்டு காணப்பட்டது.

அந்த அதிசய இலையை ஒரு கூடையில் பறித்து வைத்துக் கொண்டான். அரண்மனையை நோக்கி நடந்தான்.

மன்னன் உமரைக் கண்டு, தான் போட்டிக்கு வந்திருப்பதற்காகச் சொன்னான். உமர் அந்தச் சின்ன வளையத்தைக் காட்டி, "இதனுள் சென்று வா," என்று நிபந்தனையைக் கூறினான்.

மகிலபாலன் யோசித்தான். வாள் நீளமானது நினைவுக்கு வந்தது. உடனே கூடையில் கொண்டு வந்த இலையை எடுத்து, வளையத்தைச் சுற்றித் தேய்த்தான். அது பெரிய வளையமானது. சுலபமாய் அதனுள் சென்று வெளியே வந்தான்.

மன்னர் உமர், "இது ஒத்துக்கொள்ளப்பட மாட்டாது. வஞ்சக முறையில் வென்றிருக்கிறாய் நீ," என்று கூறினான்.

"உமர், சின்ன வளையத்தில் ஒரு ஆளை நீ போகச் சொல்கிறாய். இது மட்டும் வஞ்சகமில்லையா?" என்று கேட்டான் மகிலபாலன்.

வேறு வழியின்றி உமர் தோல்வியை ஒப்புக் கொண்டான்.

அடிமையாயிருந்தவர்கள் எல்லோரும் விடுவிக்கப்பட்டனர். உமர் கைதானான்.

நாடு மகிலபாலனுக்குக் கொடுக்கப்பட்டது. மகிளபுரத்தோடு சிலபுரமும் ஒன்று சேர்க்கப்பட்டது. இளவரசன் மகிலபாலனுக்கு முடி சூட்டு விழா நடைபெற்றது.

— எஸ். ஜெகதீசன், கமுதி.



என்னைப் பற்றிய சிறு குறிப்பு: என் பெயர் செல்வம். ஆறாம் வகுப்புப் படிக்கிறேன். படிப்பு, விளையாட்டு இரண்டிலும் சுட்டி. இதைத் தவிர எனக்குப் பிடித்தமான இன்னொன்று பொய் பேசுவது. ஆனால் இதுவரை என் பொய்யால் விபரீதம் ஏதும் விளைந்ததில்லை; பெரும்பாலும் சிரிப்பைத்தான் வரவழைக்கும்.

இனி, கதைக்கு வருவோம்.

இப்போது நான் சீரான வேகத்தில் சென்று கொண்டிருக்கும் ஒரு மாட்டு வண்டியில் உட்கார்ந்திருக்கிறேன். அருகில் என் அம்மா, அப்பா, அக்கா.

நான்கு கி.மீ. தூரத்தில் இருக்கும் மாமா வீட்டுக்குச் செல்கிறோம். ஏதோ கம்பெனியில் என் மாமா மானேஜராக வேலை பார்க்கிறார். அவர்கள் ஊரில் மாரியம்மன் கோவில் திருவிழா என்பதால் எங்களை அழைத்திருக்கிறார்கள். என்னையும் என் அக்காவையும் விடுமுறையில் சில தினம் அங்கு விட்டு விட்டு வருவதாகவும் என் அப்பா சொல்லியிருக்கிறார்.

அந்த அந்தி மயங்கிய நேரத்தில் நானும் மயங்கினேன். தார்ச் சாலையில் மாடுகளின் லாடம் அடித்த (ச்சோ... பாவம்!) பாதங்களின் ஓசை தாளம் போல் கேட்டுக்

கொண்டிருந்தது.

அது காட்டுப் பாதை. திடுதிப்பென்று மாடுகளின் காலடி ஓசை தேய்ந்து நின்றது. வெளியே எட்டிப் பார்த்தேன். வண்டியை நான்கு பேர் சூழ்ந்தார்கள்!

அதில் மூன்று பேர் கையில் கத்தி வைத்திருந்தார்கள். நிலா ஒளியில் அவை அழகாக மின்னியது. அவர்களில் தலைவன் போல் இருந்தவன் வண்டியின் பின்புறம் வந்தான். அவன் கையில் துப்பாக்கி.

என் அம்மா கத்தினார்கள். என் அப்பா செய்வதறியாது விழிக்க ஆரம்பித்தார்.

''உம்... கத்தாதே. உங்களை ஒண்ணும் செய்ய மாட்டேன். போட்டிருக்கிற நகையையும், பணத்தையும் மட்டும் கொடுத்திடுங்க. கொடுக்கறீங்களா, இல்லே என் ஆளுங்களை விட்டு எடுக்கச் சொல்லவா?'' கடுமையான கரகர குரலில் மிரட்டினான்.

அவன் கட்டளைக்குப் பயந்து, என் அம்மாவும் பயத்தில் ஒவ்வொரு நகையாக கழட்ட ஆரம்பித்தார்கள்.

''அப்பா... நாம இன்ஸ்பெக்டர் மாமா வீட்டுக்குப் போனதும் எனக்குச் சாக்லேட் தருவாரா?'' என்று சாதாரணமாகக் கேட்டேன் நான்.

நான் என்ன சொல்கிறேன் என்று புரியாமல், என் அப்பா என் வாயைப் பொத்தி, ''சும்மாயிருடா,'' என்றார்.

ஆனால் திருடன் சும்மா இருக்கவில்லை.

''டேய் பொடியா! என்ன சொன்னே? உன் மாமா இன்ஸ்பெக்டரா?'' அவன் குரலில் பயம் இருந்தது.

''ஆமாம்! இப்ப கூட எங்களை ஜீப்ல கூட்டிட்டுப் போறதா இருந்தாரு. கடைசி நேரத்துல வீட்டுக்கு ஃபோன் பண்ணி, 'ஸ்டேஷன்ல கொஞ்சம் அவசர வேலை இருக்கு. நீங்க வண்டியில புறப்பட்டு வாங்க. நான் வழியில உங்களைப் பிக்அப் பண்ணிக்கிறேன்'னு சொன்னார். ஒரு வேளை... இப்ப வழியில வந்தாலும் வருவாங்க.'' பதறாமல் பயப்படாமல் இவ்வளவு கோவையாக எப்படிச் சொன்னேன் என்று எனக்கே ஆச்சரியமாக இருந்தது.

திருடர் தலைவன், கூட்டாளிகளிடம், ''டேய், இது இன்ஸ்பெக்டர் குடும்பம்டா... தூரத்துல ஏதோ வர்ற சத்தம் கேட்குது. இன்ஸ்பெக்டர்தான் வர்றார் போல இருக்கு.'' என்று கத்திக் கொண்டே ஓட ஆரம்பித்தான்.

அவனைத் தொடர்ந்து மற்ற மூன்று பேரும் பயந்து ஓடினார்கள்.

அவர்கள் தலை மறைந்ததும் ஒரு கார் எங்களைக் கடந்து போனது. அதற்கு என் நன்றியைத் தெரிவித்தேன். அதைக் கண்டு தானே திருடர்கள் பயந்து ஓடினார்கள்! எங்கள் வண்டி ஓட்டியும் எங்கே திரும்பி வந்து விடுவார்களோ என்ற பயத்தில் வேகமாக ஓட்ட ஆரம்பித்தார்.

என் அப்பாவும் நடந்ததைக் கண்டு பிரமைபிடித்துப் போய் இருந்தார். பிறகு பிரமை நீங்கியதும் கேட்டார்.

''எப்படிடா இவ்வளவு அருமையாப் பொய் பேசினே? மாமா 'இன்ஸ்பெக்டர்'னும் ஃபோனே இல்லாத நம்ம வீட்டுக்கு ஃபோன்ல பேசினார்னும் கதை கட்டி திருடர்களை ஓட வச்சுட்டியே பலே!'' என்று பாராட்டி விட்டு, நான் நெடுநாளாகக் கேட்ட கைக்கெடிகாரத்தையும் உடனே வாங்கித் தருவதாகக் கூறினார்.

— மு. திருநாவுக்கரசு, மொரப்பூர்.



1. தெற்கு வடக்காகக் கட்டப்பட்ட ஆறடி உயரமுள்ள மதிலின் மீது ஒரு சேவல் அமர்ந்துள்ளது. அதன் தலை கிழக்கு நோக்கியும் பின் பகுதி மேற்கு நோக்கியும் உள்ளது. அது இடும் முட்டை எந்தப் பக்கம் விழும்?

2. சென்னையிலிருந்து ஆலங்குடிக்கு ஒரு கார் இரண்டரை மணி நேரத்தில் வந்து சேர்ந்தது. ஆனால் அதே கார் ஆலங்குடியிலிருந்து சென்னைக்குச் செல்ல நூற்றைம்பது நிமிடங்கள் ஆயிற்று. அதற்குக் காரணம் என்ன?

3. அண்ணன், தம்பி இரண்டு பேர், மூன்று மாம்பழங்களை அறுக்காமல் அவர்களுக்கு முழுமையாகப் பங்கிட்டுத் தர வேண்டும்...! எப்படித் தருவது?

4. ஒரு குடும்பத்தில் தந்தை மகன் இருக்கின்றனர். தாய், மகன் இருக்கின்றனர். கணவன் மனைவி இருக்கின்றனர். அண்ணன் தங்கை இருக்கின்றனர். அப்படியானால் அந்தக் குடும்பத்தில் மொத்தம் (குறைந்தபட்சம்) எத்தனை பேர் இருப்பார்கள்?

விடைகள்:

1. சேவல் முட்டை இடாது.
2. 150 நிமிடங்கள் என்பது இரண்டரை மணி நேரந்தான்.
3. அண்ணன் தம்பி இரண்டு பேர் என்று சொன்னால் அண்ணன் ஒருவன் தம்பி இரண்டு பேர் எனப் பொருள் தரும். ஆகவே மூன்று பேர் ஆகிறது. அதனால் மூன்று மாம்பழத்தை ஆளுக்கு ஒன்றாய்ப் பிரித்துத் தரலாம்.
4. நான்கு பேர் (தாய், தந்தை, மகன், மகள்)

— கோவிலூர் தமிழ்முரசு


ஓய் பொடியன்களா, என்னோட ஸ்கூல் பையையும், வீட்டுவரை தூக்கி கிட்டு வாங்கடா!
ஒழுங்கா தூக்கிட்டுப் போங்க! கீழே போட்டீங்க; அப்புறம் தொலைச்சிடுவேன்!
ஐயோ எலி
ஐயோ எலி
ஐயோ எலி
எளியாரை வலியார் வாட்டினால் வலியாரை எளியார் வாட்டுவார்!
மாலா-

13

வண்ணத் தோட்டத்தின் வானம்பாடிகள்

-பூதலூர் முத்து-



காலை வழிபாட்டுக் கூட்டம்.

தலைமை ஆசிரியர் வந்து நின்றார். சுற்றுலா போய்வந்த பிறகு அனை வரையும் அவர் சந்திக்கின்ற முதல் கூட்டம்.

'சுற்றுலாவில் நிகழ்ந்தவற்றைப் பற்றி என்ன கூறப் போகிறாரோ — எப்படியெல்லாம் சினம் வெடிக்கப் போகிறதோ!'

குண்டுசி விழுந்தாலும் கேட்கிற அளவுக்கு மாணவர்கள் அமைதியாக இருந்தார்கள்.

அவர் வழக்கம் போல, "இந்த இனிய காலை வேளையில் என் நல் வாழ்த்துகளை உங்களுக்குத் தெரி விக்கிறேன்," என்று முகம் மலரப் பேசினார்.

ஓயாத அலைகள் உள்ளத்தில் குதித்துக் கொண்டிருந்தாலும் பொறுமை இழக்காத அந்தப் பண்பு எல்லோருக்கும் வியப்பை ஏற்படுத் தியது.

அடுத்து, பகத் வந்து மைக் முன் னால் நின்றான்.

சுற்றுல்லாவில் அவன் பெற்ற இனிய அனுபவங்களை அழகாக விவரித்தான்.

அருவியின் தோற்றத்தையும் மக்களின் வாழ்க்கையையும் இயற்கைச் சூழலின் மாட்சியையும் ஒரு கவிஞனைப் போல உணர்ந்து கூறினான். அவன் பேசிய தமிழ் எல் லோரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. 'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்று பாவேந்தர் பாடியது நினைவுக்கு வந்தது. துன்ப நினைவுகளை மறந்து அவனுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

'ரோஜாச் செடியில் கீழே முள் இருந்தாலும் மேலே மலர்ந்து மணம் வீசும் மலர் இருக்கிறதே!'

மணிவாசகம் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

வேலப்பனுக்கு பள்ளியில் ஆசைத் தம்பி நண்பனாக இருந்தான். பள்ளிக்கு வெளியே கோலப்பன் என்பவனோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்தான்.

கோலப்பனுக்கு இருபத்தைந்து

வயது. கறுத்த உருவம். கவலைப் படாமல் திரிந்து கொண்டிருந்தான்.

அவனுக்கு எட்டாம் வகுப்பிற்கு மேல் படிப்பு ஏறவில்லை. எந்த வேலையும் தெரியவில்லை. கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் இல்லை. பெற்றோருக்கும் அடங்க வில்லை. கண்டித்துப் புத்திமதி சொல்லும் ஆசிரியரை அவன் வெறுப் போடு பார்த்தான். பாடம் எழுதச் சொன்ன ஆசிரியரைப் பற்றிச் சுவரில் இழிவாக எழுதினான்.

மாணவர்களைக் கிண்டல் செய் வான். அவர்கள் வகுப்பு ஆசிரியரி டமோ, தலைமை ஆசிரியரிடமோ சென்று அவனைப் பற்றிச் சொல் வார்கள். அவனைக் கூப்பிட்டு விசாரிப்பார்கள். மறுநாள் அந்த மாணவிகளுடைய சைக்கிள் ஸீட்டை அவன் கிழித்து விடுவான்.

தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக ஒரே வகுப்பில் இருந்து அவனுக்கும் அலுத்துப் போய் விட்டது. கட்சி களுக்குக் கொடி பிடிக்கக் கூப்பிட் டார்கள். அதற்குக் கூலியும் கிடைத் தது. பள்ளிக் கூடத்தை விட்டுப் போய்விட்டான்!

உழைத்துப் பிழைப்பதை விடக் கொடி பிடிப்பது சுலபமாக இருந்தது அவனுக்கு! அவன் பின்னாலும் நாலுபேர் சுற்றத் தொடங்கினார்கள். கர்வம் தலைக்கு மேல் ஏறிவிட்டது!

செய்தித்தாள்கள் வாங்கு வதற்காக அவன் 'கோமதி நியூஸ் ஏஜன்சி'க்கு வருவான். அப்போது தான் வேலப்பன் அவனைச் சந்தித் தான். இந்தக் கோலப்பனைப் பயன் படுத்தி அந்தப் பயல்களுடைய கொட் டத்தை அடக்க வேண்டும் என்று திட்டம் தீட்டினான்.

அவர்களுடைய 'நட்பு' வளர்ந்தது.

"வேலப்பா! உனக்கு வேண்டாத வர்கள் யார் யார் என்று சொல், எல்லோரையும் நான் கவனித்துக் கொள்கிறேன்."

ஒரு படைத் தளபதியைப் போல மார் தட்டினான் அவன். "அரவிந் தன், ராமு, பீட்டர், முகம்மது அலி இவர்களைத் தவிர ஒரு வாண்டு பகத்சிங்!" ஏதோ பரிசுக் குழுவுக்குப் பெயரைச் சிபாரிசு செய்வது போல் ஆர்வத்தோடு கூறினான் வேலப்பன்.

"இந்த நோட்டில் அவர்களுடைய பெயர்களையும் விவரங்களையும் எழுதிக்கொடு. அப்புறம் என்ன நடக் கிறதென்று பார்!" கோலப்பன் மீசையை முறுக்கிக்கொண்டு கர்ஜித் தான்.

வேலப்பனுக்கு அவன் மீது நம் பிக்கை இருந்தது.

மீசையிலிருந்து கையை எடுத்த கோலப்பன் சட்டைப் பையைத் தடவினான்.



"ஏதாவது வேண்டுமா?" வேலப் பன் முந்திக் கொண்டு கேட்டான்.

"ஆமாம்... பணம் வேண்டும். இருந்தால் கொடு. உதவியாக இருக் கும்."

அவன் கேட்ட நேரத்தில் கொடுத்

தால்தான் 'உருப்படியாக' எதை யாவது செய்வான். இல்லாவிட்டால் வாக்குறுதியோடு நிறுத்தி விடுவான்.

வேலப்பன் யோசித்தான். சுற்று முற்றும் பார்த்தான், யாரும் இல்லை. மேசை டிராயரை இழுத்து இருபத் தைந்து ரூபாய் பணத்தை எடுத்து அவனிடம் கொடுத்தான்.

அவன் முகம் சுளிக்காமல் அதை வாங்கிக் கொண்டான். பிழைக்கும் வித்தைதான் அவனுக்கு நன்றாகத் தெரியுமே!

அரவிந்தனுக்கு நான்கு நாட்களாக உடல் நிலை சரியில்லை. காய்ச்சலும் சளியும் அவனைத் தொல்லைப் படுத் தின. அதனால் பள்ளிக்கு வரவில்லை. நண்பர்களுக்குக் கடிதம் எழுதி விவரம் தெரிவித்திருந்தான்.

பகத் நடந்தே பள்ளிக்கு வந்தான். அலுவலக வண்டியைச் சொந்த உப யோகத்திற்குப் பயன்படுத்தக் கூடாது என்பதில் பல்பீர்சிங் மிகவும் கண் டிப்பாக இருந்தார். தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் முட் டைக்கு ஆசைப்பட்டால், ஊழியன் கோழியைப் பிடித்து விடுவான் என் பது அவருக்குத் தெரியும்!


பகத் நடந்து போவதற்காகக் கவலைப் படாமல் அதையும் மகிழ்ச் சியோடு ஒரு பயிற்சியாக நினைத்துச் சென்றான்.

அன்று அறிவியல் ஆய்வுக் கூட்டத் தில் பணிகள் இருந்ததால் சற்று முன்னதாகவே புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்தான்.

'கிணிங்.... கிணிங்' மணியோசை கேட்டது. திரும்பிப் பார்த்தான்.

வேலப்பன் சைக்கிளில் அவனைத் தாண்டிச் சென்றான்.





அந்தச் சைக்கிளைப் பார்த்ததும் அவனுக்குப் பகீர் என்றது.

பச்சை வண்ணம்! சைக்கிளில் 'மெட்ரோ' என்ற பெயர் எழுதப்பட்டிருந்தது. ஸீட்டின் நிறமும் மாறியிருந்தது.

மாறு வேடத்திலிருந்தாலும் குழந்தையைத் தாய் அடையாளம் கண்டு கொள்வது போல, அது தன்னுடைய சைக்கிள்தான் என்று பகத் எளிதாகக் கண்டு கொண்டான்.

குழந்தையிடம் தாய் அன்பு காட்டுவதுபோல பகத் பிரியத்தோடு வைத்திருந்த சைக்கிள் அது! அவனுடைய கண்ணெதிரிலேயே வேறு ஒருவன் உரிமை கொண்டாடி அதில் ஏறிப் போகிறான். என்ன செய்வது?

அவனுடைய மனம் மி கு ந் த வேதனைக்குள்ளானது.

அதை இன்னும் மிகுதிப் படுத்துவதைப் போல வேலப்பன் தேவையில்லாமல், 'கிணிங்.... கிணிங்' என்று மணி அடித்தான். பகத்தைத் திரும்பிப் பார்த்துக் கேலியாகச் சிரித்தான். அவனுடைய உள்ளம் கொந்தளிப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தான்.

பள்ளியிலிருந்து திருடப்பட்ட பகத்தின் சைக்கிள் கோலப்பனின் கைக்குச் சென்று உருமாறியிருந்தது.

கோலப்பன் அதற்குப் பச்சை வண்ணம் அடித்தான்; ஏற்கனவே இருந்த 'பியானோ' மணியை உடைத்துக் கழற்றி எறிந்துவிட்டு, வேறு ஒரு மணியை வைத்தான்; ஸீட்டை மாற்றினான்; பெயரை மாற்றி 'மெட்ரோ' என்று எழுதினான்.

எல்லா வேலைகளும் இரகசியமாக முடிக்கப்பட்டன! இதற்கெல்லாம் வேண்டிய தொகையை வேலப்பன் விமலானந்தத்துக்குத் தெரியாமல் எடுத்துக் கொடுத்திருந்தான்.

கோலப்பனுக்குத் தெரிந்த ஒரு சைக்கிள் கடையில் அந்தச் சைக்கிளை நிறுத்தி, வாடகை வண்டியை எடுத்துக் கொண்டு போவது போல் எடுத்துச் சென்றான் வேலப்பன்.

பகத்தின் மனம் துன்பப்பட வேண்டும். அதற்காகத்தான் அவன் அவ்வளவு பெரிய முயற்சியை எடுத்துக் கொண்டான்.

பகத் உள்ளுக்குள் குமுறிக் கொண்டிருந்தான். கண்களில் கண்ணீர் திரண்டு வந்து பார்வையை மறைத்தது. பள்ளி முடிகிறவரை அமைதியாக இருந்தான்.

பள்ளிக்கு வேலப்பன் வரவில்லை. தலைமை ஆசிரியரை இரு முறை சந்திக்கின்ற வாய்ப்பு பகத்துக்குக் கிடைத்தது. எனினும் அவன் சைக்கிள் பற்றி எதுவும் சொல்லவில்லை. இந்த நேரத்தில் அவனுடைய பணிக்கு இடையூறு வேண்டாம் என்று நினைத்தான்.

பள்ளி விட்டதும் நேராக அரவிந்தனைக் காணச் சென்றான்.

அப்போது அவன் வீட்டுப் பயிற்சிகள் சிலவற்றைச் செய்து கொண்டிருந்தான். உடல் நலமின்றி வீட்டில் இருந்தாலும், அச்சமயத்தில் பள்ளியில் தரப்படும் பயிற்சிகள் என்னவென்று அறிந்து அவற்றைச் செய்து கொண்டு பள்ளிக்கு வருவது அவனுடைய வழக்கம்.

உள்ளே வந்த பகத் அரவிந்தனைக் கண்டதும் எதுவும் பேசாமல் மௌனமாக நின்றான். அவனுடைய கணகள் கலங்கியிருந்தன.

''பகத், விஷயத்தைச் சொல், ஏன் கண் கலங்குகிறாய்?''

அவனை அன்போடு அரவணைத்துக் கொண்டு கேட்டான்.

வேலப்பன் சைக்கிளில் சென்ற நிகழ்ச்சியைக் குறிப்பிட்டான் அவன்.

''பள்ளியில் படிக்கிறவன் பள்ளிக்கு வெளியேயும் மாணவன் தான். அவன் தன் பெருமையைக் காப்பாற்றிக் கொண்டு பள்ளியின் பெருமையையும் காப்பாற்ற வேண்டும். சக மாணவனிடம் அன்பு காட்ட வேண்டும்; ஒற்றுமையாக இருக்க வேண்டும். தேனீக்கள் கூட எவ்வளவு ஒற்றுமையாக வாழ்கின்றன, ஒன்றாக உழைக்கின்றன! அவற்றின் அருமை தெரியாமல் கல்லை விட்டெறிந்தான். அவை மாணவரையும் ஆசிரியரையும் கொட்டின. சுற்றுலாவின் இனிய அனுபவத்தையே குலைத்தான். தலைமை ஆசிரியரின் பொறுமைக்கும் ஓர் எல்லை வந்து விட்டது. கோபத்தை வெளியே கொட்டுவதால் என்ன பயன் வந்து விடப் போகிறது, மன்னிப்போம்; அன்பாலேயே எல்லாவற்றையும் சாதிப்போம் என்று எண்ணுகிற அவருடைய பண்புக்கே சவால் விடுவதாக இருக்கின்றன இவனுடைய வேலைகள்!''

அரவிந்தனுடைய உள்ளம் வேதனைப்பட்டது.

''சைக்கிளைக் கவர்ந்து கொண்டதுமில்லாமல் ஏளனமும் செய்கிறான். அது இதயத்தைத் துன்புறுத்துகிறது.''

பகத்தினுடைய உள்ளத் துடிப்பை அவனால் உணர முடிந்தது.

இருவரும் இளங்கோ நகர் காவல் நிலையத்திற்குச் சென்றார்கள்.

அங்கு இருந்த காவலரிடம் பகத்தினுடைய சைக்கிள் தொடர்பான செய்திகளைக் குறிப்பிட்டான் அரவிந்தன். தலைமை ஆசிரியர் ஏற்கனவே அது தொடர்பாகப் புகார் கொடுத்துள்ளதையும் தெரிவித்தான்.

''தம்பி, நீ சொல்கிறாயே வேலப்பன் அவனுடைய தந்தை யார்?'' — காவலர் கேட்டார்.

''கோமதி நியூஸ் ஏஜன்சி விமலானந்தம்''

''அவரா? பெரிய புள்ளியா



யிற்றே...? நிதானமாகத்தான் போக வேண்டும்.''

''சைக்கிள் இவனுடையது. இவனுடைய தந்தையும் பெரிய அதிகாரி.''

''இருக்கட்டும். பிரச்னை சிக்கலாக இருக்கிறதே! சைக்கிள் இந்தப் பையனுடையது என்பதற்கு என்ன அடையாளம்? சான்று?''

''மேலே அடித்திருக்கிற பச்சைப் பெயிண்டைச் சுரண்டினாலே உண்மை வெட்ட வெளிச்சமாகி விடும். 'அட்லஸ்' என்ற பெயர் உள்ளே மறைந்துள்ளது. இதைப் பாருங்கள் இதுதான் சைக்கிள் எண்... இதுவும் உள்ளே மறைந்துள்ளது.''

''சுரண்டிப் பார்த்த பின்னர் அப்படி இல்லாமல் இருந்தால்...? வீணான பிரச்னை வந்து சேருமே!''

கவலையை வெளியிட்டார் அவர்.

''சிக்கல்.... பிரச்னை இதையெல்லாம் தீர்க்கத்தானே காவல் நிலையம் இருக்கிறது? நீங்களே இப்படிச் சிக்கல்.... பிரச்னை என்று சொல்லிக் கொண்டிருந்தால்...?''

அரவிந்தன் அப்படிக் கேட்பான் என்று அவர் எதிர் பார்க்கவில்லை.

''தம்பி... நீ அதிகமாய் பேசுகிறாய். போய் வா...'' என்று எரிந்து விழுந்தார் அவர்.

அரவிந்தன் அஞ்சவில்லை.

''உள்ளே சென்று காவல் அதிகாரியைப் பார்த்து விட்டுப் போகிறோம்... அனுமதி கொடுங்கள்.''

அப்போது காவல் அதிகாரி தாமோதரன் வெளியே வந்தார். அரவிந்தனின் குரல் அவருடைய காதில் விழுந்தது.

''தம்பிகளே, உள்ளே வாருங்கள்!'' என்று மகிழ்ச்சியோடு அழைத்தார்.

''403! இவர்களுக்கு தேநீர் ஏற்பாடு செய்,'' சற்றுமுன் எரிந்து விழுந்த காவலர் இப்போது 'புன்னகையோடு' கடமையாற்றச் சென்றார்.

அரவிந்தனும் பகத்தும் கூறிய செய்திகளை தாமோதரன் அக்கறையோடு கேட்டார்.

'பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும்
இலமே'

என்ற புறநானூற்றுப் பாடலின் அடியொற்றி நடப்பவர் அவர். அது அவருடைய சொற்களிலும் செயலிலும் வெளிப்பட்டது.

'ரைட்டரை'க் கூப்பிட்டு எல்லா விவரங்களையும் முழுமையாக எழுது மாறு கூறினார்.

''அரவிந்தன், பகத்சிங்! உரிய நடவடிக்கைகளை முறைப்படி உடனே எடுப்போம். சென்று வாருங்கள்.''

அவர் காட்டிய அன்பு அவர்களுடைய கவலையைப் போக்கியது. பதவிச் செருக்கற்ற அவருடைய பண்பு நம்பிக்கை உணர்வைத் தோற்றுவித்தது.


அரசின் சாதனைகளை விளக்கும் கண்காட்சி ஒளவை நகர்த் திடலில் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

மாலை நேரம். வண்ண விளக்குகள் சிவப்பு, மஞ்சள், நீலம், பச்சை என்று பல நிறத்தில் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. வெள்ளைக் குழல்

ஒரு தந்தையின் பெருமிதம்!

எனது மகன் எல்.கே.ஜி. முதல் இன்று வரை முதல் மாணவனாய் இருந்து வருவதுடன், பள்ளியில் நடைபெறும் அனைத்துப் பேச்சுப் போட்டிகளிலும் பங்கேற்று முதற் பரிசினைப் பெற்று வருகின்றான். இவனை விட சீனியர் மாணவ, மாணவியர் பங்கேற்ற போதும், '88—'89ல் எட்டாம் வகுப்பே படித்து வந்த இவனுக்குப் பரிசுகளும், பாராட்டுக்களும் கிடைக்கத் தவறியதில்லை. ரோட்டரி, ஜேசீஸ் நடத்திய போட்டிகளிலும் பரிசுகள் பெற்று வந்துள்ளான்.

மேலும் 'ஏர்—இந்தியா' நடத்திய பேச்சுப் போட்டியில் மாவட்ட அளவில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளான். இது மட்டுமல்லாமல் எங்கள் கம்பெனியில் ஆண்டுதோறும் கொண்டாடி வரும் மார்கழி விழாவில் நடத்தப்படும் திருப்பாவை — திருவெம்பாவை போட்டியில் கடந்த 10 ஆண்டுகளாகத் தொடர்ந்து முதற் பரிசினைப் பெற்று வந்துள்ளான் என்பது குறிப்பிடத்தக்கது. கற்றறிந்த சான்றோர்கள்தான் நடுவர்களாய் இருப்பர். இவன் ஓர் இஸ்லாமியச் சிறுவன் என்பது குறிப்பிடத்தக்கது.



ஒரு தந்தையின் பெருமிதத்தைப் பறைசாற்றுகிறது இந்தக் கதை.

தந்தை: காமராசர் மாவட்டம் ராமசாமி ராஜா நகரிலுள்ள 'மதராஸ் சிமெண்ட்ஸ் லிட்., நிறுவனத்தைச் சேர்ந்த டி. ஆர். முஹம்மது யூசுப் போதிய நற்சான்றிதழ் நகல்களோடு இந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறார்.

மகன்: டி.ஆர்.எம். சுபையர் அலி. அதே ஊரில் உள்ள வித்யா மந்திர் இங்கிலீஷ் மீடியம் பள்ளியில் ஒன்பதாம் வகுப்புப் பயிலும் பதினாலு வயதுச் சிறுவன்.

மகனை அவையத்து முந்தியிருப்பச் செய்த' தந்தையையும், பெற்றவருக்கு 'இவன் தந்தை எந்நோற்றான் கொல் எனும் சொல்' வாங்கித் தந்த மகனையும் நெஞ்சார வாழ்த்துகிறோம்.

— ஆசிரியர்.

விளக்குகள் நீள் வரிசையில் அமைத்து பால் போன்ற ஒளியை வாரி இறைத்துக் கொண்டிருந்தன. எங்கும் ஒளி வெள்ளம்!

வடக்கு மூலையில் சுழன்று கொண்டிருந்த இராட்சதக் குடை ராட்டினம் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்தது; நாற்காலிகள் அந்தரத்தில் அசைந்து கொண்டிருந்தன. சிறுவர் சிறுமியரின் முகத்தில் ஆனந்த வெள்ளம்!

கல்வித்துறை, நலத்துறை, காவல் துறை, வேளாண் துறை இப்படிப் பல துறைகளும் அரங்கங்களை அமைத்திருந்தன. திடலின் மையப் பகுதியில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கென்று ஓர் அலங்கார மேடை அமைக்கப் பட்டிருந்தது.

கூட்டம் நிரம்பி வழிந்தது. சைக்கிள் வைப்பதற்குரிய இடத்தில் ஏராளமான சைக்கிள்கள் நின்று கொண்டிருந்தன.

அரவிந்தன், ராமு, பகத், பீட்டர், அலி எல்லோரும் அந்தக் கண்காட்சிக்கு வந்தனர்.

அரவிந்தன், ராமு, பீட்டர், அலி ஆகியோரை அழைத்து இரகசியமாக அவர்களிடம் ஏதோ கூறினான். அவர்கள் திசைக்கு ஒருவராகச் சென்றார்கள்.

அவனும் பகத்தும் சைக்கிள்கள் நிறுத்தப்பட்டிருந்த இடத்துக்கு வந்தனர்.

ஆயிரக்கணக்கான சைக்கிள்கள்! திருவிழாவில் காணாமற்போன குழந்தையைத் தேடுவதைப் போல இருந்தது அவர்களுடைய முயற்சி!

அமைதியாகப் பார்த்துக் கொண்டே வந்தார்கள்.

பகத்தின் முகம் மலர்ந்தது. எதிர்பார்ப்பு வீண் போகவில்லை. அவனுடைய சைக்கிளை அங்கே பார்த்து விட்டான்!

'அரவிந்தன், இதோ என்னுடைய சைக்கிள்!' என்று மகிழ்ச்சியில் குரல் எழுப்ப வாய் திறந்தான். சூழ்நிலையைக் கருதி அமைதியாகி விட்டான். அவனிடம் இரகசியமாகக் கூறினான்.

அதைக் கேட்ட அரவிந்தன் அடுத்து என்ன செய்யலாம் என்று யோசித்தான்.

அப்போது அவர்கள் சற்றும் எதிர்பாரா வண்ணம் காவல் துறையின் ஜீப் ஒன்று விரைந்து வந்து திடலின் மையப்பகுதியில் நின்றது. காவல் துறை அதிகாரி தாமோதரன் கீழே இறங்கினார்.

"அதோ எஸ். ஐ தாமோதரன் வருகிறார். மிகவும் வசதியாகப் போய் விட்டது. அவரிடம் சொல்லி விட்டால் மற்றவற்றை அவர் பார்த்துக் கொள்வார்."

இருவரும் அவரிடம் விரைந்து சென்றார்கள்.

கூட்டத்தோடு கூட்டமாக நின்று கலைநிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்த வேலப்பன் தற்செயலாகத் திரும்பிப் பார்த்தான். பகத்தும் அரவிந்தனும் காவல் அதிகாரியின் அருகே நிற்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தான்.

(தொடரும்)



கேளுங்கள்

* எஸ். சீதா, மருதம்பட்டினம்.

கே: கம்ப்யூட்டர் முதன் முதலில் எங்கு, எப்போது, யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?




ப: யுத்தத்தினால் ஆயிரம் அழிவுகள் ஏற்பட்டாலும் உருப்படியான கண்டுபிடிப்பு ஒன்று உலகுக்குக் கிடைத்திருக்கிறது என்றால், அது கம்ப்யூட்டர்தான். இரண்டாம் உலக மகாயுத்தம் மும்முரமாய் இருந்த நேரம். அமெரிக்க ராணுவம் குண்டு வீசக் குறிப்பிட்ட இலக்கை நிர்ணயிக்கத் தடுமாறியது. மனித மூளை அந்த நெருக்கடி வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியவில்லை; எனவே, உடனுக்குடன்-சொடுக்குப் போடும் நேரத்தில் கணக்குப் போட்டுத் தர ஓர் இயந்திரம் இருந்தால் எப்படி இருக்கும் என்று விவாதிக்க ஆரம்பித்தது. விளைவு? 1942 – ஆம் ஆண்டு அமெரிக்க ராணுவ ஆர்டியன்ஸ் பாக்டரியின் பாலியஸ்டிக் ரிசர்ச் லாபரட்டரியில் ஆய்வு ஆரம்பமாயிற்று. கைகொடுத்தவர்கள் பென்சில்வேனியா சர்வகலாசாலையின் த மூர் ஸ்கூல் ஆஃப் எலக்ட்ரிகல் இஞ்சினியரிங் நிபுணர்கள். அந்தக் கூட்டு முயற்சியில் முகிழ்த்த முதல் கம்ப்யூட்டரின் பெயர் ENIAC (Electronic Numerical Integrator and Calculator). அந்த ஆய்வுக் குழுவினருக்குத் தலைமை தாங்கியவர்கள், புரொபஸர் எக்கர்ட் ஜூனியர், புரொபஸர் ஜான் மாக்லி. இந்த ENIAC கம்ப்யூட்டர் நாட்டுடைமையாக்கப்பட்ட நாள்: 1946 பிப்ரவரி, 15.

* க. செந்தில்நாதன், உடன்குடி.

கே: நாம் தூங்கும்போது கனவுகள் எப்படி வருகின்றன?

ப: தூக்கத்திலே இரண்டு தட்டுக்கள் உண்டு. மருத்துவ மொழியில் சொல்வதானால் முதல் தட்டு REM (Rapid eye move). அடுத்த தட்டு NREM (Non-Rapid eye move). தூங்குகிறவரை ஆரம்பக் கட்டத்தில் கவனித்தால் கண்கள் படக்படக்கென்று அடித்துக் கொள்கிற மாதிரி ஓர் அசைவு இருக்கும். குழந்தைகளின் விழிகளைக் கவனித்தால் இது நன்கு புலனாகும். அதுவே சற்றுப் பொறுத்துப் பார்த்தால் விழிகள் அசைவது நின்று போய்ச் சலனமற்று இருக்கும். இது



ஆழ்நிலை உறக்கம். இந்த இரண்டாவது கட்டத்தில்தான் கனவுகள் வரும். ஆரோக்கியமான மனிதனுக்கு இப்படிக் கனவுகள் வர வேண்டும். வரும். அது ஏன் எப்படி என்பதற்குச் சொல்லப்படும் காரணங்கள் வெறும் ஊக வகைதானே தவிர, விஞ்ஞான ரீதியான உண்மைகள் அல்ல. அதுசரி, நீ விழித்திருக்கும்போது ஏதும் கனவுகள் காண்பதில்லையா? அப்படியானால் வாழ்க்கையில் நீ எந்தத் துறையிலாவது பெரிய அளவில் வரவேண்டும் என்ற ஆசை உனக்கு இல்லை என்று அர்த்தம்.

* இரா. ரெங்கசாமி, உத்தமபாளையம்.

கே: புத்தகச் சுமை அதிகம் உள்ள இன்றைய கல்வி முறை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: பள்ளிச் சிறுவர்களின் புத்தகச் சுமை! இதிலே உலகச் சாதனை புரிந்திருப்பது நம் நாடாகத்தான் இருக்கும் என்று





நினைக்கிறேன். தொழில் துறையிலாகட்டும், பயிர் விளைச்சலிலாகட்டும், மருத்துவத் துறை, விஞ்ஞானத் துறை, ஏன் கலைத் துறையிலாகட்டும் அமெரிக்காவைப் பார், ரஷ்யாவைப் பார், ஜெர்மனியைப் பார், ஜப்பானைப் பார் என்று சுட்டிக் காட்டி முடிந்த வரை பின்பற்றுகிற ஆளவந்தார்கள், புத்தகப் பொதி சுமக்கும் பாவப்பட்ட பள்ளிச் சிறார்களுக்குப் பரிந்து கொண்டு சின்ன நாடு ஜப்பானைப் பார் என்று செப்ப மாட்டார்களா? வெறும் ஏட்டுக் கல்வி நாட்டுக்கு உதவாது என்பதைப் புரிந்து கொண்டு, படிக்க வரும் சிறுவர்களின் ருசியை அறிந்து, அவரவர்க்கு உகந்த தொழிலை ஆரம்பக் கல்வி நிலையிலிருந்தே புகட்டி, இன்று தொழில் வளத்தில் கபிட்சத்தில் உச்சாணிக் கொம்பிலே இருக்கிற ஜப்பானைப் பின்பற்றி, புத்தகச் சுமையில் எதிர்கால வளத்துக்குப் பயனில்லாத சமாசாரங்களைக் களைந்து பள்ளிப் பிள்ளைகளின் கூனை நிமிர்த்த மாட்டார்களா? ஹூம்... என்றைக்கு என் ஏக்கம் நிறைவேறப் போகிறதோ!

* ஏ. சனாவுல்லா, மொரப்பூர்.

கே: நான் இரவில் தூங்கும் போது என்னையறியாமல் சிறுநீர் கழித்து விடுகிறேன். தாயத்து, மந்திரம் செய்துகூட, நின்ற பாடில்லை. இதைப் போக்க ஒரு வழி சொல்லுங்கள்.

ப: ஐயோ பாவம், இதுக்காக ஒன்றும் மனசு உடைஞ்சு போயிடாதே. இது ரொம்பச் சாதாரணமான குறைதான். படித்த டாக்டரைக் கேட்டால் **'Nocturnal Eneuresis'** என்று இந்த நோயைக் குறிப்பிட்டுச் சொல்வார். நீயும் சில வழிமுறைகளைக் கடைப்பிடிக்கலாம். படுக்கப் போகுமுன் தண்ணீர் குடிக்காதே. படுத்த சற்று நேரத்துக்கெல்லாம் எழுந்து போய்ச் சிறுநீர் கழித்து விட்டு வந்து படு. முதலில் கொஞ்சம் சிரமமாய்த்தான் இருக்கும். போகப் போகச் சரியாகிவிடும். கவலைப் படாதே தம்பி!

* தா. ஜாஹிர் ஆன் செல்ம் சைரஸ், குளச்சல்.

கே: கார்பனின் அடர்த்தி 1.5 என என் நண்பன் கூறினான். ஆனால் அது 1 அடர்த்தியுள்ள நீரில் மிதக்கிறதே, எவ்வாறு?



ப: உன் நண்பன் சொன்னது சரிதான். ஆனால் அதை நீ புரிந்து கொண்ட விதத்தில்தான் குளறுபடி. நீ சாதாரணக் கரித் துண்டை, கார்பன் என்று நினைத்துக் கொண்டு நண்பனை முட்டாளாக்கப் பார்க்கிறாய். கரித் துண்டிலே கார்பன் இருப்பது உண்மைதான். ஆனால் அத்துடன் அதில் வேறு பல சமாசாரங்களும் சேர்ந்திருக்கின்றனவே! அதனால் அதன் அடர்த்தி குறைந்து, நீரிலே மிதக்கிறது. அப்பட்டமான கார்பனை அப்பிலே போட்டால் அது அப்படியே அடிதேடிப் போய்விடுமாக்கும். கிடைத்தால் போட்டுப் பார். முழிக்காதே. அப்பு என்றால் தண்ணீர் என்றுதான் அர்த்தம். (ஒரு பர்ஸனல் சமாசாரம். உன் பேர் — இதுக்கு முன்னே நான் இப்படியொரு பேரைக் கேள்விப்பட்டதில்லை.)

— சின்ன அண்ணன் —

பிருந்தாவனக் கவியரங்கம்

பாரதி எனும் ஒளிவிளக்கு

அன்பும் அறிவும் ஆற்றலும் கொண்டவர்
வாழ்வில் வெல்கின்றார் — உயர்
குன்றம் போல்நீ வாழ்க என்றே
பாரதி சொல்கின்றார்!

அஞ்சா தேபொய் சொல்லா தேஉயிர்
கொல்லாதே தம்பி! — கொடும்
நஞ்சாம் சோம்பலை விட்டே உயர்க
நல்உழைப்பை நம்பி!

வளரும் அறிவியல் கலைகள் யாவும்
ஆழ்ந்தே கற்றிடுவாய் — இங்கு
ஒளிரும் வைரம் போல்வலி மைகொள்
வந்திடும் வெற்றிகளே!



அன்னை மொழியும் நாடும் அன்புத்
தாயென்றே வணங்கு — நம்
அன்னை தந்தை ஆன்றோர் தெய்வம்
திருவடிதினம் வணங்கு!

ஒளியும், நெஞ்சில் உறுதியும் கொண்டு
உயர்ந்திட வேண்டுமடா! — தமிழ்
ஒளியாம் பாரதி மொழிகள் சிறந்தே
வாழ்ந்திடத் தூண்டுமடா!

— சிவசக்தி, சேலம்.

'இளமையே நமக்குத் தத்துவம்'



அம்மா என்பது முதல் வார்த்தை
அன்பே உலகில் நல்வார்த்தை;

சும்மா என்பது வெறும் வார்த்தை;
சுறுசுறுப்பே ஒருசுக வாழ்க்கை!

அப்பா சொல்வது மந்திரம்
அறிவே தவழும் தந்திரம்
சுப்பா கேட்பாய் பணிவோடு
சுகமே பெறுவாய் கனிவோடு.

உதவி செய்வதே நற்பழக்கம்
உண்மை சொல்வதே சொற் பழக்கம்
பதவி உயர்வது தொழிற் பழக்கம்
பாரே போற்றும் குணப் பழக்கம்.

தருமம் செய்வோர் பெரியோரே
தரணி புகழவே வாழ்வாரே
பெருமை தேடு நாட்டுக்கே
பொறுமை தேவை வீட்டுக்கே.

இவையே நமக்குத் தத்துவம்
இனிமை சேர்க்கும் சத்துவம்
அவையே தொடர்ந்து செல்லுவாய்
அன்பால் உலகை வெல்லுவாய்.

— மா. முத்துசாமி, காரைக்குடி.

குட்டி நாய்



லொள்லொள் லொள் நாய்க்குட்டி
ஓட்டி அடித்திடும் நாய்க்குட்டி;
கள்வரைக் கண்டால் கதவிடுக்கில்
காணாமல் போகும் நாய்க்குட்டி!


ரொட்டி கேட்டிடும் நாய்க்குட்டி
ரோஸ்மில்க் கேட்கும் நாய்க்குட்டி;
கட்டில் கேட்டிடும் படுப்பதற்கு
கௌரவ மான நாய்க்குட்டி!

வாசச் சோப்பால் குளிப்பாட்டி
வைக்கச் சொல்லிடும் நாய்க்குட்டி;
சீசர் என்றே அழைத்திட்டால்
திரும்பிப் பார்க்கும் நாய்க்குட்டி!

வாலை ஆட்டிடத் தெரியாத
வம்சம் எங்கள் நாய்க்குட்டி;
காள்காள் என்றே கத்திதினம்
கடுப்பைக் கிளப்பிடும் நாய்க்குட்டி!

— ஏ. எஸ். முத்துக்குமார்.
செட்டிக்குறிச்சி.

வாயடக்கம் வாழ்வளிக்கும்



மழைக் காலம் வந்ததால்
மகிழ்ச்சி யோடு தவளையார்
எகிறிக் குதித்து ஆடினார்;
இன்ப மாகப் பாடினார்.

கட்டைக் குரலில் சங்கீதம்
கர்ண கடூர மாகவே
எட்டுத் திக்கும் கேட்கவே
எகிறிக் கத்திப் பாடினார்.

வயிற்றுக்கு இரை இன்றியே
வாடி வந்த பாம்பொன்று
குளத்தின் அருகே வந்தது;
தவளைக் குரலைக் கேட்டது.

பாட்டு வரும் திசையினைப்
பற்றி வந்த பாம்பது,
எட்டி வந்து பிடித்தது;
பாவம் தவளை செத்தது.

நமக்கு வரும் துயரெல்லாம்
நமது வாயால் வருவதே,
அதனால் தானே சொல்கிறேன்;
அளவாய்ப் பேசக் கற்றிடு.

— தூத்துக்குடி சு. மாருதி சுவாமிநாதன்.

பாட்டுச்சிட்டு



கிளை மேலே இருக்கும்;
குந்தி, சிட்டி அடிக்கும்;
ஊரைச் சுற்றிப் பறக்கும்;
ஓடி இரை பொறுக்கும்;
பஞ்சு போலப் பறக்கும்;
பாக்குப் போல இருக்கும்;
கொஞ்சு கின்ற சிட்டுக்
குருவி நிறம் பட்டு.

— இரா. மணிகண்டன்.

தம்பிப் பாப்பா



தம்பிப் பாப்பா, தம்பிப் பாப்பா,
குறும்பு செய்யாதே.
கொட்டிக் கிடக்கும் மண்ணை எடுத்து
வாயில் வைக்காதே;

வெட்டிப் பேச்சு வீணாய் வம்பாய்,
பொழுதைக் கழிக்காதே;
ஊரைச் சுற்றி நீ திரிந்து
உடல் கெடுக்காதே;

தம்பிப் பாப்பா தம்பிப் பாப்பா,
தூக்கம் கொள்ளாதே!
சோர்ந் தயர்ந்து நீ கிடந்து
சோம்பி வாழாதே!

நல்விஷயம் அறிந்து நீயும்
வாழ்வில் உயர்ந்திடு;
என்றும் தேனீச் சுறுசுறுப்பாய்
இருக்கப் பயின்றிடு.

— இரா. வசுமதி.

மாலை மயக்கம்



மஞ்சள் வெய்யில் மாலை
மணக்கும் மலர்ச் சோலை
நெஞ்சம் மகிழும் நேரம்;
நிறைய அழகு சேரும்.

குயில்கள் பாட்டுப் பாடும்,
கிளிகள் கொஞ்சிக் கூடும்.
மயில் ஒயிலாய் ஆடும்;
மான் மருண்டு ஓடும்.


பாடு படச் சென்றோர்,
பலரும் வரும் காலம்.
மாடும் ஆடும் மேய்ந்தே
வீடு வந்து கூடும்.

உடல் உறுதி யாக
ஓடி விளை யாடி,
கூடி நண்பர் நன்றே,
குலவும் நல்ல மாலை!

— வடகரைச் செல்வன்.

யாருக்கு வரும்?

யாருக்கு வரும்?
யாருக்கு வரும்?



எங்கள் தம்பிப் பாப்பா!
கண்ணும் மூக்கும்,
யாருக்கு வரும்? — அது
பொன்னைக் கொண்டு வருமே!
பொருளைக் கொண்டு வருமே!

யாருக்கு வரும்?
யாருக்கு வரும்?

எங்கள் தம்பிப் பாப்பா!
அழுகையும் சிரிப்பும்,
யாருக்கு வரும் — அது
மழலை கொண்டு வருமே!
மகிழ்ச்சி கொண்டு வருமே!

யாருக்கு வரும்?
யாருக்கு வரும்?

எங்கள் தம்பிப் பாப்பா,
பயமும் பாசமும்,
யாருக்கு வரும்? — அது
பயனைக் கொண்டு வருமே!
பலனைக் கொண்டு வருமே!

யாருக்கு வரும்?
யாருக்கு வரும்?

எங்கள் தம்பிப் பாப்பா,
துடுக்கும் மிடுக்கும்,
யாருக்கு வரும்? — அது
ஆட்டம் கொண்டு வருமே!
பாட்டுக் கொண்டு வருமே!

யாருக்கு வரும்?
யாருக்கு வரும்?

எங்கள் தம்பிப் பாப்பா,
தூக்கம் விழிப்பும்,
யாருக்கு வரும்? — அது
வியப்பைக் கொண்டு வருமே!
விருப்பைக் கொண்டு வருமே!

— மா. லோ. தாமோதரம் (மாயன்)


வாழ்க்கைப்படி

தேடிப்படி, தினமும் தேடிப்படி
தேர்ந்து முதிர்ந்தவர் நூலைப்படி;

நாடிப் படி நான்கு நாடிப்படி;
நல்லோர் வரலாற்றைத் தேடிப்படி.

ஏணிப்படி இவையே ஏணிப்படி;
என்றும் உயர்ந்து நீ ஏறப்படி;
என்றும் படி புகழ் எட்டிப்பிடி;
ஏற்றத்தின் உச்சியை எளிதில் பிடி.

வாழ்க்கைப்படி அது வாழும் படி;
வாழ்ந்து படி; என்றும் வாழப் படி;
உயரப் படி மேலே உயரப் படி;
உண்மை அதுவென்றே எண்ணிப் படி.



ஓடிப்பிடி தம்பி ஓடிப்பிடி;
உடலும் வலுப்பெற ஓடிப்பிடி;
ஆடிப்பிடி நாளும் ஆடிப்பிடி;
ஆற்றல் வளர்ந்திட ஆடிப்பிடி.

எண்ணிப்பிடி நெஞ்சில் எண்ணிப் பிடி;
எங்கும் நிறை இறை தாளைப் பிடி;
எண்ணப்படி உத்தன் எண்ணப்படி
யாவும் நடந்திடும் உள்ளப்படி.

— ஹ. சபீர் சலாம், பனைக்குளம்.

'வணங்கிடுவோம்! மகிழ்ந்திடுவோம்!'

தலையைத் தாழ்த்தி வணங்கிடுவோம் — தாயின்
அன்பைப் பெற்று மகிழ்ந்திடுவோம்.

காலைத் தொட்டுக் கும்பிடுவோம் — குருவின்
கலையைப் பெற்று உயர்ந்திடுவோம்.


பெரியோர் சொல்லைக் கேட்டிடுவோம்—வாழ்வில்
எளியோராக வாழ்ந்திடுவோம்.

கையைச் சேர்த்து வணங்கிடுவோம் — கடவுளின்
கனிந்த அன்பை நினைந்திடுவோம்.

இயற்கை அழகை ரசித்திடுவோம் — தமிழின்
இனிய சுவையை ருசித்திடுவோம்.

— இரா. பரமசிவம், புதுமாத்தூர்.

டாக்டர் பக்கம்



புண்கள் வருவது ஏன்?

டாக்டர். கு. கணேசன்

இன்று `மதியம் நான் சற்றே ஓய்வாக இருந்தபோது, ''வணக்கம், டாக்டர்,'' என்ற இனிமையான குரல் கேட்டு நிமிர்ந்தேன்.

பத்து வயதுச் சிறுமி ஒருத்தி என் அறைக்குள் நுழைந்து கொண்டிருந்தாள். வந்ததும் வராததுமாக அவள் பெயர் அகிலா என்றும், அம்மணியம்மாள் மேல்நிலைப்பள்ளியில் ஆறாம் வகுப்பில் படிப்பதாகவும் அடக்கமாக அறிமுகம் செய்து கொண்டாள். அகிலாவைப் பார்த்த மாத்திரத்திலேயே எனக்குப் பிடித்து விட்டது.

நான் : வாம்மா, உட்கார். என்ன விசயம்?

அகிலா : உங்களைத் தொந்தரவு செய்வதற்கு வருந்துகிறேன், டாக்டர். என் நெருங்கிய தோழி ஒருத்திக்கு உடம்பு முழுவதும் புண்கள் உள்ளன. அவளோடு பழகினால் எனக்கும் புண் வந்து விடும் என்று எங்கள் வீட்டில் சொல்கிறார்கள். எனவே என் தோழியிடமிருந்து புண்கள் எனக்குப் பரவி விடாமல் தவிர்க்க விரும்புகிறேன், டாக்டர், அதே சமயம் நமக்குப் புண்கள் ஏன் வருகின்றன, எப்படிப் பரவுகின்றன என்ற விவரங்களையும் உங்களிடம்கேட்டுத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன், டாக்டர்.`

நான் : உன் ஆர்வத்தைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன், அகிலா! உனக்குப் புண்கள் பற்றிய பல விவரங்களைத் தெளிவாகச் சொல்லுகிறேன், கேள். நம் தோலின் மேல் தானாகவே தோன்றும் கொப்புளங்களைத் தான் 'புண்கள்' என்கிறோம். ஆங்கிலத்தில் இதை 'இம்பெடைக்கோ' என்று அழைக்கிறார்கள். புண்கள் பொதுவாகப் பெரியவர்களுக்கு அதிகம் வருவதில்லை. குழந்தைகளுக்கும் உன் வயதுள்ள சிறுவர், சிறுமிகளுக்கும் புண்கள் வருவது சகஜம். புண்கள் பெரும்பாலும் முகம், மணிக்கட்டு, முழங்கால், முதுகு ஆகிய இடங்களில் அதிகமாக வருகின்றன.

அகிலா : புண்கள் நமக்கு எப்படி வருகின்றன என்பதை எனக்குச் சொல்லுங்கள், டாக்டர்!

நான் : நம் தோலின் மேல் அழுக்கு உள்ள இடங்களில் ஸ்டெர்ப்டோகாக்கஸ், ஸ்டெபைலோகாக்கஸ் என்ற சிலவகை பாக்டீரியாக் கிருமிகள் அமர்ந்து கொண்டு, அங்குள்ள அசுத்தங்களைத் தின்று பல்கிப் பெருகுகின்றன. பின்பு அவை தோலினை அரித்துச் சிவப்பு நிறத்தில் சிறு கொப்புளத்தை உண்டாக்குகின்றன. இது தான் புண். இதை ஆரம்பத்திலேயே கவனிக்கத் தவறிவிட்டால் சிறு கொப்புளம் பெரிய கொப்புளமாக வளரும். பின்பு அதனுள் சீழ் கட்டும். அடுத்த சில நாட்களில் அவை வெடித்து, மஞ்சள் நிறத்தில் சீழை வெளியேற்றும். இச்சமயத்தில் சீழோடு கிருமிகளும் வெளியேறுவதால் சீழ் படும் இடங்களில் எல்லாம் புண்கள் உண்டாகும்.

அகிலா : சரி டாக்டர், புண்கள் வரும்போது காய்ச்சலும் வருவதாக என் தோழி சொன்னாள். அது உண்மையா, டாக்டர்?

நான் : உண்மைதான், அகிலா! புண்கள் வரும்போது காய்ச்சலும் வரும். அது ஏன் வருகிறது என்பதையும் உனக்குச் சொல்லுகிறேன். புண்கள் பெரிதாகும்போதும், உடம்பில்

மற்ற இடங்களில் பரவும் போதும் பாக்டீரியாக் கிருமிகளின் எண்ணிக்கையும் அதிகமாகுமல்லவா? அப்போது அவை நம் இரத்தத்தில் கலந்து விடுவதால் காய்ச்சல் வருகிறது. அதே சமயம் புண்களுக்கு அருகிலுள்ள நிணநீர்க்கட்டிகளை வீங்கச் செய்கிறது. இதன் காரணமாகப் புண்கள் உள்ளவர்களுக்கு வலியும் காய்ச்சலும் சேர்ந்து கொள்ளும்....

அகிலா : ஏன் டாக்டர், புண்கள் சிறுவர் சிறுமிகளுக்கு மட்டுமே அதிகமாக வரும் என்று சொன்னீர்களே, அதற்கு ஏதேனும் தனிப்பட்ட காரணம் உண்டா?


நான் : உண்டு, அகிலா. புண்கள் அசுத்தத்தின் காரணமாக வரக்கூடிய தோல் வியாதி என்பதை நீ இப்போது புரிந்து கொண்டிருப்பாய் அல்லவா? நம்மில் பெரும்பாலான சிறுவர் சிறுமிகள் சுத்தத்தின் அவசியத்தை அவ்வளவாக அறிந்து வைத்திருப்பதில்லையே! அவர்கள் சுத்தமற்ற இடங்களில் விளையாடுகிறார்கள். அசுத்தமான குழந்தைகளோடு பழகுகிறார்கள். அறியாமையின் காரணமாகவும் சோம்பேறித்தனத்தாலும் சில சிறுவர்கள் தங்கள் உடம்பையும் சுத்தமாக வைத்திருக்கத் தவறி விடுகிறார்கள். ஆக, பெரியவர்களைக் காட்டிலும் சிறுவர்களுக்கு அதிகமாக அழுக்குச் சேரும் வாய்ப்பு நிறைய உள்ளது. இதன் காரணமாகத்தான் சிறுவர்களுக்குப் புண்கள் அதிகம் வருகின்றன.

அகிலா : சரி டாக்டர், புண்கள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு எப்படிப் பரவுகின்றன என்பதையும் எனக்குச் சொல்லுங்களேன்.

நான் : சொல்கிறேன், கேள். புண்ணிலிருந்து வெளியேறும் சீழ் உடம்பில் மற்ற இடங்களில் படும் போது புண்கள் பரவுகின்றன. அது போல் புண் உள்ளவர்களுடன் நெருங்கிப்பழகும் போதும், அவர்கள் உபயோகித்த ஆடைகளை மற்றவர்கள் பயன்படுத்தும் போதும் பாக்டீரியாக் கிருமிகள் மற்றவர்களின் உடம்பில் தொற்றிக் கொண்டு அவர்களுக்கும் புண்கள் உண்டாக்கி விடுகிறது.

அகிலா : புண். வந்து விட்டால் என்ன செய்யவேண்டும், டாக்டர்?

நான் : ஒருவருக்குப் புண் வந்தவுடன் முதலில் அதைச் சுத்தப்படுத்த வேண்டும். வெது வெதுப்பான நீரில் சிறிது உப்பையோ, அல்லது சோப்பையோ கரைத்து, அதைக் கொண்டு





புண்களை நன்றாகக் கழுவ வேண்டும். டெட்டால், ஸ்பிரிட் போன்ற மருந்துகளினாலும் புண்களைத் துடைத்துச் சுத்தப்படுத்தலாம். தினமும் ஒரு முறையாவது புண்களைச் சுத்தப்படுத்தி மருத்துவர் ஆலோசனையின் பேரில் 'ஆண்டிபயாடிக்' எனப்படும் கிருமிக்கொல்லி களிம்புகளைப் புண்களின் மேல் தடவிச் சுத்தமான துணியால் கட்ட வேண்டும். இதன் மூலம் புண்களின் மேல் ஈக்கள் மொய்ப்பதைத் தவிர்ப்பதோடு புண்களில் வடியும் சீழ் உடம்பில் மற்ற இடங்களில் படுவதையும் தவிர்க்கலாம் அல்லவா? புண்கள் உள்ளவர்கள் பொதுவாகச் செய்யும் தவறு என்ன தெரியுமா? புண்களைச் சொறிந்து விடுவார்கள். இதன் மூலம் புண்கள் பெரிதாகிவிடும். அதே சமயம் புண்களில் இருக்கும் கிருமிகள் நகங்களுக்குள் புகுந்து கொண்டு மற்ற இடங்களுக்கும் புண்கள் பரவுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே புண்கள் உள்ளவர்கள் கண்டிப்பாகப் புண்களைச் சொறியக் கூடாது. புண்களை ஆரம்பத்திலேயே கவனித்து மேற்சொன்ன மாதிரி மருந்துகளைத் தடவி விட்டால் ஒரு வாரத்தில் குணமாகி விடும். ஆனால் தும்பை விட்டு விட்டு, வாலைப் பிடிக்கும் கதை போலச் சிலர் புண்களை அதிகமாகப் பரவ விட்டுவிடுவார்கள். பின்பு மருந்து, மாத்திரை ஊசி மூலமே குணப்படுத்தக்கூடிய அவசியம் ஏற்படும். இது அவசியமில்லை அல்லவா?

அகிலா : உண்மைதான் டாக்டர்! புண்கள் நமக்கு வராமல் இருக்க என்ன செய்யவேண்டும் என்பதையும் சொல்லுங்களேன்.

நான் : அவசியம் சொல்கிறேன், அகிலா. உன்னை மாதிரிச் சிறுவர், சிறுமிகள் சுத்தத்தின் அவசியத்தை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். தினமும் காலை, மாலை இரு வேளைகளிலும் சோப்பு போட்டு நன்றாகக் குளிக்க வேண்டும். சாப்பிடும் முன்பு கை விரல்களை நன்கு கழுவ வேண்டும். அசுத்தமான இடங்களில் விளையாடுவதைத் தவிர்க்க வேண்டும். புண் உள்ளவர்களுடன் சிறிது காலத்திற்கு நெருங்கிப் பழகக் கூடாது. அவர்கள் உபயோகித்த துணிமணிகளையும், ஆடை ஆபரணங்களையும் மற்றவர்கள் உபயோகிக்கக் கூடாது. புண் உள்ள குழந்தைகளை வீட்டில் மற்றவர்களுடன் சேர்த்து படுக்க வைக்காமல் தனியாகப் படுக்க வைக்க வேண்டும். வீட்டில் அனைவருக்குமே ஒரே சீப்பு, ஒரே சோப்பு, ஒரே துண்டு என்றில்லாமல் தனித்தனி சோப்பு, தனித்தனி துண்டு உபயோகிக்க வேண்டும். உடம்பைச் சுத்தமாக வைத்திருப்பதோடு, தினமும் சத்துள்ள உணவுகளை உட்கொண்டால் நம் உடம்பில் 'நோய் எதிர்ப்பாற்றல்' அதிகமாகும். இதன் மூலம் புண்கள் வருவதைத் தவிர்க்கலாம்.

அகிலா : நன்றி, டாக்டர். நீங்கள் சொன்னபடியே சுத்தத்தையும், சுகாதாரத்தையும் கடைப்பிடித்தால் எவருக்கும் புண்கள் வராது என்று புரிந்து கொண்டேன், டாக்டர். இதை என் தோழியிடத்திலும் சொல்வேன் டாக்டர்.

நான் : நல்லது, அகிலா! குட் பை.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157, 434190.
ஆறுமாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால் ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—



REGISTERED No. TN MS (S) 381
Registered as a Newspaper in Sri Lanka

குட்னஸ் அளிக்கும் அருமை அன்பளிப்புகள் !



நீங்கள், குட்னஸ் வன விலங்கு ஸ்டாம்புகளைச் சேர்க்கத் துவங்கி விட்டீர்களா? இதுவரை இல்லை யென்றால், இப்போதே சேகரிக்க ஆரம்பியுங்கள். இப்போது ஒவ்வொரு குட்னஸ்சுவையூட்டிய பால்பேக்குடன் ஒரு இலவச வனவிலங்கு ஸ்டாம்பு வருகிறது. நீங்கள் சேர்க்கும் ஸ்டாம்புகளின் எண்ணிக்கை வளர வளர உங்களுக்கு நல்ல நல்ல பரிசுப்பொருள்களும் கிடைக்கும். ஸ்போர்ட்ஸ் தொப்பிகள், I.Q. டெஸ்ட்டர், குவார்ட்ஸ் கைக்கடிகாரங்கள் போன்று பலப்பல!



	நினைவிருக்கட்டும்
I	27 ஸ்டாம்ப் : 1 ஆவின் குட்னஸ் ஸ்டாம்ப் ஆல்பம் 54 ஸ்டாம்ப் : 1 I.Q. டெஸ்ட்டர் 81 ஸ்டாம்ப் : ஒரு ஜியோமெட்ரி பாக்ஸ் அல்லது ஒரு ஸ்போர்ட்ஸ் தொப்பி அல்லது உலக வனவிலங்கு வாழ்த்து மடல்கள் (Greeting Cards) 108 ஸ்டாம்ப் : 1 எலெக்ட்ரானிக் குவார்ட்ஸ் கைக்கடிகாரம்
II	இலவசப் பரிசுகளைப் பெற, கீழ்க்கண்ட இடங்களில் ஏதேனும் ஒன்றில் எங்கள் அலுவலர்களிடம் நீங்கள் சேகரித்த ஸ்டாம்புகளைக் காட்டினால் போதும். ஆவின் — மில்க் பார்லர்கள், மண்டல அலுவலகங்கள், மொத்த விற்பனையாளர்கள், ஐஸ்-கிரீம் விற்பனை நிலையங்கள் மற்றும் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள்
III	இந்த வாய்ப்பு அக்டோபர் 15 வரை

ஆவின்
குட்னஸ்
சுவையூட்டிய பால்

இந்த திட்டம் குறிப்பிட்ட நகரங்களில் மட்டுமே.

DIPR/1513/MS/89-HTA